ஔவைத்திருநாள் 400

LC
N35
118109

உ

பராம்பதி துணை.

12 JUL 1935

பதினெண்சித்தர் நூல்களிற்சிறந்த

மறைப்புக்கெல்லாம்

திறவுகோலாகிய

அகத்தியர்

# கௌமதி நூல் 400.

மதுரை வித்வான்

த. குப்புசாமி நாயுடு அவர்களால்

பரிசோதிக்கப்பெற்று

மதுரை, புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ராம. குருசாமிக்கோனார் சன்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசிவீதி குருசாமிக்கோனார் தெரு

ஸ்ரீராமச்சந்திரவிலாசம் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை 1935 ரூ 1-0-0

*Registered Copy Right.*

ரா. ராமனுஜம்
செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட
பிப்ரவரி
மாதம் வருடம் 84

செப்பனிட்டு முடித்த
பிப்ரவரி
மாதம் வருடம் 84

ஆராய்ச்சி அதிகாரியின்
கையொப்பம்

1809
615 ID

N35

பரமபதிதுணை.

பதினெண் சித்தர் நூல்களிலுள்ள மறைப்புக்கெல்லாந்

திறவுகோலாகிய

அகத்தியர்

# கௌமதி நூல் 400.

காப்பு.

சிவகுருபாதமது போற்றி நாளும்
தெரிந்தெடுத்துப் பதினெண்பேர் மறைத்தல்யாவும்
தவம்பெறவே கௌமதிநூல் பாடல்நானூறில்
சாற்றினேன் வைத்தியங்கள் யோகம்ஞானம்
நவமதுவாம் லோகமுறை நீத்தல்வாதம்
நாடினேன் சரிகைமுதல் கிரிகைமார்க்கம்
பவமாவே யின்னூலில் கைதமுன்னென்றில்
பாடினேன் கணபதிதான் காப்புத்தானே. (1)

குட்டத்துக்கு மருந்து.

குட்டமொடு பதினெட்டுச் சர்வநோய்க்கும்
குடியோட்டுந் தகர்தின்டாப் பானைதன்னை
திட்டமுடன் கொண்டுவந்து சாபம்நீக்கி
துதிக்கை விநாயகர்க்குப் பூசைசெய்து
கட்டமதா யொருசாம மரைத்துவாங்கிக்
காரெள்ளி னெண்ணெயிலே பதுதானொன்று
விட்டதிலே சிறுதேங்கா யளவுபோட்டு
மெழுகுபத மாகநீ வடித்துக்கொள்ளே. (2)

வடித்ததொரு கைலத்தின் போக்குக்கேளு
மகோதரங்கள் ரத்தசயம் குறைநோயெல்லாம்
வெடித்ததொரு கிரந்தியரை யாப்புப்புத்து
மேகத்தால் விளைபுகின்ற கடிப்புப்பத்து
அடித்துவிடு மூவமையிது அரன்மேலாணை
அப்பனே யிந்நூலை வெளிவிடாதே
குடித்தபின்பு ரசம்புளியை மாற்றும்போது
குணமாகும் நாற்பதுநாள் தன்னிற்பாரே. (3)

பாரப்பா கௌமதிநூல் மார்க்கந்தன்னை
பார்தனிலே குட்டநோய் புண்கண்டோர்க்கு
நேரப்பா யிருபதுநாள் பதினாலாக
நீயுமிதை அந்திசந்தி கொள்வாயாகில்
காரப்பா கைவெளிநீர் கிக்கிச்சேர்த்து
கருதியே கொண்டிடவே புளியுப்பாச்சு
டேப்பா நீர்சூட்ச மறிந்து நீயும்
கொண்டிடுவாய் வியாதியெல்லாங் குணமதாச்சே. ()

ஆச்சப்பா குட்டமென்ன செய்யுமார்க்கம்
அப்பனே கௌமதிநூ லாயுள்தீர்க்கம்
நீச்சப்பா பலநூலும் பார்த்தபேர்க்கு
நீயறிந்தா லிதுவுமொரு வோட்டமாச்சு
மாச்சலப்பா ஒன்றுமில்லை இந்நூல்பார்த்து
மருந்துசெய்தால் வியாதியிறு மெமறுமென்ன
சூட்சமப்பா யின்னமொன்று விபரமாகச்
சொல்லுகிறே னுற்றபொருள் சூலைநோய்க்கே. (5)

சூலைக்கு.

சூலைநோய் சர்வதுக்குஞ் சாந்தமாக
சொல்லுவோம் ராசாளி யிலைதானொச்சி
நீலமடைப் பாளைவேப்பிலை மடக்கிச்சாறு
நேர்சமனாய் நாலுவகைப் படிகாலாக
காலமே யொருபோது உண்பாயாகில்
கர்மவினை யால்விளைந்த மூட்குச்சூலை
ஓலமெனப் பறந்தோடும் அரன்மேலாணை
உரைத்திட்டோம் கௌமதிநூ லுண்மைதானே. ()



அண்ட வாய்வுக்கு.

உண்மைதா னின்னமொன்று முருங்கைச்சாற்றில்
உத்தமனே மனம்வெறுத்த பிலுப்பைக்கட்டி
வுண்மைகெட அக்கினியி லெரியப்போட்டு
மைந்தனே தீய்ப்பிடித்த சமையம்பார்த்து
கண்மைபோல் முன்சொன்ன இலைநீர்விட்டு
கடுகவே அரைத்துருட்டிக் கழற்சிக்காய்தான்
வெண்மையுள்ள செந்தவிட்டுல் பிட்டிக்கொண்டு
விடையன்மே லாணையுண்மை விபரங்கேளே. (7)

கேளப்பா யின்னூல்போ லொருநூலில்லை
கெட்டிகெட்டி கெட்டிசோர் விவாவிரோதி
பாளப்பா மூன்றுநா ளாறுபோதில்
பறப்பதற்குச் சமையமென்ன சொல்லப்போறேன்
ஆளப்பா நிற்குளாய்ப் பறக்கும்பாரு
சூட்சமிது அண்டத்தின் வாய்விறைடு
மீளப்பா யிப்படியே குடிகெட்டோடும்
விரட்டிவிடு மயன்விதியும் விலகிப்போச்சே. (8)

போச்சப்பா ரசம்புளியை மாற்றும்போது
பொருக்காட்டால் கைவெளிநீர் பாகங்கூட்டு
வாச்சுதப்பா வயித்தியற்கு யின்னூல்மார்க்கம்
மைந்தனே அண்டவாய் வெல்லாம்போச்சு
காச்சுதப்பா யிந்தமுறை யரன்மேலாணை
கண்கெட்டோ ரிதையறிந்து பார்க்கமாட்டார்
தீச்சுட்ட பஞ்சதுபோற் குடிகெட்டோடத்
தீர்க்கமப்பா யின்னூலின் செயல்கள்தானே. (9)

விஷத்திற்கு.

தாறுனை பழந்தின்னிப் பாளைச்சாராய்ச்
சாற்றினார் முன்னோர்கள் பதினெண்பேர்கள்
ஆறுவு நாமுனக்கு வெளியாய்ச்சொன்னோம்
அப்பனே வேப்பம்புண் ணாக்குவாங்கி
காறுக மருந்திருது கள்ளிப்பட்டை
கலந்ததொரு மேல்தொலியி லிடைதான்ரெண்டு
நீறுகங் காஞ்சுரைக் கனியின்வித்தை
தேய்வத்து குளித்தயில மிறக்குவாயே. (10)

இறக்குதற்கு இன்னமொரு வகைதான்கேளு
என்மகனே புண்ணுக்கு ஒட்டிசெட்டி
திறக்கவே திருகுகள்ளிப் பட்டைபோட்டு
திமுட்டிக் குளிதாழி தன்னிற்போட்டு
விறக்கமது போகாமல் கவசம்பூசு
வெத்தவுடன் குளித்தயிலம் விளம்பக்கேளு
சிறக்கவே சேராடித் தூளில்பொத்து
திக்குளியை நாடாமல் கலசம்வையே. (11)

வைத்ததொரு கலசத்தின் தயிலம்வாங்கி
மைந்தனே திராசிலிட்டுக் கணியின்வித்து
ஒத்திடவே நிறுத்திடு பெண்டுஞ்சேர்த்து
உத்தமனே காஞ்சிரங் குச்சிகொண்டு
மத்திப்பாய் பழையசட்டி தன்னிற்போட்டு
வகையதுதா னென்னசொல்வேன் செகத்துள்ளோ
சித்தியா குப்படிக்கு வெளியாய்ச்சொன்னேம் [ர்க்கு
சிவனாணை யிதையறிந்து தெளிந்துகொள்ளே. (12)

கொள்ளுதற்கு நெய்வடித்துத் தாம்பூரத்தால்
குழல்சிமிள்தான் செய்தடைத்துக் கொண்டுநீயும்
விள்ளுதற்குப் புத்திமுறை விளம்பக்கேளு
வியாதியுற்ற பேர்கள்வந்து விளம்பினுக்கால்
தள்ளுதள்ளு யெனவுரை நீ வெளிவிடாதே
சற்குருவா யிருந்துகொண்டு தாசர்க்கெல்லாம்
எள்ளளவு அணுவளவு பாதரட்சைக்
கிய்ந்துநீ சலத்தனிலே சுத்திசெய்யே. (13)

செய்யப்பா அடக்கமதாய்ச் செய்துகொண்டு
செகந்தனிலே வியாதியுற்ற பேர்கட்கெல்லாம்
வைடப்பா பிரம்புநுனி தன்னில்நீயும்
வையகத்தி லிந்தமுறை வழக்கமானால்
வெய்யவனு முனைவணங்கித் தாசனாவான்
வியாதியுற்றா லவன்தனக்குக் கையில்சற்றே
வெய்யமற அணுவளவு அடக்கம்பண்ணி
அப்பனே அரசனுக்குஞ் சலத்திலூட்டே. (14)



ஊட்டப்பா யிப்படிநீ வித்தைமதமாக
உத்தமனே விஷமான மானபேர்க்கு
இட்டப்பா பிரம்புகொண்டு முதுகிலேதான்
இட்டியபின் மடித்தஉடன் திரைதான்கட்டி.
மாட்டப்பா அவன்சிரசு தன்னிலேதான்
மைந்தனே மருந்துதொட்டு சிரசில்வைநீ
மூட்டப்பா உறங்கியெழுந் திருந்தான்போல
ஓடியே யெழுந்திருப்பா னூரஞ்செய்வானே. (15)

ஊரஞ்செய்வா னிங்குவந்த வகையேதென்பான்
உத்தமனே விஷமான மானமார்க்கம்
பரமொன்று மறியாமல் மயானந்தன்னில்
படுத்திருந்த மாய்கையென்ன பலரேயென்பான்
திறஞ்சென்ற சித்தனை வெளிவிடாதே
சிவதவத்தால் திருப்பிவிட்டோ மெனவுஞ்சொல்லு
அறந்தழைக்கத் தையல்யின்னோர்க் கடக்கமாக
அருளினேங் கௌமதிநூ லறிந்துபாரே. (16)

வசியம்

பாரப்பா யிந்தமுறை மையைநீயும்
பார்தனிலே கீரைவித்து தன்னில்பூசி
சேரப்பா உரம்போட்டு விரைத்துநீயும்
தெளிவான கொக்கிறகை நடுவேநாட்டு
நீரப்பா நல்வசல மடைத்துப்பாரோர்
நாழிகையில் முளைத்தெழுந்து கீரையாச்சு
தேரப்பா கொக்கிறகு கருக்கலாச்சு
தேகமதில் நரைதிரைதான் தியங்கிப்போச்சே. (17)

போச்சுதப்பா மூன்றுநா ளாறுபோதில்
போனதொரு கொக்கிறகை யெடுத்துக்கொண்டு
வாச்சுதப்பா உந்தனுக்கோர் வசியமார்க்கம்
மைந்தனே மங்கையர்கள் வலக்கால்மண்ணை
நீச்சுட்டாப் போலெடுத்துக் குழலுக்குள்ளே
சீக்கிரத்தி லடைத்திடுவாய் திருமின்மாதே
பேச்சுண்டோ யென்னசொல்வேன் உனைக்கண்டோர்கள்
பிடித்திருப்பா ருன்னுயிரைப் பேணிக்கொள்ளே.()

கொள்ளுவா யின்னூலின் மார்க்கந்தன்னை
கோவேந்த ருனக்குநிகர் பெரியோரில்லை
விள்ளுவா யிந்தமுறை யெவர்க்கானாலும்
வெளிவிட்டா லுனதுசிரம் கொய்துமீள்வாய்
தள்ளுவா யடங்கோபம் ரெண்டும்நீக்கி
சம்புசிவ ஞானமுறை சத்தியமாகி
முள்ளுவா பூசிமுனை தொட்டுமையை
நோய்களுற்ற பேர்க்குமுன்போல் நோக்குவாயே. ()

நோக்குவா யித்தமுறை மாந்தரீகம்
நோக்குதற்கு யோகாட்ச மகிமைபோல
தாக்குவாய் பாதரட்சை குறட்டிற்கையில்
சஞ்சரித்தா லாயுதத்தில் பிரம்பில்பின்னும்
போக்குவா யெந்தஅவும் தத்தில்நீயும்
போக்கியதைச் சலத்தனிலே கரைத்துப்போடு
நீக்குவா யிவனுடைய கர்மநோயை
நிவர்த்திசெய்ய மயமுடைய வியனீர்கேளே. (20)

வியமுடைய தேனதனை நாய்ப்பாலென்று
விடையமிட அறியாதான் பலநூல்பார்த்து
சயமுடைய கொடியோர்க்கு மருந்துசெய்து
தனம்பறித்துச் சாத்திரத்தை பொய்யென்பார்கள்
மையிதனை யறிந்தவர்க ளுலகிலில்லை
மைந்தனே நீயறிந்தா லடக்கிக்கொள்ளு
அயனரிமால் மும்மூர்த்தி யரன்மேலாணை
அப்பனே சயநோவுக் கறிவிப்பேனே. (21)

### சயத்திற்குச்சூரணம்.

சயரோகஞ் சருவதுக்கு மருந்துகேளு
சாரமுள்ள கடுக்காய்தான் களஞ்சிநாலு
நயமுடைய திப்பிலிசித் தரத்தைநோய்
நலமான வால்மிளகு ரெட்டிதான்சேரு
செயமுடைய சாதிக்காய் களஞ்சிமூன்று
சேர்த்தப்பா வருத்துநீ தூள்தான்செய்து
வியமுடைய தேனதிலே யருந்தும்போது
விமலன்மே லாணையுண்மை விரட்டும்பாரே. (22)



விரட்டுமடா சயரோகம் ரத்தமேகம்
மேல்கனப்பு ஊதுகா மாலைசோகை
வரட்டுமடா அஸ்திசுரம் யிளைப்புக்காந்தல்
வாந்தியொடு ழுருந்திடு அண்டவாய்வு
பிரட்டுமடா குடல்வாய்வு சூலவாய்வு
பெருமேகங் கிராணிதச நோவுசேர
முரட்டுமடா யின்னூலை வெளிவிடாதே
மூலத்தா ராணையுண்மை மொழிகிறேனே. (23)

மொழிகிறேன் தகாமது விருச்சமான
முரட்டுமர மானகரு வேலாதன்னில்
அழுகியே வழிந்தொழுகும் பிசினைவாங்கி
அரிமால்தன் அக்கினிப்பை துருசுகூட்டி
குளியகனி யாமேதை பனம்பழமாமென்று
கூறினார் முன்னோர்கள் கனியைக்கேளு
கனியதொரு யெலுமிச்சம் பழமாமிந்தக்
கருவதனை நாம்வெளியாய் வகைசொன்னோமே. ()

### கண் மாத்திரை.

சொன்னதொரு முன்மருந்து ரெண்டுஞ்சேர்த்துச்
திராசினிலே நேர்சமனாய் நிறுத்துக்கொண்டு
கன்னலெனு மெலுமிச்சம் பழச்சார்விட்டு
கடுகவே யொருசாம மரைத்துக்கூட்டி
வன்னமணி போலாகக் கயறதிட்டி
மைந்தனே படரவியி லடாவைத்து
சொன்னபடி யின்னமுநீ கேட்பாயாகில்
அராகிருத நார்மரப்பால் செயநீர்தேடே. (25)

தேடப்பா நார்மரப்பால் மூலைப்பால்தேடித்
தேடியதோர் பாலதனில் மூலைப்பால்கிரி
ஆடப்பா பத்தொன்ப தாறுநோய்க்கும்
அப்பனே காசமெல்லா மறுமேநாசஞ்
கூடப்பா யிதுபோலே வேறொன்றில்லை
சுருக்காக யின்னமொன்று சொல்லக்கேளு
ஓடப்பா கண்ணூடிச் சலத்தைவாங்கி
ஒளியிருளின் படலமருந் தோடுங்காசே. (26)

காசநோய் சர்வத்துக்கு மருந்துகேளு
கன்றுடிச் சலமதனைப் பஞ்சில்தாக்கி
தேசமுள்ள சந்திரனுக் கிவாயப்பா
தேசமுள்ள கோப்பைதனில் சலமங்கூறும்
வாசமுள்ள சவாதுபனை விடையுஞ்சேர்த்து
வாங்கிவிடு நேத்திரத்தின் வியாதிக்கெல்லாம்
நாசமதாய்ப் பறந்தோடும் அரன்மேலாணை
நாட்டிலின்றா லொருவருக்கு மீயொணாதே. (27)

ஒண்ணான அயனாணை திருமாலாணை
உத்தமனே யின்னூலை வெளிவிடாதே
கண்ணான நோவதுதான் தொண்ணூற்றாறில்
காசநோய் தீராத தென்றனுக்கும்
விண்ணான மானதொரு கிரணச்செயநீர்
விடையமிடக் கிட்டாட்டால் குளிகைமார்க்கம்
பண்ணுக நாம்வெளியாய் நன்றாய்ச்சொல்வோம்
படியறிந்து நோவுகளைக் குணமாய்த்திரே. (28)

பிளவை நோய்க்கு

தீராத மூளைக்கிரந்தி யிரப்பிளவையப்பா
தீர்க்கவென்றால் கடுக்காயை வெந்நீர்விட்டு
சாராக அரைத்துருட்டிச் சாமைச்சோற்றில்
சாப்பிடவே மூன்றுநா ளானபோதில்
வேராகத் தூரத்து அப்பாலேடு
விழுந்துவிடுங் கடுக்காயி லேழுநீயும்
நேராக அரைத்துருட்டிக் கொள்வாயாகில்
நிவர்த்தியப்பா ரசம்புளியை மாத்துவாயே. (29)

மாத்திடவே ஆறுநாள் தன்னில்பாரு
மைந்தனே யோண்டத் தயிலமூழ்கு
சூத்திரமாங் கடுக்காயின் குணத்தைக்கேளு
சொல்லென்றால் கற்பமதின் முதலேயாகும்
நேத்திரம்போற் சொல்லிவிட்டே னின்னூல்தன்னில்
நேர்மையாய்த் தெளிந்துகொள்ளு யோகஞானம்
ஆத்திரமா யின்னூலை வெளிவிடாதே
அகத்தியர்நூல் கௌமதியி னருமைபாரே. (30)



பாரப்பா மூலிவகை தொண்ணூற்றாறு
பாசாணக் கட்டுவகை யிரெட்டாகும்
ஆரப்பா அறிந்தவர்கள் ஒருவரில்லை
அப்பனே அருணகிரி வெளியாய்ச்சொன்னான்
நேரப்பா யிதற்கிணையாய்ப் போகநாதன்
நிச்சயித்துச் சொல்லிவிட்டா ரொருநூல்தன்னை
வீரப்பா வழலைவித்து நாதமார்க்கம்
வெண்டிரைநீர் மும்மதத்தின் பனியினீரே. (31)

நீரான சத்துப்பு பனிநீர்வித்து
நீயறிந்து அக்கினிப்பைக் கீவாயாகில்
நேரான கயிலாசச் செயநீர்தன்னை
நீயுமிழ்ந்து அணுவளவு கொடுத்துப்பாரு
வேரான பூனீர்போல் வெண்மையாகும்
வேண்டியதைப் பச்சிலையில் சத்தில்லாத
ஆரான வல்லுவதில் கொடுக்கும்போதில்
அத்தியிலை விராலியிலை கணக்கச்சாரே. (32)

நரைதிரைமாற்ற.

சாரான முப்பூவின் வழலைதன்னை
தனித்துநீ அணுவளவு உமிழ்நீர்தொட்டு
நேராக முன்னுரைத்த விதைமைக்கிட்டு
நீ நிலத்தில் கீரைவித்தில் தடவிக்கொண்டு
சீராக முன்னுரைத்த படிநீபாகம்
சித்தியா மதையறிந்து தெரிந்துகொண்டால்
பாராளும் வேந்தருனக் கெதிரோவப்பா
பரமசிவ னாணையுண்மை பகர்ந்திட்டோமே. (33)

பகர்ந்திட்டோ மின்னமொன்று வெகுவாய்ச்சொல்வோம்
பார்தனிலே மும்மதத்தின் செயநீர்தன்னை
அகர்ந்திட்ட மாகவே யடக்கிக்கொண்டு
அப்பனே பனிநீரில் வாசகிவித்தத
நிகர்த்திட்ட மானதொரு கண்டினீரை
நீயறிந்து எடுத்துமுதல் செயநீர்தன்னில்
முகர்ந்திட்ட முப்பூவின் வழலைதொட்டு
முக்கியமா யுரம்போட்டு நிலத்திற்பாவே. (34)

பாவி நீ செலமிறைத்து மூன்றுநாளும்
பார்தனிலே புழுக்கையெனும் பெரும்பொருக்கு
யேவிவிட மற்படிக்குக் கார்ப்பாயாகில்
என்மகனே நாதாக்கள் செல்லமாட்டார்
ஆவிதனை யடக்கியவ செறும்புபோல
அப்பனே வந்தரிப்பா ரதை நீகண்டு
தாவிவிடு சுடுகாட்டுச் சாம்பல்தன்னை
தாவியபின் முளைக்கமட்டுங் காத்துங்கொள்ளே. (

கொள்ளப்பா யித்தமுறை கைவிடாதே
கொடுமைசெய்வார் பதினெண்பேர் திருட்டுரெய்ப
உள்ளதப்பா நாமுனக்கு வெளியாச்சொன்னோம்
உத்தமனே நாதாக்கள் தெரிந்துகொண்டு
கள்ளமப்பா யித்தொழிலின் கொடுமைதன்னை
காரணத்தை என்னசொல்வே னுலகத்தோர்க்கு
தள்ளப்பா முன்சொன்ன வயித்தியமெல்லாம்
சஞ்சாரி நீ யிந்தமுறை தனக்குத்தானே. (36)

தானமிரு வாசுகியாங் கீரைதன்னை
தனைந்தருத்து லவணமிட்டுப் பாகம்பண்ணி
தினென்ற மதுரமுறை பாகமாகச்
செய்து நீ யன்னமதி லூட்டிக்கூட்டி.
ஏனென்று நீகேட்பாய் தேகந்தன்னை
இளகியதோர் நரைதிரையுங் கருத்துப்போச்சு
வானென்ற ஆகாசந் தன்னைக்காண
மைந்தனே பரமவெளியுந் தெரியலாச்சே. (37)

ஆச்சுதப்பா யிந்தமுறை கைகண்டாச்சு
அப்பனே நரைதிரையும் வாங்கிப்போச்சு
பேச்சப்பா என்னசொல்வேன் தந்தம்வீழ்ந்தால்
பின்னுமது படிமுளைக்கும் பிறந்ததேகம்
வாச்சப்பா ஆதியந்த வகையைமாறி
மைந்தனே தேகமது யிறுகிப்போச்சு
சாச்சுதப்பா மூன்றுபோ துண்டுபாரு
சம்புசிவ னாணையினால் சாற்றினேனே. (38)



ஒன்றான யின்னூலை உண்மையாக
உரைத்துவிட்டோ மாயிரத்தி லிருநூறுமார்க்கம்
பன்னான கருமறைத்தல் யோகஞானம்
பார்தனிலே வாதவித்தை வசியமார்க்கம்
நன்றாக நாலிலொன்றாய் வெளியதாக
நாமுரைத்தோம் நீயறிந்து நயந்துகொண்டு
விண்ணான மாயிதை நீ வெளிவிடாமல்
விடையன்மே லானையுண்மை விரும்புவாயே (39)

சூலைக்கு.

வாயென்ற வாகையிலை தன்னைவாங்கி
மைந்தனே தனிச்சாறு பிழிந்துகொண்டு
மாயென்ற ஏரண்டயெண்ணெய்தனில்
மைந்தனே சரிசமனாய்ப் படிதானாக்கி
சீயென்ற வரோசிகத்தை விட்டுநீக்கி
தினசரி நீ அந்திசந்தி மூன்றுபோது
தாயென்ற வேப்பெண்ணெய் பாசாங்கந்
தனித்துமென்றும் நேசமாய் கலக்கிக்கொள்ளே ()

கொள்ளுதற்கு யின்னமொரு வகைதான்கேளு
கூறினேன் மூவாகையிலைச் சார்வேப்பெண்ணெய்
விள்ளுதற்கு யிந்தமுறை இதில்வேறில்லை
விதவிதமாய்ப் படியிதில் முடக்குச்சூலை
துள்ளுண்டே ஓடுமடா விக்கந்தாக்கம்
துண்டித்துச் சிதறிவிடும் ஒருபோதுண்ணு
தள்ளிவிடு ரசப்புளியை நீதானப்பா
சஞ்சரிக்க வாகாட்டால் செயநீர்கூட்டே. (41)

கூட்டப்பா மும்மதத்தின் செயநீர்தன்னை
கூறியது கருமறைத்தல் தெரியாவிட்டால்
மூட்டப்பா உப்பிலாச் சாதம் நீயும்
மூன்றுநாளதுபோ நிந்தப்போக்கு
மாட்டப்பா சாரெண்ணெய் ரெண்டுஞ்சேர்த்து
மைந்தனே அயன்விதியும் விலகிப்போச்சு
ஊட்டப்பா யிப்படி நீ சூலைநோய்க்கு
ஆறுக்கும் வெளியாக்குமா யிதத்தின்போக்கே (42)

போக்கியபின் னாண்டத் தயிலமூழ்கு
பூலோகத்தொருவருக்கும் வெளிவிடாதே
பாக்கியமா யின்னூலைப் பதனம்பண்ணு
பார்தனிலே வயித்தியத்துக் கின்னூல்தன்னில்
யோக்கியமா யிதற்கிணையாய் வேறொன்றில்லை
உத்தமனே கண்காணக் கொடுப்பாயாகில்
சாக்கியமுஞ் சாட்சரத்தைப் பொடித்துப்போட்டு
தாம்பூர பற்பமென்று தாக்கிடாயே (43)

சாத்துதற்கு யென்னசொல்வேன் மகாராஜாக்கள்
தனக்குவந்தா லிப்படி நீ செய்வாயாகில்
தோத்திரத்தை யறிந்துகொண்டா லுண்மையாகக்
கொள்ளவுமே மாட்டார்கள் கோபஞ்செய்வார்
மாத்திரமே யென்றுசொல்வார் முழுமூடர்க்கு
மைந்தனே துய்யபஞ்சாட் சரத்தைநீயும்
நீத்தினமாஞ் சொர்ணபற்ப மென்றுபோடு
நீநிலத்தில் விஷமறுக்கும் விஷமதாச்சே. (49)

விஷத்துக்கு

விஷவித்தை கைகண்ட தொருபோக்கப்பா
வெளுத்ததலை கெருடநகம் விழிசிரசுமூஞ்சி
நிசவித்தை கிரியுட னுறட்டிப்பல்லு
நேத்திரத்தின் விழிதலையின் மூளைநாக்கு
வசவித்தை கொடிக்கள்ளிப் பாலாலாட்டு
மைந்தனே யெருக்கம்பால் சரியாயூட்டு
அசனத்தில் தயிருஞ்சோ றருந்தியாட்டு
அப்பனே குண்டுமணி யளவுகூட்டே. (45)

கூட்டப்பா குண்டுமணி யளவுதாக்க
கொடியதொரு வல்விஷத்தின் குணத்துக்கெல்லாம்
நாட்டப்பா ஆண்பெண்மார் சிறுநீர்தன்னில்
நலமான மாத்திரையில் பாதியிட்டு
பூட்டப்பா மூன்றுபோ தளவுமட்டும்
பிரியாமல் சீவன்சுழியில் சிக்கிநிற்கும்
மாட்டப்பா விஷமான மானபேர்க்கு
மைந்தனே ரகசியத்தில் மருந்தையூட்டே. (46)



ஊட்டப்பா யிம்மருந்தை உமிழ்நீர்கொட்டு
உத்தமனே செப்புமிசை வைத்திறவே
ஊட்டப்பா யிரையளவு பூட்டிப்பாரு
உறங்கியவ னெழுந்திருந் தவன்போலாவான்
சாட்டப்பா சிவகிருபை யென்றேசொல்லு
தாரணியிற் சிவனுனை வெளிவிடாதே
நாட்டப்பா பிரமவிதி தட்டிநீயும்
நடப்பதற்கு யிந்தமுறை நாம்சொன்னேமே. (47)

சொன்னவகை யின்னமொரு விபரங்கேளு
தோஷையர்க ளெவரேனும் விஷத்தில் மாண்டால்
அன்னாதி அவன்மேனிதன்னில் நீயும்
அடித்தப்பா ரவன்மேனி தடிக்குமப்பா
முன்னேசொன்ன வகைசிலகை முறைநான்மெத்த
உத்தமனே திரைக்குள்டக் குலகத்தோர்கள்
பின்னமன்றிப் பேசாமல் மனம்வேகாமல்
பிதற்றாம லெழும்பிவிட்டுப் பின்னுங்கேளே. (48)

பின்னுங்கே ளிக்கருவை வெளிவிடாதே
பிரபலமாய்க் கற்பமட மாதருண்டு
தன்னுள்ள குடத்துயிரை மாய்த்துக்கொள்வார்
சண்டாளத் தத்துவமாய்த் தவிப்பாய்பாரு
முன்னுரைத்த வகைப்படியே மறைத்தல்செய்து
முக்கியமாய் நீயெழுப்பு தலங்கள்சேர
பண்ணுதமிழ் கௌமதிநூ லின்னூல்தன்னை
பார்தனிலே யொருவருக்கும் பகரொண்ணாதே. ()

அரையாப்புக்கு.

பகரொண்ணா தின்னமொரு வகைதான்கேளு
பார்தனிலே ஆமையரை யாப்புக்கேதான்
தகர்கின்றப் பாலைதனைக் கொண்டுவந்து
சற்குருவா மூப்பூவின் வழிலைதொட்டு
நிகரதன்று யாசிலைபோ லவித்துமேலே
நீயரைத்துப் பூசிடப்பா ஆப்பின்போக்கு
புகலொண்ணா திவ்வசன முறையின்போக்கு
புகலுதற்கு வழிலையது கிட்டிடாதே. (50)

கிட்டாத அரும்பொருள்தான் முப்புஉப்பு
கிட்டினால் அந்தனுக்கு நோயுந்தோற்கும்
அட்டிசெய்யு மெமனாறுக மாட்டானப்பா
அரிகிதனா லனுமான மார்க்கஞ்செய்வான்
கெட்டிகெட்டி யின்னூல்போ லொருநூலில்லை
கிடைத்தவர்கள் சிவகிருபை படைத்தாராகும்
கட்டிதிர ளரையாப்பு புரைபுத்தெல்லாம்
கரைப்பதுவு மிதுவுமல்லா லதினங்கேளே. (51)

அதினமப்பா பனங்கொட்டை தண்டிக்காலாம்
ஆப்புஅரை யாப்புப்புண் மேகக்கூட்டம்
பதினெமெனுஞ் சாரப்பா போடல்வீக்கம்
படுஞ்சுளுக்கு கொளுக்கட்டை முட்டான்தோரு
விதனமப்பா அரணைவலி பரிக்கால்வீக்கம்
வெளுமையுள்ள பள்ளப்பு கோழிமுட்டை
புதினமப்பா மனமான புணைத்திறற்றம்
பேரான பதினெட்டுக் குட்டமாப்பே. (52)

ஆப்பான மேகமரை யாப்புக்கேதான்
அப்பனே அமுரிச்சார் சிறுநீர்விட்டு
வாப்பான குரோதிவியின் சுணைப்புவார்த்து
வழுத்துகிறேன் புளிச்சியிலை தன்னைவாங்கி
சாப்பாய்நீ யொருபடி நீர் அமுரிச்சாற்றில்
தாக்கிடுவாய் முன்சொன்ன யிலைநீரப்பா
பேய்போச்சு பலம்பத்து அவியலாகப்
புட்டவிய லாயவித்துப் பொருக்கக்கட்டே. (53)

கட்டப்பா பொருபொருக்கக் கட்டிநீயும்
கட்டிமறு போதவிழ்த்துப் பார்க்கும்போது
சட்டப்பா ரொன்றுமில்லை தெரித்துப்போச்சு
தாரணியி லிதுவிட்டா லொன்றுமில்லை
வட்டப்பா கிரணப்பரை யாப்புக்கட்டு
மாரியடித் தொடுக்கிவிக்கும் வாளதாச்சு
சொட்டப்பா புட்டவிய லிலையென்பார்கள்
தூஷணிப்பா ளாப்புகளைத் தூத்தும்வானே. (54)



வாளான மேகஅரை யாப்புப்பாழாம்
மைந்தனே யிதையறிந்தால் ரோகம்பாழாம்
ஆனாகு மென்னசொல்வேன் அமுரிச்சாற்றில்
சூட்சமது உரையார்கள் சிறுநீரென்று
பாளாகு யாப்புரா சாளிவஸ்து
பறக்குமப்பா யிதையறிந்து பாகஞ்செய்யில்
கோளான புளிச்சியிலை யனுப்பானத்தில்
குடியோட்டுங் கௌமதிநூல் கூறினேனே. (55)

கூறினே மரையாப்பு பதினெண்நோய்க்கும்
குவலயத்திற் கருவறிய மாட்டான்மாடு
தேறியிதை யறியார்கள் பலநூல்பார்த்துத்
தெரியார்கள் கருமறைத்தல் கண்கெட்டோர்கள்
நீறியதோர் பற்பமுறை கற்பமுன்னை
நிச்சயிப்பார் கண்ணவிந்த கழுதைமாந்தர்
தூறியதோர் மருத்துவம்போல் கழுகுகட்டித்
திரிவார்கள் வைத்தியர்கள் சென்னயாரே. (56)

பேரான வயித்தியர்கள் பலநூல்பார்த்துப்
போதிய மாட்டார்கள் முப்புவுப்பு
ஆராலுங் கூடாது பதினெண்பேர்கள்
அந்தரங்க மாயுரைத்தேன் நாதமென்பார்
நேராக நாமுனக்கு வெளியாய்ச்சொன்னோம்
நீயறிந்து யிந்நூலை யடக்கிக்கொள்ளு
நிராத நோவேது எதிர்நில்லாது
நிதகற்று மதனகா மியநெய்கேளு. (57)

மதனகாமிய நெய்.

மதனகா மியவகையி நெய்யைக்கேளு
மைந்தனே செவ்விளநீர் தோடுபோக்கி
பதனமது சாதிக்காய் சிரகத்தைத்தாக்கி
பசுவின்பால் படிவிட்டுப் புட்டவியலாக்கி
விதனமது போகாமல் சட்டிமூடி
மேல்கவச மண்பூசி யெரியிட்டேதான்
எதனமது வாகயிரு நான்குவாரம்
எடுத்துலர்த்தி வைத்தபின்பு பாகங்கேளே. (58)

கேளப்பா கொடுப்பைச்சா றெட்டிசேர்த்து
கெடிரவியில் வைத்துலர்த்தி வெங்கிரகாயம்
தூளப்பா செய்துகொண்டு நறுநெய்விட்டு
தித்திப்புக் கினிசீனி சரியாய்ச்சேர்த்து
நாளப்பா படராவியில் வைத்து நீயும்
நாட்டியே மண்டலங்கால் சென்றபாரு
வேளப்பா மன்மதவேள் பதங்கமாச்சு
விளம்பக்கே ளதிலுமொரு விசையுண்டாச்சு. (59)

அதிமதுரச் செயநீர்

விசைமிச்ச மான அதி மதுரந்தன்னை
வேண்டியளவைத் துலாம்வாங்கி மிடாவிற்போட்டு
பசையறவே யிடித்திடுவாய் சலந்தானப்பா
படியொன்று பலமொன்று சரிநீர்சேரு
விசையறவே நீயெரித்துக் கவசம்பூசி
வேகமது போகாம லடக்கிக்கொண்டு
நசையறவே நயிலமது மருதுவாசம்
நாடும்போ ததையறிந்து எடுத்துப்பாரே. (60)

எடுத்துப்பா ரதிமதுரச் செயநீராச்சு
என்மகனே திரிதிரித்துத் துவைத்து நீயும்
கொடுத்துப்பார் விளக்கிலே பிடித்துக்கொள்ளும்
குவலயத்தி லிதையறிந்தோ ரெவர்தானப்பா
அடுத்தடுத்து உனைவணங்கி யிந்நூல்கேட்பார்
அரனுமை யவர்க்கின்றா லீயொண்ணாது
விடுத்துமுறை முன்பதங்கந் தனக்குநீயும்
விடையறிந் ததிமதுரச் செயநீர்சேரே. (61)

தாதுபுஷ்டிக்கு

சேரப்பா முன்சொன்ன பதங்கந்தன்னில்
சேர்த்துநீ கண்டக்கா யளவுகொள்ளு
ஆரப்பா உனக்கீடு சொல்லப்போறேன்
அப்பனே உன்றேகம் அழகுண்டாச்சு
வீரப்பா மதுரவீ ரென்ன சொல்வேன்
வீரியமாய்த் தாதுபுஷ்டி வித்தையாச்சு
காரப்பா யிந்நூலைக் கார்த்துக்கொண்டு
கருதிநீ மண்டலத்தா ளுண்டுதேரே. (62)



உண்டுபார் தாதுபுஷ்டி வர்த்தமானம்
உலகமதில் கௌமதியில் வெளியாய்ச்சொன்னேன்
தொண்டுபண்ணி யிந்நூலைக் கிரகிப்பார்கள்
சிவனுனை உமையாளை திருமாலானை
கண்டுகொள்ளும் படிக்குநீ வெளிவிடாதே
கருமறைத்த அந்தரங்கம் பின்னேசொல்வோம்
விண்டுவிட்டோ மீரெட்டுக் கலைகள்சேர
விரும்புவா யிந்தமுறை மதவேள் நீயே. (63)

நீயப்பா திங்குகண்ட வஸ்துகாரம்
நீயெடுத்து லேகியத்தி லனுவத்தான்சேரு
காயப்பா வகைதுகையும் வெளியாய்ச்சொல்வோம்
கண்டுகொள்ளு வாதமுறை தன்னில்தேர்த்து
ஆயப்பா அதையறிந்து எடுத்துவந்து
அனுப்பானஞ் சேர்த்திடுவாய் ரூபமாயம்
தாயப்பா யிந்நூல்தான் வயித்தியர்க்கு
தாரணியி லறிவுபெறச் சாற்றினேமே. (64)

சாற்றுகின்ற வகைப்படிக்கு வேள்பதங்கந்
தனையெடுத்து மதனமுறை சரியதாகச்
சேர்த்துநீ பின்னுரைக்குந் திங்குசேர்த்து
தெளிவுகண்டு மண்டலமே சரியாய்க்கொள்ளு
மாத்திரமே யல்லாது வேறொன்றில்லை
மதனகா மியவகையின் பதங்கந்தின்று
பார்த்தவுட னழுதசவுந் தரியமாச்சு
பார்தனிலே அயன்விதியும் விலகிப்போச்சே. (65)

போச்சப்பா அழகுமதன் நாணிப்போனன்
பூவுலகில் கண்டோர்கள் தியங்கிப்போனார்
மாச்சப்பா உன்றேகம் காணுமந்தி
மதிமயங்கி விதிகுலைந்து மருகிப்போனார்
காச்சப்பா யிப்படியே மதவேள்சத்து
கண்டோர்க ளுன்மேலே பாசமாக
பாச்சப்பா மன்மதவேள் திரேககாந்தி
பலித்ததிது வாமெனவே பாலிப்பாயே. (66)

பிரசவத்திற்கு

பாலிப்பா யென்னசொல்லப் போறேனப்பா
பார்தனிலே யிளைத்ததொரு தேகமெல்லாம்
ஆலிப்பார் போற்கனக அழகுண்டாகும்
அப்பனே யென்னசொல்வே னுனதுதேகம்
சோலிப்போக் கொன்றுமில்லை மறைவுமில்லை
சிவனாணை உமையாணை திருமாலாணை
சூலிகளா மங்கையர்கள் வாதைப்பட்டால்
சுண்ணமயம் போலிலையிற் தடவுவாயே. (67)

தடவுவாய் வெத்திலையில் மதவேன்பாணந்
தையல்மின்னார் சிசுவினால் வாதைப்பட்டால்
கடவுள்தஞ்சை யருந்திசன் லயியாற்கொல்ல
கடாட்சமுற்ற தவவிதிய மிதனாலேதான்
சடவுபெற அழுத்திவிட்டு ஒடிப்போச்சு
தையல்மின்னா ரிம்மருந்து கொண்டபோது
விடவும்விடா மற்படிக்கு யீவாயாகில்
மெல்லிநல்லாள் குழந்தைபெற்று சுகிவாழ்வாள்.()

கருதவொண்ணா தபாக்குக் கடையிற்காந்தம்
கண்டறிந்து மனோசிலையும் புருவின்முட்டை
இருதமப்பா புன்தேகந் தனிலுண்டாச்சு
கூர்த்துபா ரதமட்டை யட்டைதன்னை
மிருதமப்பா மனோசிலையி நாசிவாசி
மித்திரத்தை யறியாதான் சத்துமூன்றும்
விருதமப்பா செவிமெழுகு யெடுக்கமாட்டான்
விருதாவி லுயிர்வதைத்துப் பழிசெய்வானே. (69)

பழிசெய்ய வோவுனக்குப் பதினெண்பேரும்
பாடினார் முன்னூலின் கருவின்மார்க்கம்
வெளிசெய்ய அறியாமல் பலநூல்பார்த்து
விருதாவாய் கர்மதி லுழையவேண்டாம்
வழிசையோ கந்திநின்ற மதனவாளின்
மைந்தனே நூலின்முறை வழக்கந்தன்னை
களிசெய்யும் படிமுறைநாம் வெளியாய்ச்சொன்னோம்
கருத்துகந்து யிதையறிந்து அடக்கிக்கொள்ளே. ()



அடக்குவா யிந்நூலை வெளிவிடாதே
அப்பனே ஆயிரத்தி யிருநூறுதன்னில்
நடக்குமுறை சர்வசித்தும் வெளியாய்ப்பாடி
நாதாக்கள் நூல்தோறும் ஒளித்துப்போட்டார்
விடக்குமுறை யென்றுசெய்வான் பிணத்தைத்தேடி
விருதாவில் தயிலமுறை வடிப்போமென்று
திடக்கிடா தென்றுநினை யாமல்துஷ்டர்
தேடிமன மலைந்துலைந்து திரியலாச்சே. (71)

ஆச்சப்பா கைகண்ட நூலிதாச்சு
அப்பனே அந்தரங்கம் வெளியதாச்சு
மாச்சலப்பா ஒன்றுமில்லை மதனவாளின்
மைந்தனே தேகசித்தி யோகசித்தி
சூச்சமப்பா நான்சொன்ன படியேமுப்பு
செய்திடுவாய் சகலசித்துங் கைகண்டாச்சு
வாய்ச்சமர்த்தி லொன்றுமில்லை செய்துபார்த்தால்
மைந்தனே நூல்முறையை வழியாய்க்கேளே. (72)

கேளப்பா சதுரமா னதிலேசேர்ந்த
கிருதமப்பா நானூற்று நாற்பத்தெண்ணேய்
பாளப்பா கௌமதி னூலாலேநாசம்
பரசிவ ஞானயுண்மை பகரொண்ணாது
வாளப்பா யிந்நூலைச் செகத்தில்வைத்து
மைந்தனே வயித்தியசித் தாதியாக
ஆளப்பா யென்னசொல்வேன் யோகிக்காச்சு
அப்பனே யிதுபார்க்கி லறிவுண்டாச்சே. (73)

வாய்வுக்கு.

ஆச்சப்பா யென்னசொல்வே னின்னங்கேளு
அப்பனே ஆவின்பால் படிகால்வாங்கி
காச்சப்பா சுத்தசலஞ் சரியாய்விட்டு
காய்ச்சுதற்கு வாயடக்கி யகோரிமூலம்
பேச்சப்பா யென்னசொல்வே னுலகந்தன்னில்
பேசுவார் வெள்ளுள்ளி யென்றுசொல்வார்
மாச்சலப்பா ஒன்றுமில்லை நெருப்புமூட்டி
மைந்தனே தீயெரித்து வாங்கிக்கொள்ளே. (74)

வாங்குதற்கு பின்னமொரு வகையைக்கேளு
மைந்தனே கடாவியுந் திவைவாங்கி
பாங்காவே பதத்தவைத்து யெரியிட்டேதான்
பாலில்விட்ட சலமறவே வற்றக்காய்ச்சி
திங்கென்ற வாய்வுநாற் றெட்டும்போச்சு
சிவனுனை உமையாளை திருமாலானை
ஏங்குவா ரின்னாலின் வகையைக்கண்டால்
என்மகனே பொய்யுரைக்கத் திகைத்திடாதே. (75)

திகைத்திருக்கப் பொப்பொட்டைத் தாயென்றென்று
தெருவில்வந்தால் பிரளிதனைக்குருவென்றென்று
பகைத்திருப்பா ரின்னாலே யீயாகிட்டால்
பகையறவே யிவனுடனே நயந்துகொள்ரு
நகைத்திருந்து எதித்தெழுந்த அரன்மேலானை
காட்டிலுன்னோர்க் கின்னாலே வெளிவிடாதே
தகைத்திருந்து அறுந்துவிழுந் திரணத்தினைச்
சாற்றினேம் பிரணவந்தீ யறிந்துகொள்ளே. (76)

கொள்ளப்பா யித்நாலே புண்மையாக
கொள்ளாட்டா லுண்டேகந் சர்வநாசம்
தள்ளப்பா முன்சொன்ன முறையைவிணைப்
தள்ளிவிடத் தகுதியுனக் குண்டேயாகில்
உள்ளப்பா வசமுனக்கு வெளியாய்ச்சொன்னேம்
உத்தமனே சுகசன்னி வகைக்குச்சொன்னேம்
விள்ளப்பா மாமரலி யெமன்வந்தாலும்
விதிவசத்தை மாற்றிவிடும் விபரங்கேளே. (77)

சுகசன்னிக்கு

வீபரம்பபா வெளியுரைத்தோங் கருமதோஷம்
விளைந்தவர்கள் கோடான கோடிபேர்கள்
கபரமப்பா மனமாய்கை யிருளை நீக்கிக்
கருதியதோர் தீபவொளி யறியாமூடர்
உபரமப்பா வைங்காய வகையின்சற்று
உரமறிய மாட்டார்க ளுலகத்தோர்கள்
அபரமப்பா மாரணத்தின் தருக்குமூலம்
தொகுப்பதுபின் சுகசன்னி வகையைக்கேளே. (78)



சுகசன்னி யாலறிவு கெட்டபேர்க்கு
சொல்லுவோம் வேறொன்று வொருபோக்கப்பா
திகதன்றி யாந்திருகு கள்ளிச்சோறு
நீர்வத்தா கரைத்துலா யெடுத்துவந்து
சுகமான தண்ணீருந் சட்டிக்குள்விட்டு
தாக்குவாய் தீயெரித்துச் சுட்டதானால்
சுகமிட்டுப் பார்க்கவே பொருக்கும்போது
நாடியே தாக்கிவைத்து வேதைபூத்தே. (79)

வைத்தப்பா சிரசதிலே வேதைநீதான்
உயிர்கொண்டு போகயெம னனுமாகா
காத்தப்பா மயில்விசிறி கொண்டே வீசு
கருத்ததொரு பல்லுகளும் விறியுந்தோம்
எத்தப்பா ராசியிலே சுண்டைவேர்த்தான்
எழுந்திருந்து வாய்புளப்பம் புலம்பலாவன்
மாத்தப்பா ஔசதத்தின் குணத்தினாலே
மைந்தனே மூலிகைச்சார் வழுத்துறேனே. (80)

வழுத்துகிறேன் கேள்பிலா விருச்சமான
மகாசன்னி முருங்கைவேர்ப் பட்டைசமூலம்
கொருந்துருகு மேனிச்சார் குப்பைமேனி
கொரேரியெனுந் தைவேளைச் சாறுகாங்கை
வெருத்தமுறை பதர்நீக்கி யிஞ்சிச்சாறு
வேண்டியே சேர்சமனாய் வகைதான்வீசம்
அழுத்துவாய் நாலுமொன்றாய்த் துவாலைபாதி
அப்பனே அயன்விதியும் விலகலாச்சே. (81)

ஆச்சப்பா வசப்புகழிக் காய்தான்கோட்டம்
அதிவிடையம் பச்சைமஞ்சு ளிவைதான்சேர
பூச்சப்பா காரியத் தகட்டிவ்நீயும்
பூசியமுன் னாயிரமுத்தி விடமதாக்க
வீச்சப்பா நினைத்ததொரு பொறைச்சுற்றி
விரையவே வரைந்தாதே ராகச்சேரு
போச்சப்பா உயிரதுதான் கோட்டைவிட்டு
போகுமுறை ரேகைவிதி புகலலாச்சே. (82)

ஆச்சப்பா கற்பமுறை யின்னுஞ்சொல்வேன்
அழியாம லிருப்பதற்கு யோகமார்க்கம்
நீச்சப்பா கூடமதிற் கெண்டி யாக்கி
நீனிலத்திற் சிவப்போக்கித் தவத்தைவாங்க
ஆச்சப்பா வென்றுமையம் நன்றாய்ச்சொன்னோம்
சொன்னாலின் னூல் முன்னூறாம் பாடல்தன்னில்
காச்சப்பா கைவளிநீ ரவியின்றியில்
காய்ச்சுதற்கு பாலைமதக் கருநீகேளே. (83)

மாலைமதங் காலைமதஞ் சோலைமதமூன்றாம்
வகையான பனியுப்பே முப்பூவாகும்
நீலமுகி லரியானுக் கிவையாகில்
நீத்தினத்தில் நீருவிட்ட வகைபோலாகும்
ஆலவிட முண்டசிவன் விடைதன்னுனை
அப்பனே யின்னூலை யார்க்குங்காட்டாய்
மூலபில மறிந்தவரா ருலகிலில்லை
முத்தவனைச் சேரவிந்த நாதங்கேட்பார். (84)

கேட்பார்கள் நாதவித்து முதற்சாதியென்பார்
கேடுகெட்ட பலபாடம் படித்துக்கொள்வார்
மீட்பார்கள் வீரமது பூரங்கூட்டி
மீனவெயில் படரவியில் வைத்துக்கொண்டு
நாட்பார்த்துக் கனிதமுறை செய்கைபார்த்து
ராசியென்று மதனநூல் சரியும்பார்ப்பார்
ஆட்பார்த்தா லவர்களுமே கழுதைமாடு
அப்பனே உத்தனுக்கு அருளக்கேளே. (85)

முப்பூ விபரம்.

கேளப்பா வழிலைதரு மார்க்கந்தன்னை
கெடுகெட்டான் மதிகெட்டா னுலகந்தன்னில்
மீளப்பா அரிவையர்கள் சூதநீரை
நிச்சயித்து வுணதனைச் செப்புக்கின்னம்
பாளப்பா அதைத்தேடி யதுக்குள்ளாக்கி
பலன்தேடிக் கர்மவினை யதனைத்தேடி
கூளப்பா ரெத்தமயக் கூழுபோலே
கொண்டுவரு வாலல்லால் மாலங்கேளே. (86)



மாலைமதஞ் சோலைமதங் காலைமதமூன்றாம்
வகையான பனியுப்பே கரியுப்பாகும்
வாலைமதம் வித்தனுவாங் கடலைதன்னை
வகைதெரிந்து நீர்படியி லொருபத்தியத்து
பாலைமத மாமரவியில் வைத்தாறப்பு
பரமவித்தை வாதமுறைக் குருவாமித்தை
வேலைமத உப்புமிரு அறத்துக்கொண்டு
வீதமது தவறாத மாயமிதே. (87)

மாலமதம் வித்ததிலே வினையும்பூச்சி
மைந்தனே அறிந்தவரா ருலகத்தில்லை
வாலமத வித்ததிலே பதரைநீக்கிப்
பகுத்தறிந்து தெரிந்திடவே புழுவொன்றுண்டு
ஆலமத வாதவித்தைக் குருவிதாச்சு
அப்பனே வெண்டிரை நீர் கட்டிதாச்சு
நீலமத வித்துமுதற் சரக்குக்கெல்லாம்
நீத்தினத்துக் கமெனவே நிகழ்த்தினோமே. (88)

நிகழ்த்தினே மிதையறிந்தால் வாங்கிவைத்து
நீனிலத்தில் விதைப்பனிநீர் தன்னைவாங்கி
யுகத்திலே யொருவருக்கும் வெளிவிடாமல்
உத்தமனே முன்சொன்ன புழுவைப்போடு
செகத்திலே வாதவித்தை கைகண்டாச்சு
சிவயோக மார்க்கமெல்லா மரியலாச்சு
அகத்திலே யிதையறிந்தா லடக்கிக்கொள்ளு
அப்பனே விதிமுறையின் படிநீபாரே. (89)

செய்பாகம்.

பாரப்பா முன்சொன்ன புழுவைப்போட்டு
பாருப்பு கல்லுப்பு இரண்டுமாச்சு
ஆரப்பா அறிந்தவர்கள் உலகத்தில்லை
அப்பனே வாதவித்தை பிரட்டிடான்றில்லை
நேரப்பா யின்னூல்போ லொருநூலில்லை
நீனிலத்தி லுத்தனுக்கோர் குருவுமில்லை
வேரப்பா ரிசிமூலங் கனகப்பூச்சி
விளம்பினேன் கல்வியய விபரந்தானே. (90)

தானென்ற ஆணுவத்தை விட்டுநீக்கு
தாரணியிற் றிக்குசென்ற கடலைப்பூச்சி
மானென்ற ரிமைதனு மாணும்போல
மைந்தனே ஒன்றுசேர்ந் திருக்கும்பாரு
நானென்றால் வெளியுரைத்தேன் போகநாதன்
நாடியிதைத் திக்குசென்று மறைத்துப்போட்டார்
பானென்ற மன்மதவேள் விந்துவாலே
வந்ததப்பா கடலைவித்தில் விகாரமாச்சே. (91)

விகாரமதுக் காருமுறை சொல்லக்கேளு
விடையமதை யறிந்தவரா ருலகத்தில்லை
வகாரமது செய்தவர்க்கு பிணாச்சல்பூச்சி
மைந்தனே எடுத்தவைந்து மதனச்செயனீர்
அகாரமதுக் கிப்திடவே யிரைந்தோர்நாள்
அப்பனே சென்றுபார் முப்பூவாச்சு
சகாரமது எட்டெட்டுச் சித்தாண்டாச்சு
சாற்றினேங் கௌமதிநூ லடக்கிடாயே. (92)

அடக்கப்பா யின்னூலை வெளிவிடாதே
அப்பனே மும்மதநீர் கட்டும்பூச்சி
முடக்கப்பா சருண்டிருக்குங் கிரணைப்போல
மூடியதோர் வல்லுவதை யெவர்தான் கண்பார்
நடக்குமப்பா அகமறிந்து செய்யும்போர்க்கு
நாட்டிலில்லை யின்னூல்போல் வெளியொன்றில்லை
படக்கப்பார்க் கடங்காது கிரணைமாய்கை
பார்த்தவுடன் வாதமுறை கைகண்டாச்சே. (93)

ஆச்சப்பா திங்கிஷத்தின் பூச்சியாலே
அப்பனே சலவிமய மதனச்செயனீர்
காச்சப்பா ரவியில்வைத்து உப்புண்டாச்சு
கண்டுகொண்டால் வாதமுறை கைகண்டாச்சு
பேச்சப்பா யேதுண்டு பீசன்பாதம்
பெறுவதற்கோ யிதுவுமொரு வெளியுமாச்சு
மாச்சலப்பா வொன்றுமில்லை முன்னுஞ்சொன்னேம்
மைந்தனே யின்னமொரு வகைதான்கேளே. (94)



கேளப்பா யிப்படிக்குச் செய்வாயாகில்
கெருவமென்ன சொல்வதுவு முலகத்தோர்க்கு
ஆளப்பா யின்னூலை வெளிவிடாதே
அப்பனே முப்பூவின் கற்பமார்க்கம்
தூளப்பா அணுவளவு உமிழ்நீர்தன்னில்
துரும்புகொண்டு தொட்டுநீ லோகங்காய்ச்சி
மீளப்பா பத்தரைமாத் தங்கமாகும்
விதிதெரிந்து மதியறிந்து மீண்டபாரே. (95)

கற்பமுறை.

பாரப்பா அணுவளவு கற்பங்கொண்டு
பார்தனிலே கடுகுநல் லெண்ணெய்நீக்கி
நேரப்பா நிதமுமிப் படியேநீயும்
நேர்சமனுக் கொண்டிடுவா யெமனுமென்ன
சாரப்பா உலகமதிற் சிவனுமென்ன
சார்ந்தவுடன் வருஷமொன்றிம் முறையேசெய்யில்
கூடரப்பா தேகமது கல்கடாச்சு
கொடியதொரு பிரமலபி தட்டலாச்சே. (96)

ஆச்சப்பா அயன்விதியைத் தட்டலாச்சு
அப்பனே மாலியமன் கணிதம்போச்சு
பேச்சப்பா என்னசொல்வே னின்னூல்தன்னில்
பெருபெற்ற கொங்கணவர் பெரியோர்முன்னாள்
ரூச்சப்பா வகமறிந்து கற்பமுண்டு
சிவகிருபை யைக்கண்டு மனத்தினாலே
ஏச்சப்பா விசைபெறவே கனமாயுண்டு
எப்போதுங் கல்லுருவாய் நிலைநின்றாரே. (97)

நிலைநின்றா ரப்படியே நீயுமுண்டு
நீநிலத்திற் கல்லுருவாய் நிலைநில்லாமல்
வலையறவே அணுவளவு கற்பமுண்டு
மைந்தனே வருஷமொன் றில் லபியைத்தட்டு
புலையரவே மனமாய்கை யிருளைத்தள்ளி
பூமிதனில் மும்மதப்பால் மதனப்பாலால்
குலைமரணஞ் செய்மாலி விதியைத்தள்ள
கொள்ளுவாய் கேதாரக் கல்லுதானே. (98)

தானென்ற கல்லுப்பு மதுபானத்தில்
தாக்குவா யாவின்பால் காந்தமேனி
கோனென்ற மாவேந்தர் யெவருங்கொள்வார்
கொண்டபின்பு திருமகளுங் குடியாய்நிற்பாள்
கூனென்ற அடம்பலகிரி ரெண்டும்நீக்கி
சிவனுனை உமையாளை திருமாலானை
தானென்ற ஆணுவத்தா லின்னூல்தன்னை
நாட்டில்விட்டா னுன்தேகம் நாசமாச்சே. (99)

மருந்து.

ஆச்சப்பா அந்தரங்கம் வெளியதாச்சு
அப்பனே கலைக்கோட்டான் தவசுமாச்சு
போச்சப்பா பொதுமாதரிடத்திற்சென்று
போக்கிவிட்டா பதிவிரத தீர்க்கயோகம்
பேச்சப்பா வதனாலே வசையுண்டாச்சு
என்மகனே ஆனதினா லவர்கட்காக
மாச்சலப்பா யாதொன்று மில்லாமற்றான்
மைந்தனே மருந்திது வகைசொன்னேனே (100)

சொன்னதொரு வகைப்படிக்கு மதனபானம்
செய்துகொண்டு வீட்டிமுறை தன்னைச்சேர்த்து
பின்னவையார் பொதுமாதரிடத்திற்சென்று
மீண்டவரத் தனம்பறித்துச் சேதம்நாதம்
என்னவென் றுந்தனக்குச் சொல்லப்போறேன்
என்மகனே யறந்தழைக்கும் பலவொன்றில்லை
சனமய மானதொரு சனகப்பூச்சி
சாற்றினே னரனுடைய சத்திதானே. (101)

சத்திசிவப் பூச்சி.

சத்திசிவத் திங்குசென்ற பினைச்சல்பூச்சி
சதாசிவமா மதையறிந்தோ ரெவர்தானப்பா
எத்திசையுந் திரிந்தாலு மிதுகிட்டாது
என்மகனே மும்மதத்தின் செயனீராலே
தந்திரமாய் ரிசிகற்பம் போலவாச்சு
தனையறிந்தால வாதமுறை கைகண்டாச்சு
மித்திரமாங் குருக்கிரணச் சத்துயார்க்கும்
மிச்சமப்பா பேச்போக்கு விபரங்கேனே. (102)



கேளப்பா கடலைதன்னில் விளையும்பூச்சி
கேதுரா வென்றும்பேர் பிரணத்துன்னே
பாளப்பா வானதொரு பதரைப்போக்கி
பார்த்திடவே சத்திசிவ மதிலுண்டாச்சு
கேளப்பா வேர்ப்பூச்சி யென்றுசொல்வார்
கூர்ந்துபார் கெருடாசுக மென்றவார்போல்
வாளப்பா மதனகா மியமெய்க்கிய
மைந்தனே மும்பூவின் வழியாச்சே. (103)

ஆச்சப்பா மும்பூவின் வழிதன்னை
அறியவென்றால் மும்மதத்தின் கடலைச்செயனீர்
காச்சப்பா கடர்கிரண வலிமின்தியில்
காய்ச்சுதற்குச் சத்துவகை பின்னேயாரு
மாச்சலப்பா ஒன்றுமில்லை மறைப்போமில்லை
மைந்தனே கற்பமுறை யுண்மையிந்நூல்
சூச்சப்பா அந்தரங்கம் வெளியாய்ச்சொன்னேன்
சுருக்கறிந்த வாதமுறை திங்குதானே (104)

திங்குசென்ற வேர்ப்பூச்சி கடலைசற்று
தெரிந்தெடுத்து வெண்டிரை நீர்க்கிவாயாகில்
கங்குலது பூவைதனிற் பாய்ந்தாற்போல்
கடுங்காரச் சாக்குயிர்க ளெல்லாங்கொல்லும்
எங்குமிதை யறிந்தவரா ருலகத்தில்லை
இதையறிந்தார் போக்கரக வெளியாய்ச்சொன்னார்
சொங்குபனி தாங்குகின்ற கடலைக்காயில்
சொர்ணமய மாப்பூச்சி கருண்டிரண்டாச்சே (105)

இரண்டான பூச்சிதனை யறிந்தபேர்கள்
இரவியறிவார் வாதமுறை பிரட்டொன்றில்லை
உண்டான பூச்சியது ஆண்பெண்ணாச்சு
உத்தமனே சத்திசிவ மதுவுமாச்சு
கண்டார்க ளுலகமதி லெவர்தானப்பா
காரணத்தி லரன்மயத்தை யறிந்துபாரு
விண்டாரோ ரிசிமூலம் பதினெண்பேர்கள்
விண்டுவிட்டேன் கௌமதிநூல் விபரந்தானே. ()

தானென்ற ஆணவத்தை விட்டுநீக்கி
தாரணியிற் கொடுவேலி யிலைபவாங்கி
நானென்ற கிருதமதின் திக்குகப்பு
நாடியே யணுவளவு கூட்டிச்சேர்த்து
நீனென்ற பவளம்வச்சிர மாவின்வெண்ணெய்
நீனிலத்தில் நவலோகந் தன்னிற்பூசி
மானென்ற மனோன்மணியும் மரன்மேலானை
மைந்தனே நாலெருவில் புடத்தைப்போடே. (107)

போடப்பா புடமதனை யாற்றிப்பாரு
பூனீர்போல் சாம்பல்தான் வெளுத்துநீரும்
சாட்டப்பா அணுவளவு முன்போல்நீயும்
சாடிவிடும் வியாதியது பேருதானிற்கும்
ஆடப்பா யிந்தவித்தை ஆவின்வெண்ணெய்
அப்பனே அதைவிட்டால் கடைந்ததேனில்
நாடப்பா முன்போலே உமிழ்நீர்தொட்டு
நாடிவிடு வயித்தியசித் தாகிநீயே (108)

சித்தாதி யானவர்க ளின்னூல்தன்னை
செகந்தனிலே யொருவருந்தாம் வெளிவிட்டார்கள்
எத்தாக உனைவணங்கி யேவலனாய்
இருந்துபணி விடைசெய்வா ருண்மையாக
பத்தாசை யாய்நினைத்து யீய்த்திடாதே
பரமசிவ னுமையின்னாம் பகரொண்ணாது
கர்த்தாவின் சத்தகிலே மூலாக்கமூலம்
கருதினோ மீரைந்தெழுத் திவ்வாறே. (109)

ஈரைந்தெழுத்து விபரம்.

ஈரைந்தெழுத்ததனைச் சேர்த்துப்பார்த்து
என்மகனே சிவன்வேம்பு குறண்டியாச்சு
ஆராய்ந்தா ரிம்மறைப்பு ரவியின்போக்கு
அறிந்திருந்தும் பதினெண்பேர் மறைத்துப்போட் [டார்
வாராய்ந்து இந்நூலில் வெளியதாக
மைந்தனே உந்தனுக்குச் சொல்லிப்போட்டேன்
கூறாய்ந்து உயிரெழுத்தை மூலிகையிற்றாக்கி
கொளுத்தியே யெரித்திடவே பூப்பூவாச்சே. (110)



ஆச்சப்பா பூப்பூவின் வழியையாச்சு
அப்பனே ரவிமறைத்தல் வெளியுமாச்சு
காச்சப்பா சிவமூப்பு ரவியின்றியில்
காய்ச்சியே யெழுமைநா ழிகையிலப்பா
வாச்சுதப்பா வழலைமுப்பு சவ்வீருப்பு
வாதமுறை தொட்டதொட்ட சித்துக்கெல்லாம்
சூச்சமப்பா முன்சொன்ன படிநீயச்
சொல்லவொண்ணா தாச்சரியஞ் சொர்ணமாச்சே. ()

சொர்ணமய மானயின்னா வுலகத்தோர்க்குச்
சொல்லினா லன்னேகஞ் சர்வநாசம்
வர்ணமணி பொற்சிவிகை யேறும்வேந்தர்
மானிடர்க ளிடத்தினிற்சென் றாலுமன்பாம்
நிர்ணயமா யெதுவேணு மீய்குவார்கள்
நீனிலத்தில் கடந்தவர்கள் கல்லூக்கொண்டு
காணமய மாறிநீ கற்போல்வீசி
கடாவுவார் கைவளிந்த பணியுப்பாலே. (112)

அறியாமுடர்.

பனியுப்புக் கொண்டுகரியுப்புக்கட்டப்
பாரினுள்ளோ ரறியாமல் பலநூல்பார்த்து
சனியுப்பு மூலிதலி குதத்துப்பு
தையல்மின்னார் சுரோணிதத்தில் விளையவைத்து
இனியப்புக் கண்டுகொண்டோ மெனவேயெண்ணி
யிருப்புகளுக் கீய்த்திடுவான் பலனென்றில்லை
கனியுப்புக் கடலதனில் விளையும்பூச்சி
கண்டவுடன் கௌமதிநூல் கைகண்டானே. (113)

கைகண்ட பெரியோர்க ளின்னூல்தன்னைக்
காட்டார்கள் நாரனுக்கு வெளியதாக
மெய்கண்ட திட்டாந்திர மகிமையெல்லாம்
மேதினியில் கௌமதியில் வெளியாய்ச் சொன்னோம்
பைகண்டோ ருலகிலறி யாமல்சற்றே
பதினெண்பே ரக்கினிப்பை யென்றுஞ்சொன்னார்
மைகண்ட யிருளறுத்துக் குருசுநீத்த
மைந்தனே அக்கினிப்பை வகைசொன்னோமே. ()

கல்லுப்பு விபரம்.

சொன்னவகை யென்னசொல்வேன் அருகநீத்த
சொல்லுமுறை யொருவருக்கும் வெளிவிடாதே
மன்னவர்கள் ராஜாக்கள் முதலாயுள்ள
மகவேத்த ரகுதியில்லை யனைத்துவார்கள்
இன்னபடி யென்றுமய துரைத்திடாதே
என்மகனே யில்லறத்தை வெறுத்தபேர்க்கு
சன்னமய மானதிந்த கருவின்பூர்த்தி
சாற்றுகிறேன் கல்லுப்புப் பனியிலுப்பே. (115)

பனியுப்பை நாதங்கள் பதினென்பேர்கள்
பாடினார் வழலையுப்பு முப்பூவென்று
தனியுப்பைக் கரியுப்பு உவருப்பென்று
தாரணியில் முன்னாளைப் பார்த்தபேர்கள்
கனியுப்பைச் சூதத்தின் இண்டாவுப்பை
கடுஞ்சாக்கில் கொடுத்தாதி யெங்கியெங்கி
இனியுப்பைத் தேடியின்ன மலைவார்கோடி
என்மகனே கொடிவேலி விலையைக்கேளே. (116)

கொடிவேலி கிரந்திநா யகருதன்னை
கொண்டுவந்து வன்னெய்நெய்களிரண்டுஞ்சேர்த்து
யிடுவாயே யாமமதில் வெவ்வேறாக
யென்மகனே பிரித்துவிடு மின்னங்கேளு
படிபாவி யென்றுரைப்பா ரிலந்தைபோல
பார்தனிலே முளைத்திருக்கும் பகம்பாலில்
நடுவாக யிதுபிழிந்து யெருமைப்பாலில்
நாடிவிடு வெவ்வேறாய்ப் பிரிக்கும்பாரே. (117)

காட்டுவிளா முறை.

பாரப்பா அப்படியே அந்தவிலைமார்க்கம்
பார்தனிலே முளைத்திருக்குந் தான்டிமுன்னாம்
நேரப்பா பெருமரம்போல் நிலையாய்நிற்கும்
நீயறிந்தால் நீத்துமுறை கைகொண்டாச்சு
ஆரப்பா யறிந்தவர்க ளின்னங்கேளு
அப்பனே விளாமரமா மூலகத்தோர்க்கு
வீரப்பா கொடியதொரு நீத்துக்கெல்லாம்
வீரடக்கும் படிபிரமன் விதித்தார்காணே. (118)



காணப்பா காட்டுவிளா தன்னை நீயும்
கண்டபின்பு நீற்றுமுறை கைகண்டாச்சு
வீணப்பா பலநாளும் பார்க்கவேண்டாம்
விரும்பியே சித்திசிவ யிருவர்தாமும்
நாணப்பா யிருவருமே நடனமாடி
நகைத்துமனஞ் சலித்தொருவர் மரத்தில்வந்து
ஆணப்பா அவரிருந்தார் அதனால் சற்று
அகற்றிவைத் தாரெனவே யறிந்துகொள்ளே (119)

அறிந்துகொள்ள இன்னமொரு வகைதான்சொல்வோம்
அப்பனே முப்பூவின் வழலையுப்பு
முறிந்ததப்பா சத்துயிர்க ளெல்லாஞ்சேர்த்து
முடிந்ததப்பா நாலெருவில் சாம்பலாக
எறிந்துவிடு பலநாளுங் கைக்கொள்ளாதே
என்மகனே கிரந்திநா யகரின் போக்கு
பிரிந்ததப்பா வேப்பெண்ணெய் நறுநெய்வேறாய்
பெலமறிந்து லோகமெல்லாம் நீத்திப்பாரே. (120)

நீத்துமுறைக் கிதுவிட்டால் வேறொன்றில்லை
நீனிலத்தி லறிந்தவர்பா ருலகிலில்லை
சுடத்துவரும் நீத்தினத்து விரோதியான
கொடியதொரு விளாவிலையி லரியால்வெள்ளை
சேத்துநீ யரைத்ததிலே புகைபோகாமல்
சொர்ணமுத லிரும்புவரை சேரப்பூசி
காத்ததுவை யனுசரிக்கப் புடத்தைப்போடக்
கார்லூணத்தை என்னசொல்வேன் கடிகைப்போதே()

கடிகையொரு தொடிநேரந் தன்னிற்பாரு
கருதியதோர் நீற்றுமுறை தன்னைச்சேரு
பிடிகையப்பா தாம்பூரச் சிமிழிற்சேரு
பூனிரில் தும்பைமலர் தோற்றுப்போகும்
துடிகையிது நீத்தினத்துக் கவதானத்தில்
சொன்னபடி முறைக்கெல்லாந் திங்குசேரு
அடிகையித்தப் படிவழலை சேர்த்துக்கொண்டு
அப்பனே திங்குசிங்கம் வங்கம்பாரே. (122)

வெகாது குலத்திலுயிர் வெதுதானிற்கும்
சிவநெறியைப் பற்றியும்வழி படிக்கிப்போடு
புகழ்நெய்பெதியான பண்ணைமுன்னைப்
புகட்டியே சேர்த்தரைத்து வேகவைத்து
அப்பரமன்ன செவியைப் பருத்துசெய்தாலும்
அப்பனே அதையறிந்து சொல்லிவிட்டு
பொக்கமதாய்ச் செவிநிறைந்து அறிவுண்டாக்க
புலவகிற் கபடதா டக்கதைக்கேளே. (123)

கேளப்பா இந்குருப்பு முடிப்பாகில்
கெருவமெல்லாம் விட்டுவிட்டு உலகத்தோர்கள்
ஆளப்பா யெவரா லடுமைப்பாங்காய்
அதுவசித்துக் கௌமதிநூ லடக்கிப்போடு
ஊனப்பா பிறவிகடன் சாபந்தீர்க்க
உற்றதொரு தேசையென்று தயிலத்தாலே
கோளப்பா செய்தகொரு கபடமேசன்
கூடாது கொல்லுமுறை இருப்புக்கூடே. (124)

அரியமந்தர்

இருப்புகருங் குரைவெண அறியாமாந்தர்
இவ்வுலகில் கோடான கோடிபேர்கள்
விருப்பியே வாதமுறை செய்வோமென்று
வீணுகி வினைவிந்து நாதந்தன்னை
அரும்பொருளா மென்றுமின்றா் சுரோணிதத்தை
பாமெனவே ரவியில்வைப்பா னறிவுகெட்டான்
கருப்புரசங் காப்பால் கண்டாலுமில்
கைகண்டான் வாதவித்தை மெய்கண்டானே. (125)

மெய்கண்ட இன்னமொரு வகைகைப்கேளு
மேதினியில் ரசவாதஞ் செய்வோமென்று
மைகண்ட இருடரைப்போல் பதினெண்பேர்கள்
மருவியே பாடினதோர் பலநூல்பார்த்து
மெய்கண்ட தென்றுசிலர் அமதாத
மென்றுமெரு வாதலைக் பலன்காணேனது
கைகண்ட தொன்றுமில்லை பப்புநாதம்
சார்த்துபார்த தேகமுனை முப்புவீயே. (126)



வழலை.

ஊயப்பா முப்புவின் வழலைமார்க்கம்
என்மகனே வெண்டிரைநீர் கடலைச்செயனீர்
சாயப்பா கருக்கத்தின் சிலைபோட்டு
சலவைவிட்ட பீங்கானில் வைத்துக்கொண்டு
ஆயப்பா செயனீர்முன் னிலையிற்சற்றே
அதையறிந்து புகைத்தெரித்து யெடுத்துப்போட்டு
காயப்பா ரவியில்வைத்து பிரைந்தோர்தான்
கண்டுபார் மணிமணியாய் வினைவுண்டாமே. (127)

ஆமப்பா அந்தவுப்பு செப்புகிலே
அப்பனே சரிகைவெள்ளி யதுபோதாது
நாமப்பா அந்தரங்கம் வெளியாய்ச்சொன்னோம்
நாதாக்க ளொருவருமப் படிச்சொல்லார்கள்
காமப்பால் மதனப்பால் முப்புவென்று
கண்டுகொள்ள அறியாதான் பலநூல்பார்த்து
ஆமப்பால் வழலையென்று சொல்வாய்யோ
அதுநீ பனியுப்புச் சூட்சப்பாரே. (128)

பாரப்பா யின்னூல்போ லொருநூலில்லை
பரமனெனும் அரன்பேரில் நிராதனை
நேரப்பா நினைந்துகொண்டு யின்னூல்தன்னை
நீநிலத்தி லொருவருக்கு மீயொன்றுது
ஆரப்பா யெவரேனு மறிவாருள்ளோர்
அறிந்தெடுத்து வருவதாதல் பனிசென்டாகில்
சாரப்பா அவனுடனே தேகமொன்றாய்
சார்ந்திடுவாய் கௌமதிநூ லீயொன்றுதே. (129)

ஈயவொன்று இந்நூலை யீவாயாகில்
என்மகனே செவ்வரின் இனத்தின்மேற்கே
தாயகமாய்க் கல்லதுபோ லுருள்காவென்று
சாற்றினே மப்படியே முன்போல்நீயும்
தேயமதா யுற்றவர்கட் கீந்தாயாகில்
நீநிலத்தி லப்படியே மாட்சையுற்று
பேய்திறம்போல் சோதுநலம் மாமாய்நின்று
பேசரியப் பாய்மைபாய் நினைத்திடுவாயே. (130)

நிலை நிற்கும் படியிதை நீ யுண்மையாக
நிட்சயித்துக் கௌமதி நூல் பதனைப்பண்ணு
சிலைமெய்க்கும் விழிமடவா ராசையாலே
சிந்தையற்று நிந்தைபெற மிவாயாகில்
வலைமெய்க்கும் மாமரலி சிட்சையாலே
வருத்தப்போல் நரலோகந் தன்னில் நீயும்
பலைமெய்க்கும் பொதுமாத ரிடத்திற்சிக்கி
பாதலிப்பா யென்று முன்னூல் மொழிந்திட்டோமே

மொழிந்திட்ட மாயிந்நூல் வணங்கிக்கேட்கும்
முழுமோச நிர்மூடர்க் கீயொண்ணாது
கழிந்திட்ட மாபாசர்க் கீய்ந்தாயாகில்
காரிகையாம் பொதுமாத ரிடத்திற்சிக்கி
கொளித்திட்ட மாகவுமே நேசமாகி
குடிகெடுக்க முன்னிட்டுக் குருவைச்சேரு
தளித்திட்ட மானபொருள் நாசமாக
நாட்டியமுன் வழிமுறை நயமுற்றோனே. (132)

கரியுப்புப் பற்பம்.

நயமுற்று மின்னமொன்று சொல்லக்கேளு
நாடுதனில் கரியுப்பில் கடுக்காய்ச்செய்னீர்
மயமுற்று அறுவளவு வழலைகட்டி
மைந்தனே அரைத்தெடுத்துப் புடத்தைப்போடு
வியமுற்றுப் பூனீர்போல் பற்பமாகும்
வெண்மையென்ன முசுட்டைமலர்க் கதிகமாச்சு
பயமற்று வங்கமதிற் கொடுத்துப்பாரு
பரமவெளி கண்டுதப்பா வயதிரெட்டே. (133)

எட்டாதே யொருவருக்கு மின்னூலப்பா.
எனைப்போலே போகனெறு நூலுஞ்சொன்னான்
முட்டாதே பலநூலும் பார்த்துப்பார்த்து
முறையறிய மாட்டாமல் மோசம்போகி
கிட்டாதே கருமறைத்தல் பதினெண்பேர்கள்
கிரணமெலாம் நூல்தோறு மறைத்துப்போட்டார்
திட்டாதே சாஸ்திரத்தை பொய்யேயென்று
சிவகிருபை செந்தூர வகைதான்கேளே. (134)



உப்பு செந்தூரம்.

தேனப்பா முன்றுரைத்த பற்பந்தன்னை
கெருவமதை மனமடக்கி வெளிவிடாமல்
ஆனப்பா அடக்கமதாய் வைத்துக்கொண்டு
அப்பனே அறுவளவுப்போர் பலத்துக்கொண்டு
நீனப்பா முன்சொன்ன கெந்தகம்விட்டு
நேராக விருநாற்றுக் கொன்றுகூட்டி
மானப்பா பத்தெருவிற் புடத்தைப்போடு
மைந்தனே முருக்கமலர் போலவாமே. (135)

ஆமப்பா வெள்ளிதனைக் கீய்ந்தாயாகில்
அப்பனே பத்தமாற் றதிகங்காணும்
சாமப்பா அனல்காணுச் சாக்குதிகெல்லாம்
சற்குருவாஞ் செந்தூர புற்பூதன்னை
நாமப்பா உரைத்துவிட்டோ மிருநூற்றுக்கு
நாடியதோ ரொன்றுமுறை தவறிடாமல்
காமப்பா இப்புமுறை வழலைதாதன்
கட்டியசெந் தூரமிது கனகமாமே. (136)

ஆமென்று நாமுரைத்தோம் போகநாதன்
அறிந்திருந்தும் ரிசிகளும் மறைத்துப்போட்டார்;
நாமின்று வெளியுரைத்தோம் கடலைப்பூச்சி
நாதாக்கள் பதினெண்பேர் நூல்கடோறும்
வேமென்று வேறெனவே மறைத்தார்பாவி
விந்துசிவ தம்பனத்துக் காருஞ்சித்து
தாமென்று கல்விமடந் செய்தபேர்க்கு
தகைப்பேது சிவமேது தகைத்திடாதே. (137)

தகைத்திட்ட இன்னமொரு வகைதான்கேளு
தாரணியில் மன்மதவேள் ராணிமூலம்
இகைத்திட்ட கிரிவளவு மிதுலப்பா
இறப்பார்த்தார் போர்பொருது செயித்தாரில்லை
வகைத்திட்ட மன்மதவேள் மூலவேரை
வாங்கிவர அறியார்கள் வசமற்றோர்கள்
பகைத்திட்ட பேர்களிட மரைமிக்கட்டி
பகலிரவு மல்பொரு பார்த்திடாயே. (138)

பார்த்திடவே மனமாய்கை ஆசையுற்று
பார்தனிலே உள்ளவர்கள் பலநூல்பார்த்து
சேர்த்திடவே மூலிகைதம் பணத்துக்கென்று
சீரழிந்தாருன்கெட்டார் தாமசத்தில்
கோர்த்திடவே குளிசமொன்று அரையிற்கட்டி
கொண்டமட்டுங் செய்தார்கள் குணமொன்றில்லை
வேர்த்திடவே மரியார்கள் வேறென்றெண்ணி
விளம்பினேர் பதினெண்பேர் விபரந்தானே. (139)

விந்துதம்பனம்.

விபரந்தா னென்னசொல்வேன் கல்விப்பூச்சி
விடையமதை யறிந்தவர்க ளுலகத்தில்லை
கபரந்தான் சூட்சமயங் கடலைச்சோங்கு
காய்தனிலே அவாரவழி ரெண்டுண்டாகும்
குபரந்தா னைதயெடுத்து விடுத்தாயாகில்
துடங்கியதோர் மூறைக்கிதுவே துறவுகோலாம்
உவரந்தா னெனில்வழலை மதனப்பால்நீர்
உவைவதற்குப் பதர்தள்ளி மாலாஞ்சேரே. (140)

சேரப்பா கல்வியென்ற பூச்சிசேர்த்து
செகந்தனிலே வழலையப்பு மூப்பூடிப்பின்
கூறப்பா காட்டெருதா விறையக்கெட்டி
குடந்தனிலே வசம்பரைத்த மாவைச்சேர்த்து
பாரப்பா குழிதனிலே போட்டுப்பாரு
பாபரத்தின் மகிழ்ச்சிபெறச் சமர்தாச்சு
தீரப்பா மண்மூடிப் புகைபோக்காமல்
தீர்த்தபின்பு மறுநாள்போய்த் திறந்துபாரே. (141)

திறந்துபார் சூடன்முறை யிதைப்போலில்லை
திறமறிவார் லோகமதி லொருவரில்லை
பிறந்ததப்பா நீக்குசென்ற பூச்சியாலே
பிறக்காத வஸ்துவெல்லாம் பிறக்கலாச்சு
இறந்துபோச் சிப்படியே சரக்குயிர்களெல்லாம்
இயம்பினேன் சூடன்முறைக் கிணையொன்றில்லை
அறந்துதிக்கும் வாதயிதுக் கெதுநேரப்பா
அப்பனே சிவாலயத்துக் களித்திடாயே. (142)



அளித்திடவே யாருந்திறைந்த திக்கவாசம்
அப்பனே சூடனதின் குணத்திநேரம்
தளித்திடவே ரசப்பானக் கூட்டுச்சேர்ப்பார்
ஒகோகோ திரூடர் பாவிப்போர்கள்
களித்திடவாய் பச்சாதி மாவைச்சேர்ப்பார்
கண்டறியார் கற்பூர வாசந்தன்னை
பளித்திடுவார் வேதைநிப் பிடியாபோசம்
பயனறியான் மயந்தெரியான் மாட்டேனென்பான்

வெள்ளி

பாவென்ற மதுபானந் தன்னிலேதான்
பாதான மூலிகையைப் போடுபோடு
ஆவென்ற லங்கிவிட்டுப் பாலதாச்சு
சுத்தவெள்ளைப் பாஷாணந் தன்னிலேதான்
மாவென்ற நாயகற்றி செயநீர்விட்டு
மைந்தனே இங்குசென்ற பூச்சிபோடு
நாவென்ற அந்தரங்கம் வெளியாய்ச்சொன்னேன்
நலமான கலிலைவெள்ளி கட்டலாச்சே. (144)

கைலைவெள்ளி மலைமலையாய்க் கட்டலாந்தீ
கண்டுகொண்டால் வங்கமதி லுமிழ்நீர்தொட்டு
தவிலமது போலுருக்கிக் கொண்டுநீயுந்
தாக்குவாய் பூசிபுனை தொட்டுநீட்டு
சவிலவென்றுர் மச்சமுனி கூறும்வாதந்
சாட்சியென்ன சற்குரு மப்புநாதம்
வெலியவே யென்னசொல்வே னியஞ்செம்பு
விரும்பினேன் சரிகைவெள்ளி விபரந்தானே (145)

விவரந்தா னென்னசொல்வே னின்னூல்தன்னில்
விடையமிட்ட கருக்கிடையை விரும்பிநீயும்
கவரமுற்று ஒன்றாடே ஒன்றுதள்ளி
கருங்யே தெளித்துபார் வெளியாய்த்தேன்றும்
அவரப்பா மூன்றெனமப் பாதிக்காயத்
அருவாசற் கெந்திய சரியான
படாமற்ற கடுக்காயின் கெருமப்போக்கு
உத்தமனே கற்பாதிக் காதிகேளே. (146)

கடுக்காய் கிஷாயம்.

ஆதிக்காய் மதற்கற்பங் கடுக்காய்தன்னை
அப்பனே பலம்பத்து யிடித்துநீயும்
சோதித்து பாற்கட்டி விரையைப்போக்கி
சூரணித்து ஒருதூணி நீரிற்போடு
வாதிக்கு மித்தமுறை கைக்கிட்டாது
வழியறிந்து நெருப்பெரித்துப் படியொன்றாக்கி
நீதிக்கும் பாண்டியதில் புகைபோகாமல்
நீயறிந்து தயிலமதை வடித்துக்கொள்ளே. (147)

வடித்ததொரு தயிலத்தின் வகைதான்கேள்புன்
வகையறிந்து கரியுப்பில் கொடுத்துக்கொண்டு
கடித்தமதா யரைத்திடவே வழலையுப்பில்
கடுகுநே ரவ்வளவு யெடுத்துக்கூட்டு
தொடுத்தவுடன் அதிசயம்போ லுண்டாகும்
தூரணிப்பார் கண்டவர்கள் திடுக்குண்டாகும்
யெடுத்ததனை வில்லைசெய்து கவசம்பூசி
என்மகனே ரவியில்வைத்து புடத்தைப்போடு(148)

புடம்போடு முருக்கமலர் போலதாகும்
பூவுலகி லிதையறிந்தா ரெவர்தானப்பா
அடம்பெரிதா யொருவருடன் வீண்பேசாதே
அப்பனே யின்னூலை வெளிவிடாதே
இடம்பெரிதாய் நவலோக முருக்கியே
என்மகனே கனகம்வய திரைத்தாகும்
விடம்பெரிதா மென்றதினை யின்னூல்மார்க்கம்
விதியறிந்து மதிதெரிந்து விரும்பிப்பாரே. (149)

பாரப்பா நான்சொன்ன முறைதப்பாமல்
பார்தனிலே யிந்நூலை வெளிவிடாதே
நேரப்பா யிதற்கிணைதான் ஒருநூலில்லை
நீர்முறை யந்தரங்க மறைப்பொன்றில்லை
தீரப்பா நோய்மிடியோர்க் கின்னூல்தன்னில்
அருசான அக்கினிப்பை குணத்தின்போக்கு
நீரப்பா வகமறிந்தோ ராருமில்லை
நீணிலத்தில் நவலோகம் நீற்றுவாயே. (150)



நவலோகம் ஒன்றதுமே சாம்பலாக
நன்மான அக்கினிப்பை அருசின்மார்க்கம்
வெம்மையா மருகுநூணி வழலையுப்பு
சித்தறிந்து கரியுப்புக் கிவையாகில்
உவமான மென்னசொல்வேன் தெளிவுண்டாக்கி
உலகமதில் வாதமெல்லாங் கைகண்டாச்சு
நவமேறுங் கன்னறுடிக் கருவுண்டாச்சு
நனதுருப்போ லினமினமாய்க் கருவுண்டாச்சே. (

ஆச்சப்பா மறைப்புகள் வெளியாய்ச்சொன்னேன்
அப்பனே எனைப்போலே யாருஞ்சொல்லார்
மாச்சலப்பா பலநூலும் பார்த்தாயாகில்
மைந்தனே போக்காக நாதத்தாலும்
ஆச்சப்பா அகமதுபோ லொருநூல்சொன்னார்
சூடிமா லகாச்செய நீர்தன்னை
பூச்சப்பா செம்புதல் செயனீர் நீற்றல்
பிரசபிக்க மூப்பூவை யுரிமால்கியே. (152)

சாயப்பா குருவழலை தன்னைவாங்கி
என்மகனே கயிலாசச் செயநீர்தொட்டு
தாயப்பா வைப்புமினை கொண்டுநீயும்
பாக்கிலைக்குச் சேருவது மயம்போலாச்சு
நாயப்பா நாய்போலே சுற்றேறிட்ட
நவமுற்றுச் சன்னமிட்டுத் திரிவாயாகில்
பேயப்பா வகம்நீயே பல்லாவ்வேறு
பித்தரில்லை நவலோகம் நீற்றக்கேளே. (153)

நவலோக நீற்றினத்தை யறிவாயாகில்
நாட்டியதோர் வயித்தியசித் தாதியாரு
சிவலோக முறைபார்க்கில் செவுனமார்க்கம்
சித்தறிந்தால் மாவியறி காரமேது
நவயோகம் பெற்றவருக் கின்னூல்கிட்டில்
தனித்தனியே அக்கினிப்பை முறையேகிட்டும்
பவலோகம் பெற்றதொரு யிரும்புநீற்றும்
பதுமரா சனிதிங்கள் மதிச்சாரகேளே. (154)

கனகவித்தை

திங்கள்மதிச் சாறுவிட்டுக் கடுக்காய்தன்னை
திருதிருத்தி அரைத்ததை நீ குகைதான்செய்து
வங்கநீர் உப்பதனைக் கவசம்பூசி
வாடிவுபெற ரவியில்வைத்து எடுத்துக்கொண்டு
பொங்கமுட னோர்சீலை மண்தான்செய்து
புகலாதே பத்தெருவிற் புடத்தைப்போடு
தங்கமயங் காண்பதற்குக் கனகவித்தை
தாய்போலே சௌமிநூல் சாற்றினேமே. (155)

சாற்றினேந் திங்கள்மதிச் சார்தானெத்தர்
சாஸ்திரத்தி லெவருரைத்தா ராருங்காணார்
மாத்ததுதா னிரைந்தோ ரரையுங்காணும்
மைந்தனே சிருசின்னி திங்கள்மதியாகும்
சூஸ்திரமாய்ச் சொல்லிவிட்டோம் வந்தபேர்க்கு
சுவர்கட்டிப் பெலன்கட்டுங் கடுக்காய்யார்க்கும்
கோத்திரத்தை யறிந்தவனே கிரணவித்தை
கொண்டுமுடிப் பானெனவே கூறலாமே. (156)

செந்தூரம்

கூறுவோர்ந் சிறுசின்னி யிலையின்சாறு
கொடுப்பதற்கு உமரிச்சார் விட்டுஆட்டு
பேருபெற முன்சொன்ன படிதப்பாமல்
பொதிந்துந் ரவியில்வைத்துப் புடத்தைப்போடு
சீருபெறக் கடுக்காயின் பரிட்சைபார்க்கச்
சீனிப்பயில் தனிக்கடுக்கா யதைத்துப்பூசு
வேருமா மாய்ப்போகுந் தித்திப்பாகும்
வேதைவித்தை வாதமுறை செந்தூரமாமே. (157)

செந்தூர மருத்துவத்தைச் சொல்லக்கேளு
செம்புருக விருப்புநவ லோகமெல்லாம்
வெந்தூரும் போததிலே வழலைசேர்த்து
வேதையிட்ட செந்தூரந் தன்னை நீயும்
கந்தூர மானகயி லாசச்செயனீர்
கருகியே அணுமுனையிற் தொட்டுநீட்டு
சிந்தூருங் கேதாரச் சலத்திலுள்ள
சிருமணல்போல் சூரியத்தின் கிரணமாச்சே (158)



திலதம்

சூரியன்தன் கிரணவொளி போலின்றாலே
சூச்சமிட்டுப் பார்க்கில்மயத் தோற்றமப்பா
காரியத்தா னறிந்தவர்க ளுலகிலில்லை
கண்டுகொண்டா லுனக்குநிகர் பெரியோரில்லை
பாரிசா நகமலரைத் தெரித்தாயானால்
பரித்துவந்து ரவியில்வைக்கக் கருயுண்டாகும்
சீரியதோர் மிருகமுதல் ஸ்திரிகள்வேந்தர்
சிஷமுற மதிராவிடி னிரிற்சேசே. (159)

சேர்த்தப்பா வதனமதிற் திலதம்போட்டு
சேகாமாய்த் தீயுவைத்து நின்றாயானால்
பார்த்தப்பா தேர்நிறுதில் துதிக்கவும்போர்கள்
பகையாளி யாகிடினும் மனம்வேறுக
வேர்த்தப்பா உடம்புமிக நடுங்கிப்பின்னும்
விதிமறந்து தசைசோர்ந்து நிற்பாயாரு
மாத்தப்பா கைலாசச் செயநீர்தொட்டு
மைந்தனே அவர்பிரிவார் மகிழ்ந்துபாரே. (160)

பாரப்பா என்னசொல்வேன் திலதப்போர்து
பாரிலுள்ள மாந்தர்கள் நீயெனக்காம்
வேரப்பா பிரிந்துபோச் சதனால் நீயும்
விரும்பியே மிடமறிந்து திலதமிட்டு
சேரப்பா தவசியர்கள் விரதமார்க்கம்
சித்தனிக்கும் பிரருக்கும் பகையாளிக்கும்
வீரப்பா யிப்படிநீ திலதமிட்டு
விரும்பியே தங்கமம்போல் வென்றிடாவே. (161)

வேண்டுமோ யிப்படி நீ செய்தாயானால்
விரும்பியுனை நாடுறுபாவ தோஷம்
பூண்டுமே நீதிமுறை தவறிடாமல்
பூதலத்தில் மௌனமா யிருந்துகொண்டு
ஆண்டுமே யின்றுமே வெளிவிடாதே
அப்பனே அந்தரங்கம் வெளியாய்ச்சொன்னேன்
தோண்டுவாய் புதைபொருள் அடக்கமாகத்
தேடிவந்த பொருள்களெல்லாஞ் சிலவிடாயே(162)

ஈயப்பா அயவீர பூரஞ்சாரம்
இளகியதோர் திமிளவெண் காரங்கெந்தம்
ஞாயப்பா கடுங்கார மனோசிலையும் லிங்கம்
தனியொன்றுக் கோர்களஞ்சி நிறுத்துச்சேர்த்து
மாயப்பா மேனைச்சார் பழச்சார்விட்டு
மைந்தனே கரியுப்புக் களஞ்சிதாது
தேயப்பா வழவுபெற அரைத்துக்கொண்டு
தேர்ந்துகலை புனைந்துக் குடத்திற்போடே. (163)

போடென்ற பாகமுறை பற்பந்தன்னைப்
பேரண்ட வெப்பெண்ணெய் தன்னில்நீயும்
கூடென்ற முறையிதனைச் சொல்லக்கேளு
குன்மமுதற் பெரும்பாடு அவாசியசேர
கூடென்ன பழந்தின்னிச் சாரெண்ணெய்க்குள்
கூட்சித்தோர நிதனிலைதான் இராசிலாடு
பாடென்ற சுவேடமுற்ற வியாதியோர்க்குப்
பார்தனிலே யிந்தமுறை தவறாதியே. (164)

ஈயப்பா என்னசொல்வேன் தேகந்தன்னில்
இருந்ததொரு வியாதியெல்லா மெங்கேபோச்சு
தாயப்பா யிந்தமுறை வயித்தியோர்க்கு
தந்தையென்றும் முப்பூவின் வழலையென்றும்
சீயப்பா பலநூலும் வெளியேபோட்டு
சேரதித்து வழிதெரிந்து நின்றுசேறு
ஆயப்பா கண்டகோடலியாச்சு
அழிவறிந்து ரசம்புளியை நீக்கிப்போடே. (165)

போடப்பா பின்னமொரு வகைதான்கேளு
பூமிநா தத்தவஸ்து பன்னீர்விட்டு
கூடப்பா நின்றுசென்று ராகுகேது
கூட்டியே சேர்த்தரைத்துப் புடத்திற்போடு
ஈடப்பா வாதமுறைக் கிதுவேயீடு
என்மகனே இல்லாட்டால் கேடுகேடு
ஆடப்பா யிப்படி நீ யெட்டோடெட்டு
அடியதோர் ரிசிமூலந் தொட்டுத்தட்டே. (166)



தட்டப்பா லோகஅதி சயமாயன்ன
தாரணியி லடங்கியதோர் வண்டிமூலம்
கட்டப்பா ரிசிகெற்ப மதனுலந்தக்
கூடியதொரு சாக்குவகைக் கிதுதிதொட்டு
வெட்டப்பா கண்டகோடலியாகு
விடையமுற்றோர் பூச்சிபூச் சிபெண்பார்கள்
சட்டப்பா என்னசொல்வேன் சாக்குநீற்றல்
சத்துமிரைக் கொன்றுடனு போகங்கேளே. (167)

அதுபோகத் தன்னிலமைச யாதமார்க்கம்
அப்பனே மதனப்பால் வழலைநீக்கும்
தனுவாகுங் கடலைபுட மதனைச்செயவீர்
தனையறிந்தால் முப்பூவு நாதமச்சு
மனுவான பேய்களுமை மலைப்பார்த்து
மயமரியார் கோடானகோடிபேர்கள்
சனுவான அகத்தியநூல் வெளியாய்ச்சொன்னோம்
சார்ந்தயார் சிவயோக மதிநரந்தோறும் (168)

தோணுமப்பா சிவயோக மிதுக்குள்ளாச்சு
தொட்டதொட்ட சித்துமயம் கைகண்டாச்சு
காணுமப்பா கற்பமுறை மெய்விட்டாச்சு
கருதாதே பிரமமதை விட்டுப்போச்சு
ஆணுவமாய் வாய்திறந்தால் கர்மந்தேடு
அப்பனே ஆராலே பொறுக்கக்கூடும்
நாணுவமாய் கற்சிலையைப் பெண்ணதாக
நாதுசென்று வொப்பனைவர் விடுத்தீர்களே. (169)

விடுத்தார்கள் கொண்டுசென்று குருவின்முன்னே
விரும்பியே மனமகிழ் பார்த்துப்போது
கடுத்தாரே மருவசன முறையேர்சிலை
கல்பெண்ணு பொன்மீதை யறியமாட்டார்
தொடுத்தாரே கலைக்கியனைப் போகநாதன்
தோணைமயில் சப்பனையல்ல வீணைகையிலெண்
றெடுத்தாரே தற்சொரூப ஞானபோத
மெடுத்துரைத்த படிதசமியப்பங்கேளே. (170)

கேளப்பா கொங்கணவர் சொன்னமார்க்கம்
கோவில்தனிற் சென்றுமே தன்னைத்தேடி
மீளப்பா வென்றுசொன்னீர் இருவர்நாங்கள்
மீளவென்றால் விதிமார்க்கம் அங்கொன்றில்லை
நாளப்பா செய்முகூர்த்தம் விதியாலித்த
நற்கன்னிப் பதுமைதனை யழைத்துவந்தோம்
ஆளப்பா வெங்களையுங் கிருபைசேர
அயன்விதியை யிருவர்தமக் கறிவிப்பீரே. (171)

அரியவென்று லென்மக்காள் மதனைச்செயனீர்
அறிந்தவாறு லுலகமதில் காமப்பாசந்தீர்
தெரியவென்றால் கேதாரக் காட்டில்பாரு
தேகசித்தி யோகசித்தி ஞானமார்க்கம்
பிரியவென்றாற் கல்விமயம் பேச்சொன்றில்லை
பிரிந்துவந்த கல்பதுமை பொருத்ததானை
எரியவென்றால் சோதனையே செய்தோமப்பா
எய்துமே வீரடக்க மிப்பைபாலீர். (172)

பாலிப்பா புங்கருடை சித்துமார்க்கம்
பதுமைதனைக் கல்பெண்ணைக் கொணர்ந்ததிர்க்கம்
கேளிப்பா யென்னசெய்தீர் கொங்கணரே நீர்தான்
கெருவவிதி யடக்காத இடைக்காட்டார்போல்
தீவிப்பாய் கொண்டுவந்து விட்டதாயம்
திரைவிரவி யுண்டுபண்ண அரித்திரில்லை
ஆவிப்பா யாகிருக்கை வித்தைதன்றால்
அழைத்துவந்த வாரெனக்கு அறிவிப்பீரே. (173)

அறிவிப்பீர் கொங்கணரே கருவூராரே
ஆதியந்த முதலான வகையைநீரும்
பிரிவிப்பீர் கற்சிலையின் வரலாற்றாயம்
பிரித்துமதன் ரதியவள்சக் களையாக
சரிவிப்பீர் கேதாரக் காட்டிற்சென்று
சற்குருவாங் கல்லுப்பு வழலையுப்பு
வருவிப்பீர் கல்பெண்ணை விட்டுநீரும்
வருவதற்கு வாய்வுசெயம் வகுத்துக்கொள்வீர். (174)



கொள்ளுவீர் குளிகைதனை வாங்கிக்கொண்டு
கூடுவீர் கேதாரக் காட்டைநோக்கு
விள்ளுவீர் பேச்சதனை யவர்க்குநீரும்
வீரமதை யடக்கிமது வென்றதுகிட்ட
அள்ளுவீர் கல்லுப்பு முப்புதன்னை
அறிந்தெடுக்கக் கல்லாத்துக் கருகேயப்பா
அள்ளுவீர் கெவுனமுறை பறவைமார்க்கம்
தாக்கிவிட வாசியைச்சற் றுசிப்பீரே. (175)

ஆசித்தாற் தேகமெல்லாங் கல்லதாச்சு
அப்பனே பிச்சிலைபோல் பேச்சுப்போச்சு
தேசித்தா லதுவனத்தைக் கொண்டுபாரு
நிமிஷத்திற் சடகெட்டுக் குளிகைபோடு
பேசித்தான் முடியுமுன்னே வந்துசேர்வீர்
பித்தர்களை அறிவைதனை விட்டுநீரும்
வீசித்தான் வெகுதனில் கெவுனசித்தாலும்
விடையமிதை நியாம வறிவிப்பீரே. (176)

அறிவிப்பீர் மன்மதவேடத்தில் நீரும்
அப்பனே கல்சிலைக்குப் பேச்சுண்டாக்கி
தருவிப்பீர் எழுபோகக் கலைக்கியானங்கள்
தையல்ரதி யவட்குமிவள் மிச்சமாக
குருவிப்பீர் பதுமைமன்னன் ரூபந்தன்னில்
கோட்டியாம் பதுமையதின் குணத்தின்செய்கை
பொருவிப்பீர் மனமுருக்கிப் பதுமையாலே
பொருதுமதன் கலைகளெட்டும் போகமாமே. (177)

போகமப்பா யெழுபோகக் கல்பெண்தன்னில்
போக்கியே மன்மதவேடத்திலிட்டு
யோகமப்பா கொளுப்பதற்குப் பேச்சுண்டாக்கி
முப்பூவை நீங்காமல் எடுத்துக்கொண்டு
யோகமப்பா அடைவதற்குக் கற்பமுண்ண
ஓர்நொடியில் குளிகைதன்னை யடக்கிப்பாரு
தேகமப்பா நினைத்தவிட மங்கேசெல்லும்
தேசமுய சோமமாய்த் தெரிவித்தேனே. (178)

அறிவித்தார் கொங்கணவர் கருவூரார்க்கும்
அகத்தியமா முனிக்குமுனி யானபோகர்
விரிவித்தா ரவர்களுமே மனப்பொருந்தேதான்
பேசாமல் பாதமதில் விழுந்துமயின்னும்
தெரிவித்தா ரகமங்க ளிருவர்க்கேதான்
தெளிவுதெரிந் திருமாற்ற சித்தநாதன்
விரிவித்தா ரஷ்டகர்ம போகமார்க்கம்
விளைசகுளிகை பறவையயத் தெசுத்துவிரே. (179)

வீரமென்ற வீரமதை யடக்கிப்போடு
விசாரமற்ற இருட்டமைய மக்குண்டாகும்
ஆரமென்று நினையாதே பொடியிற்செல்ல
ஆரத்தாரிக்கக் குளிகைதனை யடக்கிக்கொண்டு
சாரமென்ற கல்லுப்பு முப்புதன்னை
சற்குருவென் றெண்ணியேயிடு கல்லாறுதன்னில்
உாரமென்ற கெவுனமதத் திரைமையீந்து
உகந்துசிலைக் காவிபடைத் தோட்டினரே ()

ஓட்டியதோர் கொங்கணரும் கருவூராரும்
உயர்ந்தபரந் தேவிவர்கள் கேதாரத்தில்
காட்டிலே சென்றுகல் லாறுதன்னில்
கருதியதோர் கல்பெண்ணை மூக்கிமுழ்கி
நாட்டினார் மதனைவே யிடத்திலேதான்
நாடியதா லுவாரந்தநொரு கல்லுக்கட்டி
மூட்டினார் சமதுசம டாக்கிக்கொண்டு
மூன்வைத்தார் குளிகைதனைப் பின்வைத்தாரே . ()

வைத்ததொரு கொங்கணரே கருவூராரே
வாதமுறை கல்பமுறை யிதற்குள்ளாச்சு
எத்திசையிற் றிரிந்தாலு மிதுகிட்டாது
என்மக்காள் கற்பமுண்டு மிச்சந்தன்னை
அத்திகிரி மலையோரங் குளிதான்வெட்டி
அப்பனே யாருமறி யாமல்நீயும்
புத்தியுட னென்றுவைத்து வருவீராகில்
புகழுவேன் இருவையமும் பிரியத்தானே (182)



பிரியமதை யென்னசொல்வே னீங்கள்செய்த
பிரபலச் சித்திக மாயிருந்தனைத்தான்
அறியுமதை யிதுவரையு மூவர்களுமாயம்
அப்பனே கற்பமதை நடக்குமாயிம்
தெரியுமதை விராடக்கும் பஞ்சபாசம்
நெஞ்சமதிற் கவர்பிரியும் கபடம்நீக்கும்
குறியுமதை யறிந்தவர்போ லிருக்குநெஞ்சம்
கோடான கோடிசித்துங் கூர்ந்துபாரே. (183)

கூர்ந்துபார் கற்பமதை தன்னை நீங்கள்
கூட்டிவைத்த ஆக்கிருவும் குணத்தின்போக்கு
தேர்ந்துபார் சிவமதனை மதனிற்போக்குத்
தெரியாத கொங்கணரே கருவூராரே
நேர்ந்துகொண்டு வந்துவிட்ட தென்முன் நீங்கள்
நேரிசையா மெனநினைந்து கல்லிப்போர்கள்
சார்ந்துசெய்யில் யோகமுறை தப்பாமண்டு
சஞ்சரித்துச் சிவமயமொன் றில்லையாரே. (184)

பாரென்றேன் கேதுமய மதனைச்செய நீர்
பார்த்தவர்களாயிருந்துங் கற்பந்தன்னை
ஆரென்று கொண்டுவைத்து விட்டமையா
அருமையுள்ள கொங்கணரே பதுமையோடு
போவென்று செய்முறைக் கிதுவேமார்க்கம்
பேச்சற்ற கற்சிலையின் பிரிவுமார்க்கம்
தேரென்று அமைத்தவிதம் ஆதிநாதன்
தெரியமிந்த மதிருந்த வகைபோலாச்சே. (185)

ஆச்சப்பா கேதாரந் தன்னிலேதான்
அதிரூப மானகல்லும் பொன்னுமங்கே
குச்சமப்பா பேர்க்கவிந்து நாதங்கல்லாம்
சொர்ணமயம் தேர்மலையாய் முப்புவுப்பாய்
நிச்சப்பா கல்லாறும் சலமதாக
நின்றவர்ம மாயநிவா ருலகத்தோர்கள்
பேச்சப்பா கொங்கணவ ரிருவராலே
பேரான மகிமைதனைப் பெற்றவாரே. (186)

வாரான உலகமதில் மனிதர்கோடி
வாதமுறை செய்வதற்குப் பலநூல்பார்த்து
நீராக முதல்மூன்று வகையதன்னில்
நீங்கியதோர் நாதத்தை வாங்கிவந்து
கூராக ரவியில்வைத்துத் தெளிவுண்டாகுங்
கொடியதொரு கிரிகையின் மார்க்கந்தன்னை
ஆரார்க ளறிவார்கள் உலகத்தோர்கள்
அப்பனே நாதவிந்து சடைத்தவாரே. (187)

சடைத்ததொரு கொங்கணரே யினிக்கேளப்பா
சஞ்சரிப்பா யவ்வனத்தில் அதனுக்கீடாய்
விடைத்ததொரு காமப்பால் கல்லுப்பாக
வெட்டியெடுப் பாருண்டு அறியாமூடர்
இடைத்தெடுக்க மனந்துணிவீ ரின்னம்நீங்கள்
இலையாத யிருள்மாய்கை நிலையை நீக்கக்
கிடைத்ததிலும் பொருளாசை மிகவேயுண்டு
கெடியாயன் வலையறுத்து மீளுவீரே. (188)

கெடியாயன் மன்மதவேள் வலையை நீக்கிக்
கொண்டுசென்று வருவீரால் பெரியோராகும்
அடியாக அவ்வனத்தில் கனகம்போக்கு
தோகையரின் ஆசைவிட்டு வருவீராகில்
அடியார்க ளென்றுனை நாம் சரியென்றெண்ணி
அப்பாலுந் தாசனென அறியுமார்க்கம்
படியாக அடையாளந் தருவீராகில்
பதசேர்வை பெற்றதொரு பாலராமே. (189)

பாலகரே கொங்கணரே யென்மக்காகேள்
பாலாறு மன்மதப்பால் கல்லாறாகும்
நீலகரே மால்சயனம் மங்குண்டாகும்
நீணிலத்தி லறிந்தவரும் நெடியோன்சாய்கை
ஏலகரே விட்டிருவர் வருவீராகில்
என்னசொல்வேன் கல்லுப்புக் குள்ளாறாயம்
சாலகரே யிவ்விதியி னடத்தை நீக்கிச்
சஞ்சரிப்பீர் கொங்கணரே தாசர்நீரே. (190)



நீரான பனிநீரை முப்பூவென்று
நீணிலத்தி லறியாதார் பலநூல்பார்த்து
மாரான மாதருடன் மாநிலத்தில்
மயங்கியே திரிவார்க ளறிவுகெட்டோர்
வாரான நூலினுட னுட்பம்விட்டு
வகைவிட்டு முறைதப்பி மார்க்கங்கெட்டு
சாரான கைவளிநீ ரென்றேயெண்ணி
சஞ்சரிப்பார் போலிருவர் தமக்குண்டாச்சே. (191)

ஆச்சப்பா கல்லுப்பு பனிப்பூப்பாச்சு
அதையறிந்து எடுத்தருந்தக் கற்பமாச்சு
நீச்சப்பா கல்லாறு கேதாரத்தில்
நீயிந்த மாய்கையதை விட்டுப்பின்னும்
போச்சப்பா யில்லையென்று சொல்வா[illegible]
பெரியசிவ யோகமதை [illegible]
பாச்சப்பா வாசியாம் நிலையாய் [illegible]
பாவகமே தாவிப்பீர் [illegible]ராமே. (192)

தாயிருவ ரடற்செய்த வகை[illegible]போல
தாபாத்திற் கேதாரம் [illegible]ல் நீறும்
தாமிருவர்க் கேபியுங் குளிகை தன்னை
தாவடக்கி மன்மதவே [illegible]செய்க
ஓமிருவ ரெனவருவார் கொண்[illegible]
ஓடினார் கௌனமதில் நாடி [illegible]
போயிருவர் திரும்பிவந்த வரலார்மார்க்கம்
போக்காக விதித்தவிதி புகலக்கொண்டே. (193)

பல்கொண்டு மேபோக ரிடத்தில்வந்து
பதுமைதனை விட்டுவந்தோங் கற்பமுன்னை
மல்கொண்டு மும்மதத்தால் வினோதகல்லு
மாலைமதந் சோலைமதம் வகையின்போக்கு
வில்கொண்டு வேல்விழிப்பெண் ணாலேயெங்கள்
விகாரமது நீரவுண்ணா விரும்பியுங்கள்
சொல்கொண்டு திரும்பிவந்தோம் போகமார்க்கம்
செவியென்றோர் முப்பூவை யெறியென்றாரே. (194)

11610

எதிரென்ற போதிருவர் கொங்கணவர்கூடி
எதிர்த்திடவே கிணறதிலே சலமைதாச்சு
குறிகண்ட ரிசியொருவ னதுதான்பார்த்து
கூர்ந்தெடுத்துக் கற்பமுன்னை பின்னுமற்ற
தரிக்கின்ற அக்கினிப்பை தருசின்மார்க்கத்
தடக்கியே மூழ்காமல் தானேமூழ்கி
நெறிகொண்ட கல்லதுபோல் நின்றானின்னும்
நீயறிந்தா லவ்விடத்திற் சென்றுபாரே. (195)

பாரப்பா கல்லுருவாய் நின்றமார்க்கம்
பரப்பிரம வஸ்துவென்ற செயநீர்திர்க்கம்
ஆரப்பா அறிந்தவர்கள் ஒருவரில்லை
அப்பனே தென்மலைவி னதனுக்குள்ளே
தேடப்பா நிற்கிறு னதின்மேற்காக
நிலைகண்டு கல்லுருவை மச்சங்கண்டு
சேரப்பா விருச்சமுமங் கதிலேயொர்திபச்
செயலிதனை யறிவதற்கோ ரிரவுநேரே. (196)

நேரான சோதிமர விருட்சந்தன்னில்
நிலைகண்டு அதின்கிழக்கே தெற்கதாக
ஆரான சாவல்பூனைத் தில்லைமமொன்று
அருவாச மாமுனிவ னெருவனுலே
பேரான வஸ்துவதை மறைந்துப்போட்டார்
புதைபொருளெல் லாமுனக்கு வெளியாய்ச்சொன்
யோரான விருவிருட்சம் நடுவிற்பாரு [னேன்
என்மகனே கோழிமுக்கி கோழியுண்டானென்றே()
சாவல்லாள

கோழியுண்டான் கோழிமிண்டான் தில்லைப்பாலை
குக்குடப்பூச் சாவல்பூ டென்றுஞ்சொல்வார்
வாளிகொண்டு நாளிகொண்டு இலைகள்கொண்டு
வதைப்படுபோல் நொடிதோறந் தன்னிலிந்த
காளிகொண்ட கூளிகண்ட தில்லைப்பாலை
கறந்துவந்து கத்திமூனை தன்னில்தொட்டு
வெளியமாய் கடுஞ்சாவல் கிணையாய்நீயும்
உத்தமனே சிறுவிடைதான் காலிற்கட்டே. (198)



கட்டப்பா ஓர்பறவை தன்னிலேதான்
கத்திபட்டுக் கடுஞ்சாவல் பட்டுபோகும்
மட்டப்பா யிதுவல்லால் முப்பூதொட்டு
மைந்தனே கபாலஓட்டில் மைக்கருக்கி
ஒட்டப்பா வண்டரிச்ச பலையிறேலே
ஓடித்துவந்து யிசங்குமுன்னால் திசையைநோக்கி
இட்டப்பா உருவகுத்துப் பெயரைச்சுற்றி
என்மகனே முன்சொன்ன மையைச்சாற்றே. (199)

சாத்தப்பா வையம்வெப் பெண்ணொய்தன்னை
தாரணியில் முன்னேறட்டில் துணியில்முக்கி
ஏத்தப்பா திடமதிற் பொருத்திக்கொண்டு
என்மகனே எடுத்ததொரு மையைநீயும்
பூத்தப்பா மதனப்பால் செயநீர்தன்னை
புகட்டியே தாம்பூரச் சிமிழிற்சேர்க்க
கூத்தப்பா வென்றபெயமன் கைகளுள்ளாச்சு
கொடியதொரு பிரமவிதி தட்டலாச்சே. (200)

ஆச்சப்பா யிப்படிநீ செய்தாயாகில்
அப்பனே வுனக்கிடு யாருமுனைடோ
ஏச்சப்பா பிடுங்கிடுவா ரின்னூல்தன்னை
யேமாந்து போகாமல் மறைத்துப் போடு
காச்சப்பா சவமெடுக்க நேரம்பார்க்க
காலாதி காலனுனைக் கேவலானாம்
மாச்சப்பா வொன்றுமில்லை மறைப்பொன்றில்லை
மைந்தனே யிந்தவித்தை மையைச்சேரே (201)

சேத்தப்பா மௌனமா யிருந்துகொண்டு
சிவனுனை உமையாளை யின்றுஞ்சேரு
கூத்தப்பா யெமக்கூத்து கடிகைப்போதில்
கூறரிய தக்காலி தழையைச்சுற்றி
ஏத்தப்பா முன்சொன்ன படியேநீயும்
என்மகனே எழுத்தோலை சன்னைதன்னில்
நீத்தப்பா வெள்ளாவி மயானத்தன்னில்
நீத்தியபின் மரணமின்னூல் சூட்சமாச்சே. (202)

சூச்சமப்பா கிரிதனிற்போய்த் தேடவேண்டாம்
    சூட்சாதி சூட்சமதுன் தேகத்துள்ளே
சாச்சதப்பா துயன்பீடந் தெரியவேனும்
    சிவாயமெனுங் கயிலாசச் செயநீர்தன்னை
சேத்தப்பா ஒன்றியொன்றில் விறுடியொன்றில்
    சிக்கிரத்தில் முழுங்கியே அமுர்தங்கொள்ளு
வாச்சுதப்பா சிவயோக நிஷ்டைமார்க்கம்
    மைந்தனே வகையறியப் பின்னுங்கேளே. (203)

வாசிவிபரம்.

கேளப்பா அங்வங்சிங்றங் கிரியுஞ்சிவாயாவென்று
    கெணிதமொன்றில் செல்லுமட்டுஞ் செபிக்கவேணு
நாளப்பா நாலொன்றுக் கனுவளவுதானும் [ம்
    நாடியே கெற்பமெனுஞ் சிகவிழுந்தமார்க்கம்
பாளப்பா சுவாசமது போகாமற்தான்
    பார்தனிலே விழுந்தசிசு அங்வங்கென்று
வாளப்பா அருமார்க்க மீசன்பாதம்
    வழுத்தியே யோர்மனது செலுத்தும்வாரே. (204)

வாரென்ற வகையிதுதான் சொல்லக்கேளு
    வாசியெனுஞ் சுவாசமதைப் பாழ்போக்காமல்
காரென்ற வகையாய்முன் னட்சரத்தைச்செவி
    கயிலாசத் தகண்டவெளி காணலாச்சு
கூரென்ற சிவமடக்கி மவுனஞ்சாதி
    கெவுனமட்டுங் கயிலாசச் செயநீர்தன்னை
நாரென்ற அமுர்தமாய் முழுங்கிப்பாரு
    தாசனே அடையோக மதிலுண்டாச்சே. (205)

ஆச்சப்பா யோகமுறை யிதிலுண்டாச்சு
    அப்பனே சிவகுருவைக் கைகண்டாச்சு
நீச்சப்பா சுசந்தனிலே யோகமார்க்கம்
    நீநீஞ்சுமண்டலத்தா னிருந்துபாரு
பாச்சப்பா அபானமதிற் சலத்தைநீயும்
    பாசிமலச் சுத்திசெய்யில் வாசிமார்க்கம்
வீச்சப்பா சிவசுழியைக் கைலாசத்தில்
    வீடடங்கிக் கல்விதனைச் செய்துபாரே. (206)



செய்துபார் சிவமதுதான் வெளிவிடாது
    செலுத்தியதோ ரிசிசிசுராத் தரித்திடாது
எய்துபார் மதநூலைச் செபித்தபேர்கள்
    எவராலு மூனைமடக்கக் கூடாதப்பா
உய்துபார் நீயதனைச் சிவயோகத்தில்
    உத்தமனே சிவமதுதான் கயிலாசத்தில்
சொய்துபார் ரிசிகெற்பந் தரிக்குமார்க்கம்
    கொண்டமட்டும் யேறியிரு குதிரைப்போக்கே. (207)

போக்கப்பா சத்திசிவ மனம்போற்சித்தி
    போனதைநீ வெளிவிட்டுச் செலுத்துமார்க்கம்
தாக்கப்பா தெஞ்சமதிற் கொள்ளமட்டும்
    தாக்கும்போ துத்தமனே அங்வங்ஙங்கிரியுஞ்சிவாய
ஆக்கப்பா சென்றமட்டு முன்போல்நீயும் (வென்று
    அப்பனே கொண்டமட்டுஞ் செபிப்பாய்நீயும்
நீக்கப்பா கோபமுதல் வேர்வைரெண்டும்
    நீநீக்கிச் சிவயோகஞ் செய்துபாரே. (208)

பாரப்பா முன்சொன்ன உருவைநீயும்
    பார்தனிலே செபிக்கஅயன் விதியாலென்ன
நேரப்பா வந்திறந்து மெமனாலென்ன
    நீனிலத்தி லக்கினியால் சிவத்தாலென்ன
கோரப்பா பிரமலபி யிடியாலென்ன
    கொண்டமட்டுஞ் சிவயோக மடக்கும்பேர்க்கு
வீரப்பா வென்றதுதான் அடக்கிக்கொள்ளு
    வேர்வைத்துப் போகாமல் விரும்புவீரே. (209)

வீரென்ற கோபமதை யடக்கிக்கொள்ளு
    வேதாந்தத் துட்பொருள்முன் விஞ்சையோது
போரென்ற மனமதப்போர் செய்துபாரு
    பெரியசிவ யோகமது செய்யும்போது
சாரென்ற வஸ்துவதில் கயிலாசத்தில்
    சார்ந்துசிவ சுழிமுனையி லடக்குமார்க்கம்
ஆரென்ற பேரறிவார் சிவயோகத்தை
    அப்பனே சதாசிவத்தின் ரூபந்தானே. (210)

அருபமது கண்டுகொண்டால் பாணம்பாழாய்
ஆச்சுதப்பா பிரமலபி விட்டுப்போச்சு
சொருபமது கண்டுகொள்வான் சிவத்தின்கூட்டில்
சிவம்போக்கி சவம்நீக்கித் தவமுண்டாச்சு
பருபமது செய்துகொள்ள வகைதோணமல்
பார்தனிலோ ராதிசித்த ரொருவன்றானும்
பொருபமது கல்விசெய்ப உடல்திதின்னை
புதுமைசெய்து யிடைக்காட்டா ரெனவுற்றாரே.

உத்தகொரு சுவாசமதின் வகைதான்சேறு
உயிரெழுத்தென் றேநினைநீ முன்சொல்நாளும்
ஆத்தப்பா சிரசுவாய் நாசிநெஞ்சம்
ஆகியநல் வாசல்சிக் கடைப்பெல்லாந்தான்
சித்தமப்பா கூர்ந்துபார் வெளியாய்த்தோன்றும்
சிவயோக மடைவதற்கு வழியைப்பற்றுங்
கத்தனெனுங் கயிலாசந் தன்னிற்சிக்கக்
கருத்தாகத்து ஓர்மனதாய்ச் செபித்திடாயே. (212)

செபித்திடவே யீசன்விதி யதறுவென்ன
செகத்திலுள்ள திரெருப்புத் தனலாவென்ன
அவித்திடவே சிரசிலே சுவாசந்தன்னை
அப்பனே யடக்கும்வழி யறிந்தாயானால்
குவித்திடவே கோவில்கண்ட யிடங்கள்தோறும்
கோட்டிகொண்டு இரிந்துநிறை லாவதென்ன
நலித்திடவே மும்மூர்த்தியா ரேனுமுன்னே
நசித்தாலு மூசித்தாலு நலிவாரதே. (213)

ஆருத தேகமது பூர்வக்கியானம்
அறிந்துகொண்டு சிவசெத்து வெளிஉமூர்தன்
போருத சதாசிவத்தைப் பெறுவாயாகில்
போக்கறிந்து கூடதனை யடக்கிக்கொள்ளு
பூருத பேர்கள்கண்டால் யிடைக்காட்டாறாய்
புகுத்துதவ மழிவுசெய்வான் புலிகள்சிங்கம்
வாருத வஸ்துவென்ன உலகத்தன்னில்
வருத்துவதல் லால்விருட்சம் விளையும்பாரே. (214)



பாரப்பா சிவந்தனைநீ யறிவிலுலே
பார்தனிலே சடமது அழியாமற்தான்
சாரப்பா சுவாசமதை அடக்கிக்கொள்ளு
சாநிலைநிர் ணயமறிந்தால் சாகாமற்றன்
போரப்பா யென்னசொல்வேன் பதினெண்பேர்கள்
பெற்றதவங் கற்பமித்தை பெரிதோயில்லை
சேரப்பா சிவசுழிமைக் கயிலாசத்தில்
சேர்ந்துசிகில் கடிகையொன்றில் சிவமொட்டாதே

ஒட்டாது சிவமதுதான் கயிலாசத்தில்
ஓடிரச பாணமது பொசித்துமீறும்
மூட்டாது வழியறிந்து யிறங்கும்போது
மூலைநினை விலையறிவு களவுதோற்றும்
தட்டாது நிசிவேளை தோற்றுமார்க்கம்
தனையறிந்து வோர்மனது தரித்தாற்சித்தி
பட்டாது பூனைநெரிப் புழுபோல் யோகம்
பற்றுதற்கு மனக்குரங்கு மதுகொட்டாவி. (216)

கொட்டாவி தனையடக்கிக் கொள்ளமாட்டார்
கொடியசிவ அடையோகஞ் செய்தோமென்பார்
அட்டாவ தானவித்தை பிரிப்போமென்பார்
அப்பனே அதையறிந்தால் அயன்தானேரோ
விட்டாட்டு வர்வாசி யிருபத்தொன்றில்
விளம்பினேன் ஆயிரத்தி யிருநூறசேர
புட்டோடுங் கடிகையொன்றில் சுவாசமூர்ச்சை
போகாமல் வழியறிந்து முழுங்கிக்கொள்ளே. (217)

கொள்ளப்பா கொட்டாவி விக்கல்ரெண்டும்
கொள்ளாட்டால் சுத்தவெளி நாசமாகும்
தள்ளப்பா கயிலாசச் செயனீருள்ளே
தள்ளியபின் விக்கல்தனை முழுங்கிப்பாரு
கள்ளப்பா கயிலாசந் தன்னிற்சேர்ந்து
சுருக்கெனவே பிரிவுசெய்து வாசிதன்னில்
விள்ளப்பா சுழிமுனையிற் செல்லுமாயம்
வீடங்கிப் போய்வழியை விரும்பிக்கொள்ளே .()

கொன்னுமுறை யின்னமுநான் சொல்லக்கேளு
குவலயத்தில் பெருவிக்க லெடுத்தபேர்க்கு
வின்னுவாய் மனம்பற்றிச் சிந்தித்தொன்றை
விளம்பவே யவ்வழியை விட்டுநீக்கித்
தன்னுவாய் மனக்கவரின் வாசிமார்க்கந்
தனையறிந்து மனமுற்றிந்து பிருளை நீக்கி
தெள்ளிதமி ழாராய்ந்து மிருளை நீக்கி
தெளிவொளிவு ஞானவழி கிட்டொண்ணுதே. (219)

கிட்டவொண்ணு தின்னூல்தான் கிட்டும்போது
கெடியாயர் தாமறிந்தா லுன்னைக்கண்டு
அட்டியொன்று சித்திராக் கினைசெய்வார்கள்
ஆஷணிப்பார் விக்கலுக்குத் திஷ்டாந்திரலோபம்
பட்டமது வென்னவென்றால் பகரும்வாறு
பகர்ந்தவர்க்கு வெகுவேறு முறைப்பாயாயில்
தட்டகல்லும் சாய்ந்தாப்போல் பதறிவீழ்வார்
நடுக்கமுற்றான் விக்கல்தனை மறந்திட்டானே. (220)

மறந்துவிட்டான் சிவயோக மிகழ்ந்துவிட்டான்
மைந்தனே அவ்வழியில் மனம்வேறாக
பறந்துவிட்டான் மனக்குரங்கால் நல்த்தேவாசி
பறக்கவிட்டான் சிறக்கவிட்டான் பாரிலெங்கும்
கறந்துவிட்டான் தேகமதி லுள்ளவேர்வை
காய்ச்சிவிட்டான் வாசிகொண்டு கூட்டிதன்னை
பிறந்துவிட்டா னடையோகச் சுழிமிற்சொக்கி
யேதறிந்தா னிறக்கவய மறிவில்லானே. (221)

அறிவில்லான் சுவாசமதை யடக்கிப்பார்ப்பான்
அடையோகங் கயிலாசந் தன்னிற்சிக்கி
பிரிவில்லா மற்படிக்குச் சிரசில்மூட்டி
புகையெழுப்பி மூளைதட்டிச் செவியிற்சொட்டு
பொறியில்லா தருள்வெடித்து சிலத்தைப்போக்கி
பூவுலகில் தவம்நீக்கிச் சவமதானன்
நெறியில்லா தைத்தவிர்த்துக் கற்பமுண்டு
நீட்சிக்கும் நிர்மூடர் மகிமைபாரே. (222)



பாரப்பா கல்பமதை விதியின்மார்க்கம்
படைத்ததென்று நீங்களுமே பெரியோரய்யா
நேரப்பா கல்விசெய்தேன் யோகமிஞ்சி
நேரில்லை அயனுரைகள் யாதொன்றில்லை
கூறப்பா அனுபோகம் அசையாவல்லது
கொடியதொரு மதனப்பால் கடலைச்செயனீர்.
ஆரப்பா அறிந்தவர்க ளப்பாமுப்பூ
அறிந்தவரே சிசிகெற்ப மறிவிப்பாரே. (223)

பாருநீ யிந்நூலின் முறைதப்பாமல்
பகர்ந்திட்டோம் கௌமதிநூல் விதியின்மார்க்கம்
தீருநீ முன்முறையின் பின்முன்னுகி
தெரிந்தெடுத்து நெஞ்சகத்தில் தெளியும்போது
தேருநீ வாதமுறை கற்பமார்க்கம்
செய்கைதனை யறிந்தவர்க்கே சித்தியாகும்
ஆருநீ புதைத்துவிடு வெளிவிடாதே
ஆரந்தரிக்கத் தம்பனநீர் தன்னியங்கேளே. ()

எலிநீறு.

தன்னியத்தில் தம்பிக்கைவகை தான்கேளு
சவுத்தயெலி மூலவித்தை யெலிதானப்பா
சென்னியதில் பிடித்துநீ கலத்திலிட்டு
சிரசுடல்ரெண் டாக்கிவொன்று மிதக்கும்பாரு
இன்னிலத்திற் கீழேநீ வைத்திடாமல்
யெடுத்துவந்து ஆவின்கன் றிடுகுஞ்சாணி
அன்னியத்தி லடையாளக் கவசம்பூசி
அப்பனே அதைவைத்து திருநீறுக்கே. (225)

ஆக்கப்பா மயானமதி லெரியுமக்கை
அதன்மேலேவைத்து நீ விபூதியாக்கி
நோக்கப்பா தணிந்ததொரு துண்டநீரை
தொடித்திடுவா யறிவாக நெஞ்சுநேரே
போக்கப்பா திற்பாழாம் குரும்பைமார்பு
போன்றிவிடுஞ் சிறுகுழந்தை போல்நெஞ்சாகும்
தாக்கப்பா மிதந்ததொரு துண்டநீரால்
தன்றுமடா கும்பமென்ற தன்யந்தானே. (226)

தானென்ற ஆறுவைத்தா லிருத்திடாமல்
தம்பித்த மித்தவித்தை தன்னைப்பார்த்து
மானென்ற நீதிமுறை யுள்ளோர்தன்மேல்
வர்மம்வைத் துக் கருத்தொழில்கள் செய்வாயாகில்
கூனென்ற பாவம்வரும் வேண்டாங்கெடு
சிவனானை புவையாளை திருமாலானை
கோனென்ற இடைக்காட்டுச் சித்தனுமி
கூடறிந்து போனகதை கூர்ந்துபாரே. (227)

பாசாணச் சுன்னம்.

கூர்ந்துபார் பாசாணச் சுன்னந்தன்னை
கொடியதொரு இந்துப்பு வழலையுப்பு
நேர்ந்துபார் படிகவெள்ளைக் கட்டிவாங்கி
நீனிலத்தில் மதனப்பால் செயநீர்தாக்கி
சேர்ந்துபார் ஒருசாம மரைத்து நீயுஞ்
சீலைமண்ணேர் கவசஞ்செய்துபோயும்
தேர்ந்துபார் கனவிட்டு உருகியாதும்
தெளிந்துகொள்ளு குரோதியின் பற்பத்தானே ()

தன்றான பாசாண பற்பசுன்னம்
நாட்டினார் பதினென்பேர் மறைத்துப்போட்டார்
குன்றான மலைதனிலே யிருக்கும்பேர்கள்
குருமுடித்துக் கற்பமுண்ண வேதையாலே
ஒன்றான பாப்பிரம வல்லதுமலம்
ஓகோகோ தொட்டதொட்ட சித்துக்கெல்லாம்
வன்றான மனதுடையோ ருனைவந்தேய்ப்பார்
வகையறிந்து நூலடக்கி வளமையாரே. (229)

பாரப்பா வாதமுறைக் கதிகசூட்சம்
பாசாணக் கட்டுவகை நீதிக்குமோட்சம்
சேரப்பா வங்கமுத விரும்புசெம்பு
சிவக்கும்போ தாசிமுனை கொண்டுதான்டு
நேரப்பா கனகமயம் வாதிரைந்து
நிச்சயித்து அந்தரங்கம் வெளியாய்ச்சொன்னோம்
சாரப்பா பலநூல்கற் றோர்களெய்ப்பார்
சார்ந்தவரைப் பொய்க்கயற்றால் கட்டிக்கொள்ளே.()



கொள்ளப்பா பொய்க்கயற்றால் கட்டிநீயும்
கோடம்ஆடம் கெருவமுதல் சூனந்தீர்த்து
தள்ளப்பா பதினென்பேர் பாடல்முற்றுந்
தள்ளிவிடு சௌமநூ லாடசித்து
அள்ளப்பா மதனப்பால் பூமிநாதந்
தொருத்தனைதீ தொட்டதொட்ட சித்துக்கெல்லாம்
எள்ளப்பா அதிப்பாதி உயிர்நீர்தொட்டு
சேர்த்தனைத்துப் புடம்போட்டு எடுத்துப்பாரே (231)

எடுத்துப்பார் எந்தெந்தச் சரக்கானாலும்
என்மகனே நீங்குசெந்த வழலையுப்பு
கொடுத்தப்பா அரைநொடியிற் புடத்தைப்போடு
கொள்ளையென்ன தொட்டதொட்ட சித்துக்கெல்லா
தொடுத்தப்பா சொன்னசொல்லேன் அறுநீயில்லை (ம்
தொருத்தபடி முறைவிதியின் படிதப்பாமல்
நடத்துப்பார் விபரீதபெற்ற மொடிப்போச்சு
தாரணியில் சலித்தவர்கதில் சாருண்டாச்சே. (232)

ஆச்சப்பா யின்னமொரு முறைதான்கேளு
அப்பனே பேய்ப்பீர்க்கு இலையைவாங்கி
காய்ச்சப்பா படரவிரிச் சாறுவிட்டு
கரியுப்பில் நாலிலொன்று அளவாய்ப்போட்டு
பேச்சப்பா என்னசொல்வேன் விரைந்தோர்தான்
பிதற்றுதே கைவரித்த மன்பாண்டத்தில்
மூச்சப்பா ஒருவருக்கும் வெளிவிடாதே
முடிந்தசெந் தூரமுறை விதியைக்கேளே. (233)

விதியைப்பா சித்தவித்தை விவேகசூட்சம்
விடையமதை யறிந்துகொண்டால் வாதமோட்சம்
கெதியைப்பார் பொதுவாதக் காரையாக
கெதிகறுத்து சிவசொத்து விதியாயாகில்
மதியைப்பார் சிவநிருவ யறிந்துபோச்சு
மைந்தனே உன்றிதமாம் நாசமாச்சு
பொதியைப்பார் மலைதனிலே யிருக்கும்பேர்க்கு
பூவுலகில் கற்பமுண்ண உரைத்தவாறே. (234)

வாறேநீ யறிந்தவுட னடக்கமாக
வகையறிந்து மனம்நிறைந்து வடிவுகொண்டு
போறேநீ தொடுத்தலைந்து சிவசொத்தியந்து
பிதற்றாதே அந்தனத்துக் காசியாதே
சாறேநீ யறிந்தவுடன் வெளியிடாதே
சஞ்சரித்தோர் தன்னையும்போய்க் கயத்தாற்கட்டு
வேறேநீ மலையாக நினைந்திடாதே
விதிவசத்தால் விளையுமுத்தான் றெய்யைக்கேளே. ()

மூலமுளைக்கு.

மூத்தவன்தன் வாகனத்து நெய்யைவாங்கி
மூப்போது மூலமுளைக் கிடுவாயாகில்
காத்தமெனுங் கனமாகு மொருபோதுதன்னில்
கர்மநோ யானதுவு மனுவேதீர்க்கும்
ஆத்தமொரு பித்தமெனும் லகிரிநோய்கள்
அடிக்குமடா அகத்தியனன் சொன்னபோக்கு
பார்த்தவர்க் கிதையும்நீ வெளிவிடாதே
பரமசிவ னாணையிந்நூல் பகரொண்ணாதே. (236)

பித்தலகிரிக்கு.

பகருவே னின்னமொரு வகைதான்கேளு
பார்தனிலே லகிரியுற்ற பேர்கட்கெல்லாம்
புகருவே னுச்சிதனில் ரோமந்தன்னைப்
போக்கியே அறுவளவு நகத்தாற்கீறி
திகருவேன் வெள்ளைப்பா சாணந்தன்னை
நீவாங்கி மிளகளவு பொடித்துத்தாக்கி
சிகருவேன் சுத்தநிலே மிலாக்காய்க்கட்டை
சேர்த்தரைத்த சந்தனத்தை யுளைந்திடாயே. (237)

வளைந்தமொரு சுத்தநிலே கொளுப்புநெய்யை
வாங்கியே சுடரெண்ணெய் வடிக்கும்பேர்க்கு
விளைந்தமொரு துகையப்பா அன்பத்தொன்றில்
விதிமுறைதப் பாமலிப் படிநீயியல்
குளைந்தமொரு புண்ணுச்சு லகிரிபேச்சு
குவலயத்தில் மாந்தர்மன மெய்க்கலாச்சு
விளைந்தமொரு மேதையின்தன் கனிதான்மிச்சம்
விடையமுற்ற வெலுமிச்சம் பழச்சாறுட்டே. (238)



ஊட்டப்பா எலுமிச்சம் பழச்சாற்தன்னை
உத்தமனே லகிரியெல்லா மோடிப்போச்சு
மாட்டப்பா சலக்கரையில் திருத்திக்கொண்டு
மைந்தனே வேகமறச் சலத்தைக்கொட்டு
நாட்டப்பா சுடரொன்றுக் கெதான்பத்து
நாடியதோர் சலக்குடத்தின் முறைநானூற்று
கூட்டப்பா யிப்படிநீ முறைதப்பாமல்
கூட்டியபின் நயிருந்தோர் பருந்துகட்டே. (239)

கூட்டுதற்குத் தனிபெருமைத் தயிரதாகும்
குறியறிந்தார்க் கொடும்பாவி புன்னையாகும்
ஆட்டுதற்குத் தப்பனத்திற் கிதுவேயாகும்
அப்பனே முன்சொன்ன விபூதியாகும்
நாட்டுதற்கு மூத்ததலைச் சிலைமுத்து
ஓகோகோ பேய்களி யிடத்திவ்நாட்டு
மாட்டுதற்குச் சயித்தானுக் கதியவான்நெய்
மைந்தனே யின்னமொரு வகையைக்கேளே. (240)

வகையதுதான் வண்டரித்த பனையிறைவே
வாங்கிவைத்து குறித்தவன்றன் பெயரைக்கீறி
திகையதுதான் முறைவிதியின் வைநேராக
திசைத்தவகை கவெயுவையுந் தெய்வகரியும்
பகையதுதான் சொறுத்தொழிலுக்குச் சவுத்தங்காதில்
படிப்படிதன் னர்சாற்றில் மையைக்காண்பி
நகையுநதா னென்னசொல்வேன் சாலந்சாலம்
நாசவித்தை போராமித்து நடையத்திலே. (241)

சய்த்தைதநீ பெருவிரலை யிடக்கால்தன்னில்
இருத்தியே பிடித்திடவே யிடங்கள்தோறும்
ஆய்ந்ததுவே ஆகாச மாத்திரமேலே
அருந்தொழில்தான் செய்திடுவார் அனேகம்பேர்கள்
சாய்ந்தவர்கள் மூதிர்த்துவிடும் வகையைக்கேளு
தரித்தமொரு சீட்டதிலே மூறியுப்பங்குக்
கியந்தனிலே நீர்தனிலேனைப் நேர்நேராக
இடமுறித் தேவிழுவான் யினிப்பின்கேளே. (242)

இனியாய மாகாசக் கனேக்கூத்தென்று
இவ்வுலகில் கௌமதிநூல் மகிக்கூத்தென்று
அனியாய மெத்தவுண்டு கோடாகோடி
அப்பனே யிதையறிந்து அடக்கிப்போடு
சனிஞாயம் பிடித்தவனை யின்னூலத்து
சார்த்தவரைக் கொன்றுவிடத் தகாச்செய்து
தனியாய பயன்விதியைத் தவிர்த்துக்கொண்டும்
தனித்தனியே யித்தமுறை தகர்த்திடாயே. (243)

தகர்த்திடுவாய் முறித்தபடி முடிந்துபோகும்
தாரணியிற் றொன்மேமுழு முடைந்துபோகும்
திகர்த்திடுவா யித்தமுறை கைவிட்டால்
தீயுமொரு முன்முறையின் விபூதிதொட்டு
புகர்த்திடுவாய் நேர்நேரே நொடிக்கும்போது
பூதகணை கெசகாணை யிந்திரசாலம்
அகர்த்திடுவாய் பொடிப்பொடியாய் நொருங்கிப்போகும்
அப்பனே சிவமயமுங் கைக்கொள்ளாதே. (244)

கொள்ளாத குமரிஅண்டம் வாங்குதற்கு
கூறுவோம் வெள்ளையப்பா சாணைத்தன்னை
புள்ளாக கட்டியிரு களஞ்சிவாங்கி
பெறுவாயின் பிருகநீர் படிக்குள்ளாக்கிச்
சள்ளாத படியெரித்துச் சுத்தமாக்கி
சரண்டியே தஞ்சக்கொடி கண்ணைத்தன்னை
விள்ளாதே யொருவருக்கும் நெல்நீர்விட்டு
விரையவே யரைத்தபொடி வெல்லத்தூட்டே. ()

வெல்லத்தில் களஞ்சிமெத்த சாடியூட்டு
விழுமூன்று முக்காலநா ழிகையிற்பாரு
இல்லத்தி லிருந்துயிர்த்துத் தொழிலெடாதே
ஈசுரன்மே லாணையிது கர்மத்தாலே
இல்லத்தி லிந்தவித்தை பாவிக்காச்சு
தேரையர் சல்லியத்தின் குருவேயாச்சு
குல்லத்திற் பிரளையநீர் வாங்கும்போர்க்கு
கொடியதொரு வசியமுமா மதையுமாமே. (246)



ஆமப்பா கருநெல்லி விளையாமூல 5
ஆகியதோர் வசம்புடனே ராசன்தேவி
நாமப்பா வெளியுரைத்தோம் வேம்புவேர்த்தோல்
நல்பிளரு வனையுமொன்று களஞ்சியொன்று
ஓமப்பா படிசலமோர் மூன்றதாக
ஒதுக்கியதில் கொடியதந்தக் கொடியின்சுண்ணம்
தாமப்பா முன்முறைமஞ் சாடியீயத்
தகர்த்ததுசக டோரேநோய் வலைமுதல்பாரே. ()

பாரப்பா என்னசொல்வே னதிலுநன்
பார்தனிலே யிடைக்காட்டா னௌவேயுற்றான்
சேரப்பா வகமதனுஞ் சுல்லார்தன்னில்
சூதுசெய்து வந்தவுப்பைக் கிரியித்சென்று
காரப்பா கல்லுருவாய் நின்றவன்றுவம்
கதையதனை யறிந்துகொ மதிநூல்தன்னை
சேரப்பா நெஞ்சகத்தி லடக்கிப்போதி
சென்றுபார் கொங்கிருமை மார்க்கந்தன்றே. (248)

தன்றெனவே நான்சொன்ன படி நீயப்பா
நாட்டிக்கொண்டு கௌமதியா மின்னூல்தன்னில்
துன்றென்ற கைலைவெள்ளி மலைமேற்சொர்னக்
குப்பல்குப்ப லாய்குவிக்கு மூன்னூலின்னூல்
நன்றென்று நாமுரைத்தோம் பதினெண்பேர்கள்
உரைத்துவிட்டா ரில்லையென்று மறைத்துப்போட்
டொன்றென்ற ரெண்டுக்கு கல்விமாயம் [டார்
பிரித்துவிட்டேன் பின்மயமர் புயத்திலடாரே. (249)

புயத்தனிலே குதிவிழுகும் விபூதிதன்னை
பிடித்துவைத்துச் செபித்திடவே வளரும்பாரு
மயமதனை யறிந்தவரா ருலகிலில்லை
மைந்தனே நீயறிந்தால் மருங்கேசொல்லை
அயனரிமால் முப்பூர்த்தி விதியால்யோனி
ஆயிரங்கண் ணெனதுவு மிதனுமப்பா
பயனதனை யறிந்துகொண்டு மின்னூல்தன்னை
பரமசிவன் மேவுதனை புகணப்பனே. (250)

### மோகினி மந்திரவிதி.

பண்ணப்பா சூரியகி ரகணந்தன்னில்
பார்தனிலே மோகினிதன் வசியவாலே
என்னப்பா செவ்வரளிப் பூதாற்றெட்டு
எடுத்துவைத்து கெங்கைதனில் கிழக்காய்நின்று
உன்னப்பா காரிவு மூடுமட்டும்
உத்தமனே சிவாயநம மோகினியங்கென்று
பெண்ணப்பா வாலைநதி யிருபுயத்தில்நின்று
பெருபெற்ற தடையாளங் குளிப்பதாமே. (251)

ஆமப்பா விபூதிதனைச் செபிப்பாயாகில்
அப்பனே ஆகாசத் தன்னிற்பார்த்து
தேமப்பா தெற்கேதலை யாசவைத்து
நிஷ்டையிலே திமிர்த்துகொண்டு விபூதிதன்னை
காமப்பா மோகினியை நினைத்துகொண்டு
கருதியே விபூதிதனைக் குளியில்வைத்து
நாமப்பா முன்சொன்ன படியேநீயும்
நாடியே செபித்திடவே வளரும்பாரே. (252)

பாரப்பா திருநீற்றை யெடுத்துக்கொண்டு
பாரிலுள்ள மானிடர்க ளெவராகிலும்
நேரப்பா நினைத்துகொண்டு விபூதிபூச
நேராகக் கண்டவர்கள் பிரியமாட்டார்
ஆரப்பா யிதையறிந்தோ ரொருவரில்லை
அப்பனே நீயறிந்தா யின்னூல்தன்னை
வீரப்பா கோபமதை யடக்கிக்கொள்ளு
விருதாவில் மானிடரைத் தூர்த்திடாதே. (253)

தூர்த்திடவொ ருவனைப்பார்த்தோர் பிரியமாட்டார்
தூசணித்தார் பிரமஹத்தி மாரன்றன்னை
அயன்திருமால் மும்மூர்த்தி அனைவோர்கூடி
ஆயிரங்கண் ணாய்ச்சபித்தா ரறிவுள்ளோர்க்கு
பயத்திதைநீ தொட்டெடுத்துப் பார்த்தாய்நன்று
பார்தனிலே யிருகமதாக் குயிழ்நீர்தொட்டு
செயம்பெறவே காட்டினால் வசமேயாகும்
திரும்பாமற் கொண்டுசெல்லு கூடத்தானே (254)



தானென்ற ஆறுவகத்தை விட்டுநீக்கு
தன்னைமறந் துன்னைவிட்டுப் போகமாட்டா
ஏனென்றால் வாலைமோ கினியின்மார்க்கம்
இந்தவித மானதோர் செயலேயாகும்
மானென்ற தேவாதி தேவனென்ன
மாவேந்தர்க் கோரதிகள் வரலாறென்ன
கோனென்ற வாலையுட கிருபையாலே
சோபமற்று லிவ்வகையைத் தொடுத்தப்பாரே. ()

தொடுத்துவரு மேயப்பா வந்தன்கூட
தூரத்திபடத் தாலுமது போகமாட்டா
அடுத்தப்பா மதுதானும் மதிகலங்கி
அறிவுகெட்டு உன்னினைவா யிருக்குமப்பா
கெடுத்துவிடுங் கர்மவிதி சூழ்ந்ததானால்
கெட்டமதி யால்மயங்கி இருக்கித்தேதும்
கருத்துவைத்துத் தூரத்திவிட்டும் பிரிந்துபோகா
கர்மவினை புனைவந்து சூழ்ந்தவாறே. (256)

வாரப்பா குழிவிழுந்த மார்க்கங்கேளு
வாலையம் புயந்தனிலே சுருக்கங்கென்று
கூரப்பா நிலைமர்ந்தோர் குழியுண்டாகும்
குறிப்பாக யிதையறிந்தோ ரடக்கிக்கொள்ளு
சீரப்பா கௌமதிநூல் மார்க்கந்தன்னை
சேகரமாய் மனதடக்கி வைத்துக்கொண்டு
காரப்பா மாய்கைபெற்ற சடலந்தன்னை
காப்பதற்கு யிடமறிந்து கருத்திலெண்ணே. (257)

பெண்ணப்பா யின்னூலை புண்மையாக
என்மகனே யெண்ணியபின் னடக்கிப்போடு
தன்னைத்தா னறிந்துமே நேமநிஷ்டை
தான்புரியக் கர்மஞ்சூழ் பொருளுண்டானால்
உன்னைப்பா கொடியவிஷம் போல்நீயந்த
உலகாரி தேடிவைத்த பொருளைத்தின்னும்
விண்ணப்பா உலகதனி லிருந்துவாழ்க
விஞ்சையெனும் தவசதுரா வியாங்கேளே. (258)

எழுபத்திமுக்கோண சக்கரம்.

நவசதார எழுகோண வட்டத்துள்ளே
நாடியே யாத்தனட் சரத்தைநப்பூரி
சிவமதுவாஞ் சடாட்சரத்தை நடுவிற்றீட்டி
தொற்றியாத் தைவ்கரனை வலத்தில்மாறி
தவமதுவாய்ப் பெற்றதொரு நந்திதன்னை
தலைமேலே சத்தியாத் தொடுக்கத்தக்கோடீ
பவமதுவே பறம்படிக்குச் சுவிரிகிறி
பார்த்திடவே நேர்தோரய் வெடிக்கும்பாரே. (259)

வெடிக்குமடா போகிறதைப் பேசட்டாவெட்டிடே
விஷரோகை யில்வாட்டால் இசைசகொட்டும்
தொடிக்குமுன்னே நகர்த்துவாரும் கெவிந்தின்றும்
திதிக்கொல்லாம் கைவசமாம் திறையின்றும்
அடிக்குமடா அட்டசித்தும் பாணம்போலாம்
அகத்தியர்சொல் சௌமதியின் நூலைப்பார்த்தோர்
பிடித்தயிடி தவறாமல் வாசிபூசை
பெருவதற்கு யிவ்வகையின் சித்தியாமே. (260)

சித்தியாத் தாம்பூரத் தகட்டிற்றீட்டி
செபிப்பதற்குத் திசைவடக்குக் கீழ்த்தோகாரும்
பத்தியாய் ஆத்தாட்டு அங்கங்கென்று
பாவிப்பாய் லட்சமுரு செபமனத்திற்கொண்டும்
தித்தியமாச் சிவைத்து வோர்த்தளிக்க
தேமிஷ்டைப் படியாய்செவ் வசளிபுஷ்பம்
சத்தியமாய்ச் சொல்லிவிட்டோம் ரேகைகிற
சற்குருவா போதிவைப்பார் சார்த்துபாரே. (261)

பாரப்பா செம்பாழ மிதத்துள்ளாச்ச
பரப்பிரம சொரூபமயம் வெளியதாச்ச
நேரப்பா விதையறிந்தால் வெளிநேராச்ச
நீளிலத்தி லட்டவயி ரவனுமாச்ச
ஆரப்பா அறிந்தவர்கள் வாலையட்சரம்
அப்பனே அங்வங்றீ யும்அங்கென்று
சொப்பா நாற்கெட்டு உருத்தார்நீயும்
செய்வதற்கோர் சதுரமய ரேகைகேளே. (262)



சதுரமதாய் ரேகையிட்டு ஆதிநேரே
தாக்குவாய் சாந்தமென முக்கோணத்தை
உதிரமய மானஉயிர் சிகாரத்துள்ளே
உன்னரிப்பா சதின்றே ஸ்ரீ அங்கென்று
மதுரமதை யென்னசொல்வேன் திசைதானிலில்
மவுனமப்பா அங்வங்லங் முடியிற் சிவாயம்
எதிரான அடி வெளியில் ஓங்காளி ஆங்கென்று
என்மகனே நாட்டியபின் ஓட்டங்காணே. (233)

காணப்பா யிப்படிநீ யெழுகோணத்தை
காரியத் தகடதிலே கீறிக்கொண்டு
பேணப்பா முன்சொன்ன படிபோலித்த
பிரணவத்தி லுயிரெழுத்தைச் சரியாய்ச்சேரு
வீணப்பா பலதுறையும் பார்க்கவேண்டாம்
விடையமப்பா சர்வாங்க சக்கரத்தின்சூட்சம்
உண்ணப்பா யெடுத்ததொரு முறைகட்கெல்லாம்
உத்தமனே தொந்தமிடு மந்தங்கேளே. (264)

அந்தநவ முதலெழுத் திரைந்தேகம்
அப்பனே அஞ்சுசெட்டிப் பிரிவுசாந்தம்
இந்தமுறை சிங்கமதில் ஈரேழாகும்
இப்படியே யிருநான்கிற் பிரிவிலாது
சந்தமெனுங் கன்னியதிற் மூன்றதாகும்
சார்ந்ததொரு தகர்தனிலே யாறதாகும்
பந்தமப்பா புந்திதனி லிருநான்கேழு
பார்தனிலே யகண்டவெளி மூன்றுன்கொன்றே. ()

ஒன்றான திப்படியே அன்பத்தொன்று
உகந்துநீ இதியபின் லுலகந்தன்னில்
குன்றான மலைகிரிகள் நகலுமார்க்கம்
கூரியதோர் படிமுறையின் விதியின்மார்க்கம்
நின்றுடுந் சித்துமுறை வராகிகோணம்
நிட்சயித்துக் கிறதற்கு முறையின்திர்க்கம்
நன்றாக தாம்வெளியா புரைத்தோமப்பா
நாடியிதைப் பூசைசெய்து நயந்துபாரே. (266)

மயர்ந்தபார் நாடியத்து ருக்கோணத்தன்னை
  நலமான ஆதிரு தேர்ச்சத்தலைவில்
மயந்தலிதெய்தோர் விஸ்ப்பா தெரிசனத்தில்ப்பா
  மயங்காதே விருதாவில் பலனல்பார்த்து
டயனதிவ மாட்டார்கள் விருதாவுடன்
  பார்த்தவிலே விதலி நமய்க் கோடிநீ
செயலறியார் திரூபட் பலதெருள்திலே
  செயித்திடவே சர்வருமுன் சித்தியாச்சே. (267)

ஆச்சப்பா மூன்றுறையின் விதிவிதிலே
  அவ்வளவும் பூர்ணமாம் பலதெருள்திலே
பேச்சப்பா விண்பேர்ச கதைநூலாச்சு
  பேரான பூரணமாம் கதிவொன்றில்லை
வேச்சப்பா விவரமாகவைத்தமைபாச்சு
  என்மகனே கௌமதி நூல் வெளியதாச்சு
காச்சப்பா மூன்சொன்ன மூரனைவிலே
  கருத்ததிந்து பலவகையும் பிரித்தாச்சிதே. (268)

மோடி

நீதியதோர் சக்கரத்திற் பலைதனைத்தனை
  நீதிவைத்து நவதான்யம் பலபலவிழுதி
தெதியதைக் கலவிச்ச பிரவனிவிட்டு
  நியவனித்து சக்கரத்தின் முன்னேவைத்து
மாதியதை வாரியேறி வலிக்கத்தப்பி
  மைந்தனே பறந்தடித்து மெய்யாருவுட்
சிறியதை மோடியென்று பெருக்கமாட்டார்
  செகத்தனிலே செக்குலக்கை செப்பினேனே. (269)

செக்குலக்கை தனைதிருத்திச் சங்கிலியிலேதி
  செபித்ததொரு விபூதிதனைப் பூசிப்போடு
பக்கமதில் வாருகோல் செருப்புக்கேளீர்
  பறந்தடிமுன் திருத்திய தொட்டுச்சாடு
சிக்கெனவே ருட்டொன்று சமட்டியாட்டு
  சிதறிக்கொடு சாதத்தையள்ளிச் சிமிழ்க்கூடு
வெக்கமதை யென்னமொல்லேன் நூகோகேகு
  விசிதிபெற அடித்தருட்டு விபூதிபூசே. (270)



பூசியதோ ருட்டைதனைச் சுழற்றிக்கேளு
  பூட்டகமறிந்தெதிரி செருப்பைக்கீறி
வீசியே யெறியுமுன்னே ருட்டைதீயும்
  விசைகொண்டு சுற்றிவிடு வந்துசேரும்
தேசியேனும் கழுதைபரி குதிரைப்பாதத்தில்
  சிந்தித்த யிடமெல்லாம் பணம்போய்ச்சேரும்
மாசியே அந்தரங்கம் வெளியாய்ச்சொன்னேன்
  மைந்தனே நீயறிந்து மனதிற்கொள்வே. (271)

கொள்ளப்பா குறிப்பானதொரு மார்க்கந்தன்னை
  கூறியதோர் முறைப்படி நீ தவறுபற்றுன்
தள்ளப்பா அடங்கோப மிரண்டுந்தொல்லை
  தாரணியில் மோடிவித்தைக் கிணைவேறில்லை
உள்ளப்பா வகைமுனக்கு வெளியாய்ச்சொன்னேன்
  உத்தமனே மோடிவித்தை யதிகமார்க்கம்
தள்ளப்பா சீசீ யதுவெகொஞ்சம்
  சாமீப யோகமயஞ் சாற்றக்கேளே. (272)

சாற்றுகிறேன் சிலருஸ்திர விதியின்போக்கு
  சார்புநிலை யறியாத மதிகெட்டோர்க்கு
வேற்றுமையோரு கெண்டியொன்று கூசமான
  விலாசமுள்ள கிணறுதனில் கவிழ்த்திமூடி
சேத்ததை கயிற்கொண்டு கெண்டிதன்னில்
  சேர்த்திருக்கிப் பாலமதில் நடுவில்தூக்கி
போத்துவாய் பீதாம்பர வஸ்திரத்தால்
  போற்றியபின் சிவமயத்தை யடைந்திடாயே. (273)

அடைந்திடுவாய் சிவமயத்தை யிழுத்து நீயும்
  அப்பனே யிழுத்துவிடு கிணற்றுத்தண்ணீர்
புடைத்தப்பா ராகாச கெங்கைமார்க்கம்
  பொழிந்தபடி போலருவி தெளிந்தசாய்கை
விடைத்திருப்பா ரித்தை நீ யறிந்தாயாகில்
  விந்தையென்ற யேந்தமதி யிறக்குமதிபோக்கு
கிடைத்திடுமோ மலைகனக நிதியிருந்தாலும்
  கிரியையென்ன யோகமென்ன கௌமதியப்பாரே

யோகநிலை.

சௌமியத்தின் வகையுமுறை மார்க்கங்கேளு
சிறுமையற்ற பெருமைதனை யடைசாக்கையோடு
மௌனமெனும் மனமதிலே நேர் நிலையாய் நின்று
மனந்துணிந்து உருசெபிக்கில் மகிமைபார்க்கும்
சௌமியமாஞ் சுவாசமெனுங் கருவிற்சிக்குந்
தன்மையறிந்து கண்டிக்கும் வழியுமேதோ துணும்
மௌனமதில் சிவஞ்சமைத்து மகிமைகட்டிடலாம்
பரிசோதித் தலம்பிடிக்கும் பாசமற்றே. (275)

பாசமற்ற பேர்களுக்கு நிலை நின்றேதான்
பார்த்தவுடன் கூகைபோன்றில் தோற்றம்பாரு
ஆசமற்ற தன்மமெனை பின்னையாசை
அறிவுகெட்ட மயலாசை காமவேசை
தேசமற்ற மண்ணாசை யிளைகள்சேர
நினைந்திருக்கும் நிர்மூடர்க் கிதுவெட்டாது
வாசமற்ற ஊணாசை பூணாசை
வஞ்சனைகள் செய்திங்கள் மார்க்கம்பின்னே. (276)

பின்னாசை பெண்ணாசை பிறவியாசை
பிரியாத மனக்குரங்கு விகர்ப்பமாசை
தன்னாசை புள்ளொசெல்வம் பெருமையானில்
தவசிமேற் றுருவமைத் தோற்றம்பாரு
இன்னாசை சௌமிநூ லாசைவைத்து
மிகுநுகன மயக்குநினை யோகஞ்செய்ய
மின்னாசை கொண்டவன்போ லின்றுவரை
மிகுந்தகவ ரிகழ்ந்தவிடான் விரும்புவானே. (277)

விரும்புவான் சிவயோகஞ் செய்வோமென்பான்
வீடடக்கான் குரும்பொக்கான் அடமும்போக்கான்
இரும்புருக்கி ரசவாதஞ் செய்வோமென்பான்
பித்தலத்தி னிவ்வரத்தி குணசயமே
அரும்புருக்கு கனதிமீனத் தானமுனி
அரிவைபெறு மனவிமக்கட் காகவேண்டும்
சுரும்புமய மானவுரு சிவத்திக்கடு
சொல்லவொண்ணு ஆசையது தலைக்கேறே. ( )



தலைக்கக்கேள் முன்சொன்ன ஆசாபாசம்
தலைத்துநீ சிவயோக மார்க்கம்பாரு
வலைக்குள்ளே சிக்கிநின்ற மச்சம்போலே
வகைதெரிந்து உனதுமனக் குலைக்குள்ளேதான்
சிலைக்கக்கேள் உற்றபொரி கரணமாசை
செகத்திலதா ராக்கள்மெய்ச்சக் கண்ணைமூடி
புலைக்கக்கேள் கைவிரித்து யிருக்கும்பேர்கள்
புத்திகெட்ட நிர்மூடர் புகழந்தானே. (279)

புகழவே கைவிரித்து யிருக்கும்பேர்கள்
பூவுலகில் கண்கெட்ட குருடர்மூடர்
இகழவே விருதாவில் மனதைப்போக்கி
இருந்ததினால் யாதொரு பலனுமில்லை
நிகழவே பலகதைகள் வீண்போக்கப்பா
நியதித்து ஓர்நிலையாய் கடிகைநேரம்
அகழவே அனுகூலஞ் சுவாசந்தன்னை
அலையாமற் கலையாமல் அனுஷ்டிப்பாயே. (280)

அனுஷ்டிப்பாய் சுவாசமதை யடக்கவேண்டாம்
அப்பனே யோர்நிலையில் நிலையாய்நின்று
தனுஷ்டிப்ப மானதொரு தவனிச்சக்கு
தானிசையிற் சின்னமுறை யூதும்நாதம்
செனுஷ்டிப்பாய் சிங்கநா தத்தின் வாத்யம்
கேட்டிடலேயோ அவ்விதியின் பதியின்நிர்க்கம்
இனுஷ்டிப்பா யிப்படியே இடங்கள்தோறும்
இருந்தாலுஞ் சிவமகிமை யினிதுபாரே. (281)

பாருநீ யின்னமொரு வகைதானப்பா
பார்தனிலே காளையார் கோவில்காட்டில்
நேருநீ யதின்மேற்கே மூலைபொன்று
நெடுந்தூர மல்லவிது காதம்நாலு
சேருநீ யங்கேயொரு காளிகோயில்
சிவசத்தி பீடமதில் நேரதாக
ஊருநீ பார்த்திடுவாய் ரெண்டேமுண்டு
துன்றுகுட்டி கொன்றுகட்டி குட்சந்தானே. (282)

தானென மரங்கள்ரெண்டும் பேரோதென்னில்
தாவிப்பே அந்தனுக்கு விபரமாக
ஏனெனல் ரசகுளிகை ராஜாளிலிருட்சம்
ஏதுமின்னி யிறங்குமின்னி யென்றுபோம்
ஆனந்தி யதினுடைய பழத்தைவாங்கி
ஆடிதனில் பௌர்ணமியில் பாதிப்போதில்
வேறுகப் பழுத்திருக்கும் வேளைபார்த்து
வேண்டிவா கடிகையொன்றில் மறந்திடாதே.(283)

மறந்துவிட்டால் பழுத்தபழம் உபயோகமாம்
மானிடரில் பேருபெற்ற பதினெண்பேரும்
பறந்துவரந் தெடுத்திடுவார் முன்னதாக
பார்த்தவுட னீயறிந்து வெடுத்துக்கொண்டு
திறந்துநிலை யென்னசொல்வேன் ரத்தம்போலாம்
தியீனகட்டும் ராசாளி நிவர்த்திகேளு
அரத்தமியாம் நாற்பத்தி மூக்கோணதீய
தொகுத்தறிந்து செயித்தெரிந்து செல்லுவாயே. ()

கெவுனம்

செல்லுவா யிதினுடைய மார்க்கங்கேளு
சென்றெடுத்துக் கொண்டுவந்து கனியின்சதை
கொல்லுவா யிடைக்கிடைதான் நீயினைசேர்த்து
கொண்டுவந்து குடகரியில் கொடுத்தப்பாரு
வெல்லுவா யாகாச கெவுனமார்க்கம்
விஞ்ஞைபெற்றுக் கயிலாச மேருவேறும்
வல்லுவாய் கொப்பரையில் வாங்கப்போட்டு
மைந்தனே உருக்கியித்தக் குளிகைபோடே (285)

போடப்பா ரசகுளிகை போட்டமார்க்கம்
பூர்வீகச் சத்துவிஷ தீரோடெல்லாம்
காடப்பா அக்கினிக் காடாய்க்கண்டு
கடந்துபோ யப்பூரத்தில் குதிகொண்டாடும்
தேடப்பா அதையெடுத்துக் கெவுனமார்க்கம்
தெரிவதற்கும் மறிவதற்குந் திறமிதாச்சு
ஓடப்பா நினைத்தவிட மெங்கெங்கேனும்
ஓடிநொடி நேரமதில் திரும்புப்பாரே. (286)



திரும்பவுமே யின்னமொரு வகைதான்கேளு
திருமூல வல்லவெனுஞ் சத்துநீதான்
அரும்பொருளின் சமையகுரு வாதிமூலம்
ஆணரசு பெண்ணரசு அறிவின்செய்கை
விருப்புநே ரித்தனைபித் தென்றுஞ்சொல்வார்
வீறுநி வினைச்செய மறியமாட்டார்
சிறும்பகளி பெருங்குறளி சற்றேதோன்றும்
செகந்தனிலே பதினெண்பேர் மறைத்திட்டாரே. ()

தாம்பூரபற்பம்

மறைத்திட்ட வல்லவைது வெளியாய்ச்சொல்வேன்
மைந்தனே தாம்பூர பற்பம்நீற்ற
உரைத்திட்ட சிறுகுறளாந் திப்பூடென்று
உத்தமனே யிவ்வகையின் பேரொன்றுச்சு
முறைத்திட்ட மறியாமல் பலநூல்பார்த்து
மூடர்களாய் வெகுபேர்கள் கூடிக்கூடி
நிறைத்திட்ட மறியாமல் புல்பூடெல்லாம்
நீனிலத்தில் லரைத்தெடுப்பான் சேத்தமாடே.(288)

செத்தேத்துஞ் சிறுகுறளுந் தவளைப்பித்து
சேர்த்தரைத்துத் தாம்பூரக் காசிற்பூசி
சுத்தத்து யீரமற ரவியில் வைத்து
செய்புடமாங் கவசமிலாப் புடத்தில்போட
சுத்தத்து அய்யமலர் நிறமுண்டாச்சு
சாட்டப்பா தாம்பூரக் கட்டியெல்லாம்
ஒத்தத்து யிடைக்கிடை நீ கனமாய்ப்பூசி
ஒழுங்காய்ப்பின் பத்தெருவிற் புடத்தைப்போடே ()

போடப்பா பலமொன்றில் எருத்தான்பத்து
போட்டிடவே அந்தயிடைக் கிடைதான்செய்து
தேடப்பா பத்துக்கொண் றுகநீயும்
தேடியதோர் தாம்பூரஞ் சரியாய்நீத்து
ஆடப்பா யிப்படிநீ முறைதப்பாமல்
அணுவளவு தப்பிவிட்டால் புகைந்துபோச்சு
நாடப்பா வடநாடு தேசந்தன்னில்
நாடியே கண்டுகொள்ள விடாங்கேளே. (290)

விபரமப்பா அனைமலைக் காட்டில்நேரே
விருச்சிகத்தின் திங்களிற்றம் விருப்பிச்செல்லும்
துபரமப்பா கைச்சிலையில் உறைதான்போடு
அணியாமல் கெணித்தரைத்து யிலையாச்சூடு
தபரமப்பா யத்தயிலைச் சிலைதன்னில்
கசக்கியே மசக்கையில் திப் பிடிக்குப்பாரு
நீபமுற்ற யிலைக்குமே யம்வெங்கென்று
நீனிலத்தில் பதினெண்பேர் மறைத்திட்டாரே. ()

திப்பூடு

மறைத்திட்டார் கானையார் கோவில்காட்டில்
மைந்தனே நாதாக்கள் பதினெண்பேர்கள்
விரைத்திட்டா ரதுகாண மாட்டாயப்பா
விருதாவி லலையாமல் அதின்மேற்காக
வரைத்திட்டார் மலையோரங் கொடியகாட்டில்
வழியறிந்தா விருக்குமிடந் திப்பூடென்று
உரைத்திட்டா ரத்தலத்தோ ரினேவோர்சேர
உத்தமனே யதையறிந்து பிடுங்கிக்கொள்ளே (292)

பிடுங்கிநீ யரைப்பதற்கு விபரங்கேளு
பிசற்றுதே ஆட்டுத்தோல் கவசம்பூணு
நடுங்கிடுவார் நஞ்சென்பார் திப்பூடென்பார்
நாட்டிலொன்று மறியார்கள் நாதன்கூலம்
ஒடுங்கிநீ முகமாக வைத்துக்கொண்டு
ஓரிடைக்கு நேரிடைசேர்த் திடுநீபற்பம்
நெடுங்கியெனுங் கொல்லாத நஞ்சுதனை
நீயறிந்தா லந்தச்சார் தன்னிற்போடே (293)

போடப்பா பாம்புநஞ் சதனைவாங்கி
போட்டிடவும் மந்தச்சார் சரிபிடைதான்சேரு
கூடப்பா வொன்றுமில்லை விதைமுமில்லை
குட்சமப்பா உண்டுபார் மதூரமாச்சு
ஆடப்பா யிப்படிநீ யவித்தபச்சை
ஆவின்வெண்ணெ தனையெடுத்து விந்தச்சாற்றில்
சாட்டப்பா அருகுதுணி இவலை நீயும்
சாடியபின் கடிகையொன்றில் தீயிப்போச்சே. (294)



தீறியதோர் மூன்றுமுறையி னை நத்தப்பாமல்
தீற்றியதோர் பற்பமதை வெந்நீர்தன்னில்
தீறியபின் றவின்பால் கறந்தமேனி
இருதமப்பா வென்னசொல்வேன் மதுரமாச்சு
வீரியமா மிதையறியார் உலகத்தோர்கள்
விருதாவில் கண்கெட்ட விருதாமூடர்
கூறியதோர் பாடல்பதி னெண்பேர்நூலும்
கொண்டலைந்தார் பண்டபிலன் கண்டிடத்தே (295)

கண்டதைத்தான் பண்டபிலஞ் செடியைக்கேளு
கனகமய மூலிகையின் திப்பூடென்றும்
விண்டதப்பா பட்டுநூல் விளிம்புவர்ணம்
மேனியெல்லாம் பொன்னிறம்போல் சுத்தவாசம்
புண்டரிக மலர்வாசம் போலுண்டாகும்
புதுமைதனை யறியவென்று புகழ்ந்துநீயும்
தண்டான மரணமுற முகர்ந்திடாதே
சனியான கொடியசனி சன்னும்பாரே. (296)

பாரப்பா அண்டர்கோ னரிமாலானை
பார்தனிலே வாசமதை முகர்ந்திடாதே
சேரப்பா கருநாவி யாவின்நஞ்சு
தியானதியதிலுங் கொடிதென்றெண்ணு
தாரப்பா மும்மூர்த்தி மூன்றுபேர்போல்
தலங்கியே ஓர்முழுத்தில் நிலையாய்நிற்கும்
காரப்பா அதனிடையில் மூத்தாள்சேர்ந்து
காத்திருப்பாள் பிசாசெல்லா மேடிப்போமே. (297)

ஓடிப்போ மதனிடையில் வேரை நீயும்
உகந்தசெவ்வாய் தனிற்பிடுங்கி யுலர்த்தபின்நீ
சூடிக்கோ கொடியரவு வழிகொண்டேகும்
சூட்சாதி சூட்சமப்பா காளிகோவில்
தேடிப்போய் நின்றதுபார் மரமொன்றில்லை
திப்பூட்டின் பச்சிலையின் குணத்திறலே
ஆடிக்கொண் டாடுகின்ற கையில்பந்தம்
அணைந்துபோஞ் சுட்டுறதென் றெறிவன்பாரே. ()

எரிந்திடுவா னதினுடைய விபரந்தன்னை
என்மகனே உந்தனுக்கு நேராய்ச்சொல்வேன்
தெரிந்துகொள்ளு அதினுடைய காயைக்கேளு
திருக்கான வலம்புரிக்காய் போலதாக
விரிந்திருக்கு மதின்வித்து லிங்கம்போல
வடிவுகொண்ட சிவகலையின் மார்க்கங்கண்டு
அரிந்தெடுத்து பார்த்திடுவாய் கொத்தொன்றுச்சு
அப்பனே அதில்மூன்று காயுண்டாச்சே. (299)

காயான நடுக்காயி லிங்கரூபம்
கருதியே யொன்றைப்பார் மேகரூபம்
சாயான பக்கமதில் யீசரூபம்
சார்ந்தப்பார் மும்மூர்த்தி யிவர்கள்ரூபம்
பேயான பேய்பிடித்த பேர்களிந்தப்
பெருமூலந் தனையுரைத்துத் நெய்தப்போடு
நோயான சயித்தானை மாரிப்போச்சு
துணியான மயிர்க்காப்பு துணியிற்போடே. (300)

போட்டப்பா மயிர்க்காப்பு துணியிற்போடு
போட்டபின்பு பிசாசெல்லா மோடிப்போச்சு
சாட்டப்பா பிடுக்கிக்கொண்டு பிலைமைதீரும்
சாதுவதே யல்லாது கைதொட்டாட்ட
ஆட்டப்பா தொட்டதொட்ட சித்துக்கெல்லாம்
அப்பனே தீயறிந்தா லருந்தக்கேளீர்
கூட்டப்பா தோல்நவச முறையைப்போட்டு
கூட்டியே பற்பமுறை கருவைச்செய்யே. (301)

செய்ததொரு குருவதனை நவலோகத்தில்
செலுத்தவாய் நிமிஷமுதல் வழுச்சத்தேற்ற
உய்துபார் நனுவளவு உமிழ்நீர்தொட்டு
உத்தமனே கொடுத்திடப்பார் சொர்ணமாச்சு
மெய்த்திடுவா ரிதையறிந்தோ ருனைவந்தேய்ப்பார்
மூழமூட ரானவர்க்கு மோசமாக
செய்திடவும் வைதிடவும் பொய்கள்சொல்லி
திரிந்தலைய நிலைவைப்பாய் தேசத்தோர்க்கே. (302)



தேசத்தி லுள்ளவர்க்குப் பொய்நான்சொல்ல
தோசமொன்று மில்லையப்பா வாதத்தாலே
மாசற்ற திப்பூடு யிலைதான்கண்டால்
மைந்தனே இயெரிந்து தணலின்மீது
வாசற்றோர் தேர்திற்கும் படியாய்நீட்டு
வாடைதைத்தா லுடன்சிரசில் புகையும்பாரு
மூச்சற்றுப் போம்படிக்கு மேலேமூடு
மூன்றரைக்கால் நாழிகையில் சென்றுபாரே. (303)

மண்டூகபற்பம்

சென்றுபார் மண்டூக பற்பமாச்சு
செகந்தனிலே ரெத்தமூறை பாண்டுக்கெல்லாம்
கொன்றுவிடு மும்மூல வன்தின்பற்பம்
குணமதனை யறிந்தவரா ருலகிலில்லை
நன்றுநா லாயிரத்து நாற்பத்தெண்ணேய்
நாசமுறுந் திப்பூடு நகைத்த மார்க்கம்
தின்றுவிடும் வியாதியெல்லா முண்மையாக
தீதறவே யின்னமொன்று திருத்தக்கேளே. (304)

திருத்தமப்பா மண்டூக பற்பத்தாலே
செய்கையென்ன சொல்லுவது உலகத்தோர்க்கு
வருத்தமப்பா வொன்றுமில்லை வறலார்கேளு
மாயவனு மீசன்முதல் மூன்றுபேரும்
இருத்தமப்பா கயிலைவெள்ளி தனிலுண்டாச்சு
இருமைதனை யறிந்தவர்கள் பிடுங்கிப்பின்னும்
பொருத்தமப்பா யில்லாமற் கனேயேதென்று
பிடுங்கியே யெரித்துவிட்டார் புதுமைகேளே. (305)

புதுமையென்ன சொல்லுவது உலகத்தோர்க்கு
பூவுலகில் மாமூலம் வந்தவர்க்கு
புதுமையொன்று யீசரன்மேல் பாணமாக
பாவித்து எவிவிட்டான் மதனவேள்தான்
சதுமைதனை யறிந்துசிவன் நெற்றிக்கண்ணால்
தனையெரித்தா ரக்கதையின் வாலார்தன்னை
இதுமைஇரு ளென்றுமுன்னோர் மூவர்கூடி
யெரித்துவிட்டார் கயிலைவெள்ளி திப்பூடென்றே. ()

என்றதிறல் திப்பூதி யென்றதாச்சு
ஈசுரன்றன் நெற்றிக்கண் ணொதித்ததாச்சு
அன்றதிருச் சேதம்வரு மென்றேசொல்லி
குருமுனி வல்லமைதன் குணத்தினாலே
அன்றதிறல் கயிலைதனில் முனிக்காச்சு
அப்பனே அதைநமவர் பரிக்கலாச்சு
தன்றவர்கள் வெள்ளிசொர்ண மாமென்றெண்ணி
நாட்டிலே பதினெண்பேர்க் கீய்ந்திட்டாரே. (307)

பதினெண்பேர்க் கீய்ந்திடவே பொதிகைதன்னில்
பார்த்தவர்க ளெல்லோரும் பார்த்துப்பார்த்து
விதிசொன்னோர் படிப்படியே செந்தூரங்கள்
விசகுளிகை ரசகுளிகை வெனவேனை
மதிதன்னை யுற்றவர்கள் வாதஞ்செய்து
மறைத்துவைத்தார் கிரியனையில் வரலார்யார்க்கும்
சதிதன்னை நூல்தோறும் படையாளத்தை
சாற்றினோர் லெக்குடனே சாற்றினரே. (308)

சாத்தினோர் பாவலினு சத்திலேதான்
சாயுட்சிய பதகிரியி னருவிமேலே
மாத்திரைப்போ தாகிலுமே பிரியாயோக
மார்க்கமுற்ற பேர்களுக்கே யெந்துதிலேதோற்றும்
ஆத்திரமாய் முன்முறையின் விதிதப்பாமல்
செபித்தவனே சபித்ததிதி சகத்திலேற
ஆத்திரமாய் தீயுமந்த நிறைமைத்தப்பி
அபகரிக்கில் கெடுமதியை அறிந்திடாயே. (309)

அறிந்திடுவாய் யம்மலையில் குகையில்காவ
லாகியதோர் வயிரவனை யப்பால்நிற்க
தெரிந்திடுவா யாமதில் பதினெண்பேர்கள்
தேடிவைத்த சகுமருந் தனைக்கேயீடு
பிரிந்திடுவா யரைவாசல் தொடியிற்காண்பாய்
பதப்பணியும் பூதகிணைச் சனமுன்னிறு
சொரித்திடுவாய் சகுரச மணிச்செந்தூரத்து
சொர்ணமய மின்னமுமே சொல்லக்கேளே. (310)



சொல்லக்கேள் பொதிகைதனி லிருந்தமூலம்
சொருபமய மருபமயந் தோன்றமார்க்கம்
அல்லக்கேள் கன்னிக்கா வடிக்குமேற்கே
அதுகடந்து காதவழி வடமேற்காக
கொல்லக்கார் வனக்காடு ஓடையொன்று
கொடியவனஞ் செடியடர்ந்த காட்டுக்குள்ளே
நல்லாகக் கார்முகில் மானம்போன்ற
நாடதிலே முனிதவஸ்து நயந்துபாரே. (311)

நயந்துபார் பொதிகைதனி லிருந்தபேர்கள்
நாடியிதை யறிந்துகொண்டு தனிவாசம்
பயந்தருகல் கன்னிக்கா வாடிக்காடு
பாப்பிரம வல்லாதிக ரென்றேயெண்ணி
செயந்தருகக் காளையார் கோவிற்காட்டில்
சிலபேர்க ளினவோர்கள் கூடிக்கூடி
அயந்தருத விரும்புசெம்பு அருபமாகி
அப்பனே அயன்விதியை விலக்கினரே. (312)

அயன்விதியை விலக்கினபே ரனபேருண்டு
அப்பனே காளையார்கோவில் காட்டில்
மயமிதனை யறியார்கள் உலகத்தோர்கள்
மாற்றமுற வொருவருக்குந் தோன்றமாட்டார்
பயனிதனை யெவரறிவார் திப்பூடெல்லார்
பார்தனிலே யாதொன்றுந் திண்டாதப்பா
செயமுறவே புத்தனுக்கு வெளியாய்ச்சொன்னேன்
செய்கைமுறை யிதுவல்லால் செந்தூரங்கேளே. ()

செந்தூரம்

செந்தூர முறையொன்று வழிதான்கேளு
செகத்திலுள்ள காமப்பால் மதனப்பாலை
வெந்தூர லானதொரு வெள்ளையுப்பு
வீட்டிலுள்ள கரியுப்பு விரோதம்போக்கி
தந்தூர லென்றும்பேர் கரியுப்பான
நயமுற்ற உப்பதிலே படிதான்வாங்கி
விந்தூர லறுகுருணி கடலைச்செயநீர்
வேண்டிவந்து பதினறு படிதான்கூட்டே. (314)

உப்பு.

கட்டப்பா பதினாறு பங்குவிட்டு
கூடியபின் னோராளின் பரிசமாக
மாட்டப்பா குழிவெட்டித் தகர்வெள்ளாட்டின்
மலமதனை யொருகோட்டை சரியாய்ப்போட்டு
நாட்டப்பா யிந்தமுறைப் படிநீர் தன்னை
நடுவிலே நாட்டிமலக் கவசமூட்டு
பூட்டப்பா யிருமூன்று மாதஞ்சென்று
பூட்டியபின் குழிதிறந்து யெடுத்துப்பாரே. (315)

எடுத்தப்பா வென்னசொல்வேன் இங்குசாலே
யித்தமுறைக் கொன்றுபோட் டிடவேயாச்சு
கொடுத்தப்பார் செந்தூரம் உமிழ்நீர்தொட்டு
குன்றுமலே யாகவெள்ளிக் குகையிற்சேரு
அடுத்தப்பா வென்னசொல்வேன் உலகத்தோர்க்கு
அப்பனே உத்தனுக்கு வெளியாய்ச்சொன்னேன்
விடுத்தப்பார் முருக்கமலர் மதுராமாச்சு
விடையமொன்று யின்னமுறை விபாங்கேளே. ( )

விபரமப்பா பதினெண்பேர் மறைத்தமார்க்கம்
விடையமதை நாமுனக்கு வெளியாய்ச்சொன்னோம்
அபரமப்பா வெளிதனிலே ரெண்டென்பார்கள்
அறுசுவையாங் கருமறைத்தல் வெளியாய்ச்சொன் [னோம்
உபரமப்பா வென்றுசொல்வா ரல்லகேளு
உத்தமனே வீட்டிலொன்றென் றுரைத்தார்பாரு
கபரமப்பா யீரெழுத்தாம் பனிரெண்டாச்சு
காரணத்தை யறிந்தவர்க்குக் கைகண்டாச்சே. (317)

கைகண்ட தின்னமொரு வகைதான்கேளு
கருவான இந்துப்பு தனித்துவாங்கி
மெய்கண்ட செயனீரை யெடுத்துக்கொள்ள
மிகுந்ததொரு சலவையிட்ட பீங்கான்தன்னில்
மைகண்ட ரவிபனிநீர் ரவியில்வைக்க
மைந்தனே செயநீருண் டாச்சுபாரு
தெய்கண்ட நடனராச கிரியின்கூத்தை
தூக்கியே சதுரம்நாற் கனகுசிபோடே (318



போடப்பா கடிகையொன்றில் சகடதாகப்
புளகிதமாய்த் திரட்சியுற்றுக் குதிகொண்டாடும்
ஆடப்பா கொப்பரையில் வங்கம்போட்டு
அனல்மூட்டு குளிகையிடு விஷத்தையுண்ணும்
கூடப்பா ரசதிலே எடுத்துக்கட்ட
சிவலோக அண்டசரா சரத்தைமூட்ட
ஓடப்பார் கெவுனமுறை மார்க்கஞ்சொல்ல
ஓர்துடிக்கி வாயடக்கி மூழியைமூடே (319)

மூழிமூடி நொடியொன்றில் நாயகாதம்
மூழிக்குமுன்னே கொண்டுசென்று மிடையில்நீயும்
தெளிவாடி மூழித்துவிட்டால் குறையங்கூக
தெளியாத கசவிருட்சம் யெதுவிலேனும்
பனிசாடிப் போட்டுவிடுஞ் சொன்னேனப்பா
பாவகத்தை யறிந்துகொள்ளு பதனம்பண்ணு
வனிகூடிக் கயிலைமலை தன்னைத்தேடி
வகுத்தபடி தொகுத்துவிடும் வாலார்தேரே. (320)

காரியவெள்ளி.

தேருவாய் தங்கையக்காள் சயனச்சாறு
தெரிந்துகொள் கொடியிலைவெத் திலையாமப்பா
பெருபெற்ற மூப்பூவின் வழலைதொட்டு
பிழிந்தெடுத்து வங்கமது உருக்கிச்சாய்க்க
வெறுமைய மென்னசொல்வேன் கண்விட்டாடும்
விளங்கியதோர் காரியம் வெள்ளிமாத்து
கூறுதனை யுரைத்தப்பார் சரிகைவெள்ளிக்
குணமதுதான் போதாது கொடியதாச்சே. (321)

ஆச்சப்பா போதொன்றில் வெள்ளியாச்சு
அப்பனே வாதநீர் கைக்குள்ளாச்சு
பேச்சப்பா யென்னசொல்வேன் இந்துப்பு
பெறுவதற்கு மாச்சலென்று யிலைச்சார்சொன்னேன்
மாச்சப்பா வொன்றுமில்லை ஞானிச்சார்க்கு
மைந்தனே தகுதியுற்று லணுநீயீந்து
காச்சப்பா காரியங் கொப்பரையில் நீயும்
கூய்ச்சியபின் முகத்தாத்து கனகமாத்தே. (322)

மாத்தப்பா சரிகைமாத் தருதாறென்ன
    மைந்தனே யிதந்துமொரு நிகர்தானுண்டோ
வைத்தப்பா யிப்படி நீ ஒன்றேபோதும்
    உத்தமனே வீரடங்கு மூருசெய்யாமல்
தாத்தப்பா யிதுகூத்து தருப்போலேயத்
    தனக்குண்டு உனக்கின்று வெளியாய்ச்சொன்னேன்
கூத்தப்பா யிதுகூத்து வேறொன்றில்லை
    கொடிதான வாதமுறை கூத்திதாச்சே. (323)

ஆச்சதப்பா மூலிகைகள் தொண்ணூற்றாறில்
    அப்பனே சன்னிக்குப் பதினெட்டேதான்
போச்சப்பா அவாலைக்கு மருந்தோக
    போக்கியே வாய்வுதுக்கு அறுநான்கேதான்
பூச்சப்பா வாதமுறைக் கொன்றேகேளு
    பூவுலகில் ஞானமூலி வனமூலியாச்சு
நீச்சப்பா தாயெனவே நிப்பூட்டென்று
    நிதகற்றும் வாதவஸ்து தெரிந்துகொள்ளே. (324)

தெரிந்துகொள்ளு மூலிகையில் மூப்பத்தஞ்சு
    நிதற்ற தயிலவகைக் கிதுவேயாகும்
அறிந்துகொள்ளு சோதிமா விருட்சமாச்சு
    அப்பனே நீற்றிணறு ஜாளியாச்சு
எறிந்துவிடு நீர்நீறும் பற்பமாச்சு
    என்மகனே யதுவிட்டால் திக்குசாவே
விரிந்ததப்பா நீற்றினத்தில் நீர்விட்டாப்போல்
    வெளுமையுற்ற பாஷாண பற்பங்காணே. (325)

காணப்பா பாஷாண பற்பந்தன்னை
    காண்பதற்குக் கைலாசச் செயனீர்விட்டு
ஊணப்பா வழலையுப்பு கைப்புப்போடு
    உத்தமனே பளிங்குக்கல் இரமதாச்சு
பேணப்பா குடக்கரியில் கல்விட்டாடும்
    பெற்றபே ருலகமதிற் பணமென்பார்கள்
வீணப்பா பலனாளும் பார்த்தபேர்க்கு
    விருதாவில் மறைந்தால்மயங் கிட்டாதே. (326)



கிட்டடா தென்றமைய மென்னமாட்டார்
    இருகிருத்து வகிரிகொண்ட பேயர்மூடர்
மூட்டடா தென்றவித மகிமைபோல
    முழுமோச மாய்வாத புடியழுதி
விட்டடா தென்றகிருக் கதுபோகத்தால்
    வீட்டிலுள்ள பொருள்களெல்லாம் விலையாய்விற்று
செட்டடா தென்றவிதி ஞாயநீதி
    செயல்மகிமை யென்னசொல்வேன் செத்தமாடே. ()

செத்தமா டென்றதிலுங் குணமொன்றுண்டு
    செகத்திலோர் ரோசனைக்கு விலையுமுண்டு
பித்தமா டென்றதுதான் பதினெண்ணூலில்
    பிடிபாடு அறியர்நூல் பிரட்டென்பார்கள்
கத்தமா டென்றதிலு மிருகால்மாடு
    கண்டதுண்டோ கருமறைத்தால் கவருத்தாசி
உத்தமா டென்றதிலும் விருதாமாடு
    உளவறிந்து கருக்தெரிந்தோ னரசன்தானே. (328)

அரசான ஆணரக பெண்ணாகமார்க்கம்
    அதுவறியான் பேயறிங்கி யிறங்குகிங்கி
மிரசான கெந்தகத்தைச் சிக்கிச்சாற்றில்
    மிகவூற்றிப் படாவியில் வைக்கும்போது
மூரசான வாதமுறை யாசின்சத்து
    மெழுகான மெழுகதனை முழுக்கோடேநீ
விரசான அதிரூப ரசத்தில்நீட்டி
    விரும்பியே உருக்கிடவே கனகமாச்சே. (329)

கனகமப்பா முன்முறையின் மார்க்கங்கேளு
    கைவளித்த மண்ணைதறைல் குடமொன்றேதான்
வினசமுருந் தாம்பூரத் தகடுபோல
    வேலையிட்டு லேசதாய்க் குடமதாக
சனகமுற்ற வெங்கலம்போல் ஓசைகொட்டி
    தனைப்பாரு தசிவறவே சலத்தைவிட்டு
தனகமயச் செந்தூர முறையின்மார்க்கம்
    தாக்குவாய் சமாதியிலே தகளிப்பாயே. (330)

தகனிக்க உரைக்கினேரே ராட்குநேராய்
தலைமறைய வெட்டியதைச் சுற்றியேதான்
சுகனிக்க மண்பூசி மெழுகியிட்டு
ஆரப்பா சாம்பிராணி நிதமுமிட்டு
அகனிக்கச் செவ்வரளிப் பூவும்போடு
அப்பனே மண்டலந்தா னாரப்போடு
உகனிக்க முன்முறையின் படிதீமூட்டு
உத்தமனே சத்துதிறை கனகமாமே. (331)

கனகமய மானதொரு செந்தூரத்தின்
காரணத்தை யென்னசொல்வே னுலகத்தோர்க்கு
சனகமதை போல்செபிக்க வழிதானித்த
சஞ்சீவி காமப்பால் மதனச்செயனீர்
இனகமுறுங் காலாறு வரலார்தன்னை
எடுத்துவைத்தோ மாமெனவே விரலிலேதான்
தினகமயங் கொண்டுருந்து மூடாக
தீனிலத்தி னுள்ளவர்க்கு நிகழ்த்துவாரே. (332)

வாரான உலகமதில் மனிதர்கோடி
வகையறிய மாட்டார்கள் மதனப்பூடு
ஆரான ஆத்தைநாம் கண்டோமென்பார்
அதற்காகக் குங்குமமண் புண்ணிப்பூசி
பாரான கல்லாரின் செயலீதென்ன
பரமவெளி யறிந்தவன்போல் கதிரம்பேசில்
காரான மேகமுகில் இருள்போலுற்ற
காட்டறிய மாட்டார்கள் உலகத்தோரே. (333)

உலகமதி லுள்ளவர்கள் கேதாரத்தில்
உற்றவர்கள் நினைக்கிலவ ருயிர்க்குச்சேதம்
விலகமதி யறியாமல் பதினெண்பேர்கள்
வித்தைபெற்ற கேதாரக் காட்டின்மூலம்
கலகமய மதனப்பால் கல்லார்தன்னை
கண்டதில்லை யில்லறத்தோர் கதைவீணப்பா
இலக்குதலாம் ரசகுளிகை கசடுண்டாகில்
எடுத்துவா அடுத்துவா வியல்புண்டாச்சே. (334)



இயல்புக்கு அதுமாச்ச லின்னங்கேளு
என்மகனே இப்பூடு வினையின்போக்கு
மயல்விதியின் ரசவாதி யென்றும்பேரு
வைத்தார்கள் பதினெண்பேர் மறைத்துப்போட் [டார்
செயலதனை முன்னமுநான் சொன்னேனப்பா
சிறுநெருஞ்சிப் பூமலர்ந்த ரச்சுண்டாச்சு
முயல்வலியின வலிப்புவந்து அழுந்தும்போது
மூலமது பிடுங்கிவைத்தால் முகர்ந்திடாயே. (335)

மூசுந்திவாய் முப்பத்தார் வலிப்புநோய்க்கு
மூலமது இப்பூடு வேரைநீயும்
செகந்தனிலே யவ்விடத்தின் வசமுற்றாக்கால்
சுவாசமுற்ற நாசியதில் வையுநேராய்
மிகந்தொருகம் பாலிடுக்கிப் பாய்புச்சித்தன்
மெடுத்தாடு மகிமையைப்போல் உரத்தோடவாய்
உகந்தனிலே அயன்விதியால் வலுப்பிறனே
உயிர்போக்கு மாலியந் தோடுவானே. (336)

ஓடுதற்கு யின்னமொரு வகைதான்கேளு
ஒத்திணங்கா றைசார வாசமலர்தன்னை
பாடுகிறேன் மறைத்தல்வெளி சிறமாறநீ
பார்தனிலே கள்ளிமுனை போலதாகும்
தேடுகின்றால் மூலமது பிடுங்கிநீயும்
இன்றுயர் புளிப்புமயம் நித்திப்பாகும்
கூடுகின்ற மலர்நேசம் பூயின்வாசம்
சொருபமய மருபசெயல் சித்துவென்றே. (337)

தூவென்ற பீநாற்ற வாசந்தங்கும்
துருவாச்சி தனையறிந்தா லதியருபம்
மாவென்ற நிமிளையதின் ரசத்திலேதான்
மைத்தனே நீ சிறமா னறிந்தாயாகில்
பூவென்ற மலைநீரில் வழலைதொட்டு
பிரட்டியே படாவியில் வைக்கும்போது
சாவென்ற அள்ளுகுட்டி சிறமாறலே
சத்தற்ற செந்தூரஞ் சாட்சிகேளே. (338)

சாட்சியென்ன சொல்லுவது உலகத்தோர்க்கு
சஞ்சீவி சிறுமான்குரு நிங்குசுப்பு
பூச்சியென்ன கல்விமய பூலகத்தோர்கள்
பூச்சியுட புலனறியார் பூச்சியென்பார்
காச்சியதைச் சத்தெடுக்க மாட்டார்மூடர்
கண்டறிந்து கண்கெட்ட குருடர்போலாம்
வாச்சியென்ன அறுகாதம் வாதவாச்சி
வகைதவிற வேறுவிதம் பெருவாய்கேளே. (339)

பெருவாயின் மிருகமதின் பீசந்தன்னைப்
பிடுங்கிவந்து அரைத்துருட்டிக் குகைதான்செய்து
குருவான முப்பூவின் வெள்ளைதொட்டு
குகைதனிலே ரசம்நாலு களஞ்சிவிட்டு
தருவான ஐந்தெருவிற் புடத்தைப்போடு
தாரணியில் திமிளைவெள்ளி போகபூகம்
திருவாகுத் துள்ளுருட்டி குருவாந்தெள்ளி
திறமறியச் செம்புக்கிப் பின்னுங்கேளே. (340)

பின்னுங்கேள் அரபொடியை ரவைதாதியில்
பிதற்றாதே கனகமயம் வயதிரைத்து
தன்னுயிர்போ லின்னூலைப் பதனம்பண்ணு
தாரணியி லித்தொழிலுக் கிணையேதப்பா
மன்னுயிரி லருதிபா தேசியோர்க்கு
மைந்தனே பேர்பாதி யன்னதானம்
மின்னுருமின் மயல்மாதர்க் களித்திடாமல்
மிடியவர்க்குப் படிமுறையின் தர்மஞ்செய்யே. (341)

தர்மமது பேர்பாதி செய்வாயப்பா
தாரணியில் கௌமதிநூல் முறையின்மார்க்கம்
வர்மமது சொன்னசொன்ன வகைகளெல்லாம்
வழிதெரிந்து வெளியறிந்தால் மறைத்துப்போடு
கர்மமது செய்யாதே உலகந்தன்னில்
காரிகையில் பொதுமாதர்க் கீய்ந்திடாதே
நல்மனதைக் கொண்டுநீ அறத்தைத்தேற்றி
நடத்திவாழ் தன்மைபெற நாட்டில்வாழே. (342)



நாட்டிலே வழக்கமற்ற தொருமூலத்தை
நயந்துகொள்ள உத்தமனுக்கு வெளியாய்ச்சொன்றே[ம்
காட்டிலே போய்ப்படிக்க வேண்டாங்கேளு
கடைதனிலொன் றையுரைத்தேன் கரியினுப்பை
ஏட்டிலே செவிக்குறு தேவிதங்கை
திருவருளாய் கொடிநாம்பில் திறந்துரன்பின்
கோட்டிலே தமக்கைதங்கை தளிர்சமனமென்ன
கூறியதோர் வெற்றிலைச்சார் கூர்த்துபாரே. (343)

கூர்த்துபா ராதமொரு விருகாமாத்தர்
கூறினதோர் பதினெண்பேர் வித்தையைக்கற்று
தேர்ந்துகொண்டு ஏடுதனில் எழுதாம்வாறு
தெரியாமல் ரசவாதஞ் செய்வோமென்பார்
சார்ந்துகண்டு பிடித்தவர்போல் தர்மமான
சண்டாள ரசவாதத் தயிலமாக்குவார்கள்
தீர்ந்துகொண்டு சார்பிழிந்து கரியினுப்பில்
தியெடுத்து உருக்கவுமாட் டார்கள்பாரே. (344)

உருக்கவே யின்னமொரு வகையைக்கேளு
உத்தமனே தங்கையக்காள் சமனச்சாறு
நெருக்கவே முப்பூவின் வழலைதொட்டு
நீநொருக்கிச் சார்பிழிந்து கரியினுப்பில்
பெருக்கவே விட்டரைத்து வில்லைசெய்து
பெரியகுழி வெட்டிநூ றெருவிலேதான்
செருக்கவே புடம்போடு செந்தூரமாச்சு
சிவந்தவொரு முருக்கமலர் போலவாச்சே. (345)

ஆச்சப்பா செந்தூரங் கனகமாச்சு
அப்பனே அனலெதிராச் சாக்குக்கெல்லாம்
காச்சப்பா முன்சொன்ன முறையினியால்
காரணத்தை யறிந்தவரா ருலகிலில்லை
பேச்சப்பா யேதுரைப்பே னுலகத்தோர்க்கு
பெத்தபேர் தொட்டதொட்ட சித்துக்கெல்லாம்
ஆச்சப்பா வகையப்பா நிகசுப்பால்
சிவயோக வாதகற்ப சித்திமுறைசெய்யே. (346)

பேடாட்சரம்.

சித்திமுறை செய்வதற்கோ ரட்சரத்தைக்கேளு
செவிக்குமுறை சத்திசிவம் ரெண்டொன்றாக
முத்திதரும் அகாரமதில் உகாரமகாரம்
முடிவதிலே சிகாரமதை வலத்திற்பத்தி
அத்தியெனுஞ் சித்தர்போல் சிவாயவென்று
ஆதிபரா பரைகுல மதத்துள்ளாக
சத்தியதோ ரெழுத்ததனை இடத்தில்மாற்றி
சத்திவந்து சிவமூல மகாரமுட்டே. (347)

மூட்டியதோ ரட்சரத்தின் விதியைக்கேளு
முத்திரைபோல் தலைகீழாய் மாறிப்பாரு
கூட்டியதோ ரெழுத்துமுறை அங்வங்கென்று
சூட்சமப்பா சாட்சியப்பா யோகத்தின்கூறு
காட்டியதோ ரெழுத்ததிலும் சிறீங்கிறீயும்
கண்டுதப்பா அந்தரங்கக் கவர்களெல்லாம்
பாட்டியல்பின் படியறிந்து முறைதப்பாமல்
பகர்ந்திடவே வெட்டெட்டு சித்தாண்டாச்சே. (348)

சித்திதப்பா திசைவிட்டால் வேறொன்றில்லை
செபந்தனிலே பிரணவத்தில் முறைகட்கெல்லாம்
அத்திதப்பா மந்திரவிதி மார்க்கமெல்லாம்
அப்பனே சர்வமும் மயங்கிப்போச்சு
சத்திதப்பா வகையுட் சாரமாச்சு
சற்குருவா மயிரெழுத்து மூலமாச்சு
சத்திதப்பா ஒன்றுமில்லை வழிக்குநேரே
சூட்சமப்பா உயிரெழுத்தைச் சொல்லக்கேளே. ()

சொல்லக்கே ளெத்தெழுத்து மிதற்குள்ளாச்சு
சோதிவெளி வீதிவெளி தோற்றம்பாரு
நல்லக்கேள் கூர்ந்தபார் வெளியாய்த்தோற்றும்
நாகரிக மானசுழி விதைவிட்டாக்கால்
அல்லக்கேள் பலபலவின் கதைகளெல்லாம்
அநுசரிக்கப் பலமுறைகள் யாதொன்றில்லை
வெல்லக்கேள் வசியமுதல் சித்தோடெல்லாம்
விளம்பினே னின்னமொரு விபரஞ்சேரே. (350)



சேரான வெழுத்தெல்லாந் தெரிப்பாரு
சித்தியென்ன சிதம்பரமும் புவனைவாலை
நேரான சத்திமய மாரணந்தம்பனமும்
நினைத்தபடி ஒருத்தன்பேர் நேரேசத்தி
கூரான படிநிறைந்து விபூதிதன்னில்
கூறுதற்கு சிறீந்தறீங் சிவாவென்றோது
போரான பேருபெற்றோ ருனைப்போலில்லை
பிரமவிதிப் படிமுறைப்போல் முடியலாச்சே. (351)

மூலிகைமர்மம்.

முடியான தொன்றுரைத்தே னாதுமூலம்
முடிக்குமுன்னே மூலிகையின் முடிவைக்கேளு
அடியான நந்திமூலங் கீழ்க்காய்நெல்லி
அறுகுபெருந் தும்பைபுப்பை மேனிக்கொத்தான்
கொடியான தகர்திண்டாப் பாலைகள்ளி
கெருதமப்பா திருகுகள்ளி கண்டங்கத்திரி
அடியான கைவேலை வெள்ளருகுமுருங்கை
ஆசியிலை மாசிதம்பேய்ப் புடுகேளே. (352)

பேய்ப்புடு ருபமற்ற தேளிமூலம்
பேருபெற்ற சிவகரந்தை பொன்னாங்காணி
தேய்ப்புடு அத்திகசி சிசம்தேசி
தேத்தான்தான் கருநொச்சி வெள்ளைக்காக்கான்
நாய்க்கொட்டான் தீதிலி பேயின்காட்டு
நற்பெரிய ஆமணக்கு ஊத்தியாகும்
சய்க்கட்டான் பழந்தின்னி பாலைவேம்பு
யென்மகனே யிருபத்தேழ் மூலமாச்சே. (353)

ஆச்சப்பா யின்னமுநீ சொல்லக்கேளு
அப்பனே ஆவரையில் வகைதான்ரெண்டு
சூச்சப்பா சிங்கிரெண்டு அரசில்ரெண்டு
சொன்னபடி மூன்றுமறை யின்னங்கேளு
மோச்சப்பா சுமோச்ச மூலமிஞ்சி
மூழ்மூலம் வசம்புதிப் பூடுவாகி
வீச்சப்பா அப்விரலி யிலைதான்சேர
விளம்பியதோர் வகைபத்து யின்னங்கேளே. (354)

இன்னுங்கேள் பெருவாயின் மிருகபீசம்
இசிவும்செட்டி நரிவிரட்டி காட்டுமூலம்
சொன்னபடி மதனப்பால் குருவின்பீடம்
சொல்லிவிட்டோங் கடலையிலை செடியின்மார்க்கம்
சன்னயிலை வங்கயிலை தாளிச்சாறு
சதிரக்கள்ளி யறுச்சார வாசமலர்ச்சி
என்னவிதி மதிபூதி முன்னேபாரு
என்மகனோ யின்னமுனக் கியம்புறேனே. (355)

இயம்புறேன் தாயுருவி வகைதான்ரெண்டு
இயல்பான வெருமையுற்ற கண்டங்காறி
கயங்கிருதி யானமன முருகுமில்லை
கூடான பேய்வழுதலை யெட்டி நாவல்
சயங்கிருதி ஆதாவலை மிளகுதக்காளி
சார்ந்தவகை யிருபத்து முன்சோறு
வியம்புகிறேன் இருதவகை சமஸ்தரூபம்
விடையமிட்டு அருந்திடவே விரும்புவாயே. (356)

விருப்புவாய் தாமரைதன் டகத்தின்கண்ணாம்
விஞ்சைபெற்ற பொற்சொன்னைபடிகதலியால்மேல்
செருப்புவா யடைந்திருக்கு முருகிப்பில்லு
செகத்தனிலே மூளைத்தமரு ஊமத்தாகும்
அரும்பொருளைப் பரிக்குபட மாதர்க்கென்று
அருளிவைத்த காசுருஞ்சி சிறுக்கிரெண்டு
எரும்பொழுகும் வான்குரி விஞ்சிசேர
இவ்வகைசஞ் சீவிமுறை யிருபத்தாச்சே. (357)

*... ... ... ... ...
... ... ... ...

தீச்சப்பா ராசாளி யிலையிற்கட்டு
தீர்நிமிளை கட்டுக்கொடி யிலைதானப்பா
மூச்சப்பா வெள்ளையெருக் கலையாங்காரம்
மூன்றுடாரி சங்குமுதல் சங்கங்குப்பி
சாச்சப்பா வெட்டிவேர் விலாமிச்சேதான்
சார்ந்தபார் வலம்புரிக்காய் பனிரெண்டாச்சே. ()

*இரண்டு வரிகள் எட்டில் கிழிந்திருந்தபடியால் அச்சிடவில்லை தெரிந்திருக்கும் கனவான்கள் எழுதிய னுப்பினால் அடுத்த பதிப்பில் அச்சிடலாகும்.



பனியான பனிதாங்கி பனிநீர்தாங்கி
பவுத்திரத்துக் குகத்தகொரு மனைவிகொல்லி
முனியான சிறுமூலத் தும்பிமூலம்
மூன்றுவகை வேலிகாய் மூன்று தும்பி
தனியான இடம்புரிக்காய் பூனைக்காலி
சதையொட்டி பாச்சட்டி மாலிராந்தி
இனிதான விஷ்ணுவின் கிராந்தி வெள்ளை
இவ்வகையில் பேர்பத்து மின்னங்கேளே. (359)

இன்னங்கேள் விளாவிருட்சஞ் சக்குதாரி
இவ்வாடை கைக்கலந் தொட்டால்வாடி
மின்னங்கார் குழல்மாதர் நீதமுற்ற
மிருதுவல்லி நாகமல்லி வெள்ளைநாவல்
சன்னங்கார் முசுகுமுட்டை கிரந்திநாயகஞ்
சஞ்சீவி செந்தொட்டி பனிஞ்சிசிந்தி
சின்னங்கார் நடைநிறுதி சிரியாநங்கை
சிறுசின்னி யேமைது ஒன்றுதானே. (360)

ஒன்றான பேய்ப்பீர்க்கு நாயின்பாகல்
ஒளிமெருட்டி கருகெருக்கா தலையில்வித்தம்
நன்றான நகரைபுலி நகத்தின்கொன்றை
நவமான நாகரூ சாளிமூலம்
குன்றுடு மலைதாங்கி விருட்சப்பாம்பு
கொடியயிலை நந்திவட்டஞ் சூரியகாந்தி
வென்றமை வாதமது மடக்கிவல்லது
விரும்பியதோர் குளிமீட்டான் விவரஞ்சேரே. (361)

விபரமப்பா தொண்ணூற்றி யாறுமூலம்
விஞ்சைபெற்ற பஞ்சாங்கத் தவளைப்பித்து
சுபரமப்பா தேசிமதம் வாசிபாதம்
கருநெல்லி திருவல்லி கருவிப்பூடு
அவரமப்பா பொக்கணைத்தான் சாவல்பித்து
ஆதுமதி சோதிரதி அளசிகஞ்சா
உவரமப்பா மண்டூகக் கொழுப்பு தன்டேன்
றுன்றத்துவிட்டார் பதினெண்பேர் உலகத்தோர்க்கே

உலகத்தி லிதைப்பிரித்து பதினெண்பேர்கள்
உரைத்துவிட்டு சபித்துவிட்டு மறைத்துப்போட்டா
விலகத்திவ் வாரிதெல்லாம் பேர்மாறாட்டம் [ர்
விசமித்தார் வசமுற்ற விதிநூல்கெல்லாம்
இலகத்தில் நடக்கவழி தெப்பம்போல
செகமதிலே கௌமதிநூல் திறவுகோலாய்
கலகத்தில் புதைபொருள்கட் கிதைநீயோட்டி
கண்டுகொள்வாய் யந்தாங்கம் வெளியதாச்சே. (363)

ஆச்சப்பா விராவிதத்தி யதனால்வாதம்
அப்பனே அதைமறித்து சபித்துப்போட்டார்
போச்சப்பா அதினாலே விருதாமுகம்
பூமிதனி லெட்டுரெண்டு மறிவாயாகில்
காச்சப்பா உயிரெழுத்துச் சிவனார்வேம்பு
காச்சுதற்கு அதுவல்லாமல் பிறர்க்கொண்ணில்லை
கூச்சமப்பா வகமறிந்து தொண்ணூற்றாறில்
சொன்னமதிக் கென்னகெதி யடக்கிக்கொள்ளே. ()

அடக்கியதோ ரந்திருதி யானமுலம்
அப்பனே இலகட்டுக் கொடியின்பத்திரம்
நடக்கியல்பு சொல்லுமுறை வகையைக்கேளு
நாடியதை நீபிடுங்கி யிலையைவாங்கி
முடக்கியல்பு சல்முடக்கி மேகம்போக்கி
மூன்றுபடி சலமதிலே விரலால்முன்று
அடக்கியே பிடித்துநீ சலத்திற்போடு
அப்பனே பன்னிரெண்டு பின்னுங்கேளே. (365)

பின்னுங்கேள் புத்திலே முளைத்ததாலு
பிடுங்கியே ஆரிய கிரணத்தன்னில்
மின்னுங்கார் வேர்க்கொம்பு கலைக்கொம்பாலே
மிருதுதவிர்த் தேபிடுங்கி மூலத்தோடே
மூன்றுங்கேள் பத்திரமது சலத்தைக்கட்டும்
முடிவதுபோ லொருநெடி நீ மூந்திதன்னில்
பொன்னுங்கார் பேதைதிரு மாதர்கையால்
பெரியமுட னல்லூற்றுக் குளிசங்கட்டே. (366)



கட்டப்பா கல்லரியனி யாதயின்னை,
கையாலே நால்நாற்றுக் கலத்தோர்நேமி
தொட்டப்பா கஸ்தூரி மஞ்சள் தன்னை
தொட்டரைத்து நாலதிலே தடவிவாங்கி
ஒட்டப்பா பிடுங்கியதோர் வேரைநீயும்
ஒட்டிடுவாய் கிரணவெளி யாருமுன்னே
ஆட்டப்பா வங்கியனை முகவிதாச்சு
அப்பனே சமுத்திரத்தில் கட்டலாச்சே. (367)

சமுத்திரத்தில் சமுக்காளத் தன்னை நீயும்
தாளிசையில் ஓர்நாலில் முடித்துப்போடு
அமுத்திடமாய் வேர்மயமும் வேர்வெட்டாது
அப்பனே உனையெதிர்த்த பேர்கட்கெல்லாம்
திமுத்திரமாய் சிரசதிலே யாருக்கொன்று
நீமுடித்து கொண்டிடவே செல்லும்போது
சமுத்திரமா யோடிவரு வார்களல்லால்
சுமைமனைத்துக் கசத்தனிலே தாழ்த்திடாதே. (368)

தாழ்த்திடுவார் தட்டோடி மறிக்கலொவார்
தனித்தகொரு குளிசமுற்றால் தானிந்தானே
வாழ்த்திடவே யொவ்வொருக ரனேகம்பேர்கள்
வடிவுபெற கொடுக்காங்கி நேரதாக
நிகழ்ந்திடவே முன்னின்று உத்தனபின்னே
நிறுத்தியே மடிபிடித்து நடத்துவாய்நீ
சூழ்ந்திடவே உனைவனைந்து திண்றிட்டாலும்
தொடுத்தபடி தவறாமல் அடக்கிக்கொள்ளே. (369)

தொடுத்தபிடிக் காயிரம்பேர் சூழ்ந்திட்டாலும்
அடங்கியதோர் பிடியதனை விட்டாலுன்றால்
கெடுத்தபடி பிரிவுவிட்டோர் தாழ்ந்துசாய்வார்
கெளிதமிது கௌமுறை போலதாச்சு
யெடுத்தமுறை தவறாமல் பிரவாகத்தில்
யிறங்கியே தருள்கடத்த ஓடலாச்சு
விடுத்தமுறை யொருவருக்கும் வெளிவிடாதே
விடையன்மே லானைநிசம் விளம்பினேனே. (370)

விளம்பியதோர் சலம்சத்துக் கொடியின்பத்திரம்
    விபரமது உற்றவகை திகரதாக
உளம்பியதோர் குருபசனை தங்காதுற்ற
    உருன்றிமினை விசித்திரசம் வீறுவாங்க
களம்பியதோர் காலிநஞ்சு மிருகமாற்று
    கடுவிசித்தி யெக்கடுரு கண்டபாறல்
குளம்பியதோர் வகைமாற்றம் மறைத்தல்தன்னை
    கூறுவோம் வகைவிபரம் கூர்ந்துகேளே. (371)

கூர்ந்துகேள் யெக்கடுரு சுபநேதி
    குறியதுதா னென்னசொல்வேன் யிடைமலாக்காய்மூ [ன்றுந்
தேர்ந்துகொள்ளு காயதனைக் கடுகின்காயுந்
    தெரிந்துகொள்ளு மூலமது சாறுவாங்கி
தீர்ந்துகொள்ளு நேர்நோய்த் திராசிலேதான்
    திருமருவு மருபவித்து நிமிளைதன்னை
சேர்த்துநீ குகையிலிட்டு ரவியில்வைத்து
    செலுத்திடுவாய் படரிரவி ரவியிற்றுனே. (372)

தானேதான் படரிரவி தன்னில்வைத்து
    தனித்ததிலே மூப்பூவின் வழலைகூட்டி
நானேதான் வெளியுரைத்தேன் முன்போற்பின்னும்
    நாடுமுறை கிட்டாட்டால் தேடுமார்க்கம்
யேனேநீ கூர்ந்துகேள் உலகத்தோர்க்கு
    யியம்பினே னதுதவிற யிந்தமூலம்
பூனேரித் திசைமால் மலரேநீலம்
    பூடறிந்து சூடறிந்து புகட்டுவாயே. (373)

புகட்டியே ரவியிலொரு சாமம்வைக்க
    புகழ்சிதமாந் திருஉரைநீள் ரசத்தின்கூறு
பகட்டியே மெழுகுருண்டை நிரமோதும்பை
    பால்மலர்போல் நிராமய மூற்றுக்காணும்
திகட்டியதோர் யெக்கடுரு நிமளைவீரு
    நின்றடக்கிக் கொன்றுவிடும் கண்விட்டாடும்
நகட்டியே பார்த்திடவே மெதுவாய்த்தோணும்
    நற்செம்பு சமனிடைசேர்த் துருக்கிப்பாரே. (374)



உருக்கியே பார்த்திடவே கனக்கேறுக்கு
    உத்தமனே அத்திமல ரதுபோதாது
நெருக்கியே உரைத்தப்பா யினைதானேது
    தீயறிந்து வெளியிட்டா லுயிர்தக்காது
சுருக்கியே யினையறிந்தால் மடக்கிப்போடு
    சூட்சாதி சூட்சமயந் சொல்லக்கேளு
மருக்கியே பொருள்புதிக்கும் பொறுமாதர்க்கு
    மைந்தனே நீயியல் வயனக்கேளே. (375)

வயனமது யென்னசொல்வேன் வேசையோர்கள்
    மயலிலகப் பட்டுஅவன் பேச்சுக்காக
அயனமைய மூற்றசிவ தனத்தையியில்
    அறிவுகெட்டு மதிமயங்கி ஆயுள்நிர்க்கம்
பயனவிதி குறைந்ததப்பா யீசர்க்கப்பா
    பார்தனிலே யிரைத்துதான் முகத்துக்காக
நயனமதா யுற்றபொரு ளின்றூல்தன்னை
    நாட்டில்விட்டா லுன்தேகம் நாசமாச்சே. (376)

நாசமப்பா யித்துமுறை வெளிவிடாதே
    நாடதிலே புள்ளபொது மாதர்தன்மேல்
நேசமூட்டி சிலைமட்டி முன்னிட்டாலே
    தீயவர்கள் பணம்பறிப்ப தல்லால்வேறு
மோசமூற்றுப் பேசாதே யின்னூல்தன்னில்
    முறையின்வகைப் படிதீயு மயங்கண்டாக்கால்
பாசமுற்றுக் கொடுத்திடுவாய் ஆறுல்கோடி
    பாவம்வரும் தேசமதும் பயனைக்கேளே. (377)

பயனைக்கேள் நாட்டிலுள்ள வேசையர்க்கு
    பார்தனிலே வாதவித்தை கண்கண்டோர்கள்
வியனைக்கேள் கொடுத்தவர்தன் கையிலேயே
    வேண்டியதோர் சதிபட்டு வினைவைத்தொட்டு
அயனைக்கேள் கட்பொருளும் பறித்துக்கொண்டு
    அவ்வேயவிட்டால் விலையவிட்டாள் அறிவுயின்றன்
புயனைச்சேர்த் தலைவந்து மதியின்மார்க்கம்
    புத்தியற்றுச் செத்திடவும் பிறித்தார்பாரே. (378)

பிறந்தவர்கள் கோடான கோடிபேர்கள்
பிரசன்ன வாதமுறை தெரிந்தோமென்று
திரிந்தவர்க ளனேகமுண்டு கைகண்டார்கள்
செகந்தனிலே யாருமில்லை சிவமொன்றாக
அறிந்தவர்க்கே சித்தியப்பா விதுதான்மெத்த
அருபமென்றே மொன்றுமில்லை யவர்க்குப்பின்னு
தெரிந்தமுறை யென்னசொல்வேன் மனமொன்றானால்
சித்தியப்பா தொட்டதொட்ட வஸ்துதானே. (379)

வஸ்துவென்ற வஸ்துவது மலையிலேது
வகையறிந்தால் திப்பூட்டு வழியிலேயது
அஸ்துவப்பா வென்றுரைத்தோம் சதுர்காண்டத்தில்
அப்பனே சுவர்னமென்றுங் கூர்தானென்றும்
மஸ்துவப்பா திரவியமாம் பாரம்போல
ரகசியமா யுற்றபொருள் நயத்தின்கூறு
மஸ்துவென்ற பரியேறல் யோகமார்க்கம்
மவுனமுறை யுற்றவர்கள் மயம்பெற்றாரே. (380)

பெற்றவர்க ளாயிருந்தோர் வெளிவிடார்கள்
பேறுபெற்றே ரெண்சித்தர்கள் பதினெண்பேர்கள்
கற்றவர்க ளெல்லோரும் மறைத்துப்போட்டார்
காரணத்தி லத்தாங்கள் கற்பத்தாலே
உற்றவர்கள் சொன்னதெல்லாந் தெளிவாய்க்காட்டார்
உலகமதிற் கௌமதிநூ லுண்மையாக
சிற்றவர்கட் கென்றுரைத்தேன் வெளியதாக
சிவனுணை யின்னமுற்ற சேதிகேளே. (381)

உற்றசெய்தி யின்னமொரு வகைதான்கேளு
உத்தமனே யென்னசொல்வே னிந்நூல்மார்க்கம்
பெற்றசெய்தி வகையைக்கேள் நாலிலொன்று
பூவுலகி லருதிபர தேசியோர்க்கு
மற்றசெய்தி விபரங்கோத் திரத்துள்ளோர்க்கு
மைந்தனே பாலகர்க்கோர் பக்குவமாய்
கற்றசெய்தி வெளியுரைத்தோம் வகையுஞ்சொன்னோம்
கன்னியென்ற வேசைமயல் கடந்திடாயே. (382)



கடந்திடுவாய் வேசையரை நஞ்சென்றெண்ணு
கண்மயல் கொண்டுவிட்டா லிந்நூல்தன்னில்
படைத்ததொரு வழிவிலகு மல்லால்வாய்த்தால்
பாலகரில் மூன்றுமுறைபோல் ஒருபங்கேவாய்
அடர்ந்துவருஞ் சிவதிருவை யயமென்றேதான்
தோணுமப்பா பரிகோடி யக்கினிமின்மூலம்
இடத்திடுக்கென் றறியாது மிசாபாதம்
திருவருளுஞ் சேரபொருள் சேவுக்கியே. (383)

சிவமான பாலகரில் சிறுவர்க்கித்து
செகந்தனிலே கூடிவினை யாடிநிற்பாய்
விசுவான வாசியிலே குளவிமார்க்கம்
விதியுற்ற பசியல்லால் மதிசுற்றில்லை
அசுவான வேசிக்கூர் நிலையேயல்லால்
அப்பனே பசுவொன்றுக் கேதுவாக
பசுவான அஞ்சவிதப் பசுவேயொன்றும்
பார்தனிலே ஒன்றுபட்டால் பலனுண்டாச்சே (384)

பலனுண்டோ வென்றுகேள் அசுவமார்க்கம்
பாலகரில் சிசுமனசு ஒன்றதாச்சு
பிலனுண்டோ அறிவுமய மெதுதானுண்டோ
பூவுலகி லவுமய முதலாயுள்ள
குலனுண்டோ சருவமய மெதுதானுண்டு
குழந்தைதனி லறிவுதெரி யாதாரென்று
புலனுண்டோ அதுவறிந்து அறிவிறேடே
புகழ்ந்துவினை யாடியிரு புலன்தான்கேளே. (385)

புலனப்பா விதுவொருதிட் டாந்திரமாக
பூவுலகில் பாலகர்கள் நால்கோபத்தால்
பிலனப்பா அழுகையது பிலனேயாச்சு
பிரிவுற்று அறிவற்றுப் பின்னுமற்ற
நிலனப்பா குழிகெள்ளி விளையாட்டாக
நிலைநிறுத்து வாரல்லால் மற்றேதுண்டு
குலனப்பா வேறுகுலம் வயதுமூன்றில்
குலங்களித்துச் சதுரத்தில் பிரிவுண்டாச்சே. (386)

பிரிவாத சிசுவுடனே பிரியமாக
புகழ்ந்துவினை யாடியபின் பிரியங்கேளு
தெரியாத தொன்றுமப்பா பகியேயொன்று
தெரிவதல்லால் மற்றொன்றுந் தெரியாதப்பா
அரியாத தொன்றுமில்லை யோகமார்க்கம்
அப்பனே அதையறிந்தால் விதியின்தீர்க்கம்
தரியாத தேகிருக்கு முலகந்தன்னில்
தனித்திருந்த வாதசித்தி தனத்தைக்கேளே. (387)

தனத்தைக்கேள் பாலகரி னழுகைமாற்ற
தனமீய்ந்து பலகாரந் தினம்நீயீய்ந்து
மனதைக்கே யொன்றுபட்டுப் பொருளீயாதே
மைந்தனே சிசுவென்று நினைந்திடாதே
சனத்தைக்கேள் வம்சத்திற் கருதியாக
தாரணியில் விரலவராய்த் திரிந்தபேர்க்கு
சினத்தைக்கேள் பேசிவைத்துத் திட்டிநீயும்
சீஷமுறப் பாசமற வைத்திடாயே. (388)

அற்றுவிடு மெத்தவு நீ யீய்ந்திடாதே
அப்பனே அமரவய தானால் நீயும்
சுற்றுவிடு மற்றதொரு ஆசையெல்லாம்
சுகாதினவே யென்னியதோர் தந்தைதாயும்
கொத்துவிடு பத்தஞ்சு கொடுத்துப்போக்கு
கொண்டுசென்று பின்னும்வந்தால் கூறக்கேளு
கத்துவிடு தடியெடுத்துக் கிடாவியோட்டு
கல்லெறிந்து துடர்ந்துவந்தா லோடிப்போமே. ( )

ஓடிப்போ யிதையறிந்து உனைவந்தேய்ப்பார்
ஓசையுற்று லோசைகற்ற வலகந்தன்னில்
தேடிப்போ யிரந்துநின்று யோகியாக
திரிந்துவிடு ஆசையெல்லாம் விட்டுநீக்கி
நாடிப்போய் கிரிமலையி லிருப்பீதேது
நமனென்ற பெயனென்று மறலியேது
கூடிப்போய் சிவகுருவை கூடுதற்கு
கூறாமல் வாய்மதியைக் கூறினேமே. (390)



கூறினே மாயிரத்தி யிருநூறுதன்னைக்
கூர்ந்துபார் ஓர்பாட்டில் வெளியாய்ச்சொன்னேம்
தேறினே மூன்றிலொன்று நாலதாக
தெரிந்தெடுத்து கௌமதிநூல் நானூறாக
மாறினேம் விதிமார்க்க முறைகளெல்லாம்
மறைதலொன்று மில்லையப்பா வெளியொப்பாக
ஏறினேந் சுவாசவெளி யேணியாக
என்மகனே சருவமயக் கதைநீகேளே. (391)

கதையான கதைகளிலே முன்னேழுண்டு
காரணத்தைக் கூர்ந்துபார் பதினுமுண்டு
புதையான புத்தபொருளு மதற்குளுண்டு
பூட்டகத் திறவுகோல் குவிசிரமுண்டு
அதையான பேர்களெவ ரறிந்தாரப்பா
அண்டசரா சரத்தின்மயல் மூலமார்க்கம்
குதையான வாசிநின் திறவுகோல்தான்
கொண்டுதொந் தேநீயுங் கூர்ந்துபாரே. (392)

கூர்ந்துநீ திறவுகோல்கொண் டேதானப்பா
கூறறிந்து தேறிந்து கொழுகிப்பாரு
தேர்ந்துநீ யோகவெளி மார்க்கத்தானை
தெரிந்தகதை வகையியாம் வெளியாய்ச்சொல்வோ [ம்
சார்ந்துநீ யிதையறிந்து பார்க்கும்போது
சகலசித்து அந்தரங்கம் சாட்சிகடகம்
சேர்ந்துநீ சிவகுருவை யறிவாயாகில்
செகந்தனிலே கௌமதிநூ லடக்கிப்போடே. (393)

அடக்குவா யின்னூலை வெளிவிடாதே
அப்பனே சரிதைமுதல் கிரிகையோகம்
அடக்கும்வா றென்னசொல்வேன் சகலசித்தும்
நாமுறைத்த நாருரைத்தார் ஞானமார்க்கம்
கடக்கும்வழி தெளிவுயேது யின்னூல்முன்னில்
கதையறிந்து வகைதெரிந்தால் கடந்தயோகி
அடக்குவா ரவர்கல்பம் மல்லிலப்பம்
தாசனித்து தவமிருவர் மறைத்தல்தேயே. (394)

நேரான கலையதனை நீதான்பாரு
    நிமிஷமப்பா கருமறைத்த துரைதானேது
சீரான தமிழ்மறைத்தல் குறைதானேது
    செகந்தனிலே வாதமயம் நாதமாயம்
சாரான மூலிகையில் முடிக்குஞ்சத்து
    சருவமய சிவயோக ஞானமார்க்கம்
கூரான கலைகளி ரெட்டிற்பாரு
    குருவான சிவகிருபை மயத்தைப்பாரே. (395)

மயத்தைப்பார் கலைவழியின் வெளியைப்பாரு
    மைந்தனே சரிகைமுதல் கிரிகைமார்க்கம்
செயத்தைப்பார் யோகமுதல் ஞானமார்க்கம்
    செல்லும்வழி செல்லும்விதி திறவுகோலாய்
கயத்தைப்பார் இருதயத்தில் பஞ்சபாணி
    சகலகொண்டு சிவகிருபை பிடித்தாக்கட்ட
சுயத்தைப்பார் அதிகார சுருபமூலம்
    சொல்லவொண்ணு ஆச்சரிய சூட்சமாச்சே. (396)

சூட்சமப்பா கௌமதிநூல் நாலுநூறு
    சுருக்கமதாய்ப் பதினாறு கலைக்குள்வாசம்
மாச்சலப்பா வொன்றுமில்லை வெளியாய்ச்சொன்னேன்
    மைந்தனே உலகமதில் வாதமேது
காச்சப்பா வெறித்துவிடு வெரிதோ அல்ல
    அவ்வழியின் மேர்வுதிதி பணுவுக்குள்ளே
மூச்சப்பா கடிகையொன்றில் முடிந்துபோச்சு
    முற்றுமப்பா கௌமதியின் நூல்தான்முற்றே. (397)

அகஸ்தியர் அருளிச்செய்த

## கௌமதிநூல் 400 முற்றிற்று.

குறிப்பு — என்னிடமிருந்த ஏட்டுப்பிரதியில் 397 பாட்டுகளிருந்ததைமட்டும் அச்சிட்டிருக்கிறேன்; இதைவைத்திருக்கும் கனவான்கள் வேறு பாக்கி பாட்டுகளை எழுதியனுப்பினால் சேர்த்து அச்சிடலாகும்.

இ. ராம. குருசாமிக் கோனார் வெளியீ.

## புலஸ்தியர் கற்பம்300.

இதில் கற்ப சாதனைகளின் விபரங்களையும் யோக ஞான மார்க்கத்தையும் அகார உகார விபரங்களையும் வாசி யோகஞ் செய்யும் முறைகளையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாகக் கூறியுள்ளது ஓலை யேட்டுப் பிரதியிலிருந்து அச்சிட்டது புத்தகம்1-க்குவிலை 0--10--0

அகஸ்தியர் பன்னீராயிரத்துக்குச் சூஸ்திரமான

## பன்னிருகாண்டம்.

இது அகஸ்தியர் பன்னீராயிரத்துக்குச் சூஸ்திரமாகப் பன்னிருகாண்டங்களாகப் பாடியுள்ள சாஸ்திரம் 1.-வது வைத்திய காண்டம் 2.-வது வாத காண்டம். 3.-வது சுண்ணக்காண்டம். 4.-வது செந்தூரக்காண்டம் 5.-வது பற்பகாண்டம் 6.-வது தைலக் காண்டம் 7.-வது கற்ப காண்டம். 8.-வது யோக ஞான காண்டம். 9.-வது தீட்சாவிதி காண்டம். 10.-வது சாபநிவர்த்தி காண்டம். 11-வது ஜாலகாண்டம். 13-வது மந்திர காண்டம். ஆக பன்னிருகாண்டம் சுருக்க சூஸ்திரமாயுள்ளது.

புஸ்தகம் 1-க்கு விலை ரூ 0—10—0.

மகா மகத்துவம் தங்கிய அகஸ்தியர்

## கற்ப முப்புக் குருநூல்.

இதில் கற்ப விதிகளும் முப்பு முடிக்கும் விபரமும் பற்ப செந்தூர கைபாகஞ் செய்பாக முறைகளும் சுண்ணம் மெழுகு தைலம் வாலை பூசை நாற்பத்தி மூக்கோண சக்கரத்தின் பூஜா விதிகளும் கற்ப தீட்சை முறைகளும் தெளிவாகச் சொல்லியுள்ள சாஸ்திரம்.

புஸ்தகம் 1-க்கு விலை ரூ 0—10—0

கு. இராமசாமிக்கோன், புக்ஷாப் புதுமண்டபம், மதுரை.

## இ. ராம. குருசாமிக் கோனாரவர்,

நீங்கள் வெகுகாலமாய் எதிர்பார்த்திருந்த

அ. சங்கரமூர்த்திக் கோனாரியற்றிய

# ஸ்ரீமத் பாகவத அம்மானை.

ஜதிகப் போட்டோப் படங்களுடன்.

என்னும் இத் தற்போது கவிதை கன்னான் விசேஷமும் ஸ்ரீமத்பாகவதத்தை [அ. சங்கரமூர்த்திக் கோனாரவர்கள்] அம்மானைப்பாவாக விசித்திர விநோதமாகவும் சொன்னயம் பொருணயம் முதலிய பத்துவித அழகும் பொருந்தக் கட்டமைத்த வெள்ளம் போல் பாடியுள்ளதை சுமார் இருபது வருடங்களுக்கு முன் அச்சிட்டு விற்பனையான பின்வேறு காலமாகப் புத்தகம் இல்லாதிருந்ததால் இப்பொழுது அந்த பாகவதஅம்மானையை அக்காலத்து போட்டோப் படங்களுடன் அதியில் ஏற்பட்ட புத்தகப்படியே 10, 11, 12, ஸ்கந்தங்கள் முடிய கல்கத்தாவில் அத்தப்பதிப்பாக முழுதும் அச்சிட்டு 400 பக்கங்களைக் கொண்ட பெரிய புத்தகமாய் கலிக்கோ பயிண்டு செய்து வெளிவந்துவிட்டது புஸ்தகம்1-க்கு விலை ரூபாய் 2—0—0

---

அருணகிரிநாத சுவாமிகளா லியற்றிய

# பெரிய கந்தரநுபூதி.

அருணகிரி நாதசுவாமிகள் ஸ்ரீசுப்பிரமணியக் கடவுள் வரப்பிரசாதத்தினால் பாடப்பெற்று தன் எண்ணப்படி காரியம் சித்தி யடைந்த, சாஸ்திர சித்தவேயாகும். இப்புத்தகத்திலடங்கிய பாடல்களைத் தினந்தோறும் ஒரு முறை மனதில் தியானம் செய்து வருவீர்களானால் சுப்பிரமணியர் கிருபா கடாட்சமும், ஐசுவரியமும், கீர்த்தியும் நீண்ட ஆயுளும் பெற்று வாழ்வீர்களென்பதற்குச் சந்தேகமில்லை. மூலமந்திர சக்கர பூஜா விதிகளுடன் கூடியது புத்தகம் 1-க்கு விலை அணா 0—1—0

---

குரு. இராமசாமிக்கோன் புக்ஷாப் புதுமண்டபம் மதுரை.

உ

பரமபதி துணை.

பச்சிலை மூலிகைகளின் தமிழ்

# சித்தவைத்திய அகராதி

இதில் பச்சிலைகளின் பரிபாஷைப் பெயர்களையும், கடைச் சரக்குகளின் பரிபாஷைப் பெயர்களையும், இருபத்தைந்து உப்புவகை இனங்களையும், உபரசம் சரக்குகளின் விபரத்தையும், வகாரம், செந்தூரம்செய்ய சரக்குகளின் உருக்கினை சத்துருமித்துருவையும், உபரசச் சரக்குகள் 120க்கும் பரிபாஷைப் பெயர்களையும், புளியாரும் சரக்குகளின் விபரத்தையும், 64-பாஷாணங்களின் பெயர்களையும். அவைகளின் சத்துரு மித்துருவையும், பஞ்சபூதச் சரக்குகளின் பரிபாஷைப் பெயர்களையும், திகண்டுகளின் பரிபாஷைபெயர்களையும்விபரமாய்க் கூறியுள்ளது இப் புஸ்தகத்தை சித்தர் நூல்கள் ஆராய்ச்சிசெய்வோர்களும், வைத்தியஞ்செய்ய ஆரம்பஞ் செய்வோர்களும், முக்கியமாய் இதை வாங்கிப் பார்க்க வேண்டியது அவசியமாகையால் ஒவ்வொருவரும் வாங்கிப்பார்த்துப் படித்து இதின் உண்மையை அறிந்து மருந்துகள் செய்து பயனடையக் கோருகிறேன். 280-பக்கங்கொண்ட கலிக்கோபயின்டு புத்தகம் 1-க்கு விலை ரூ 1—8—0

---

பதினெண் சித்தர்களில் ஒருவராகிய

# இராமதேவர் வைத்திய காவியம் 1000

இதில் கற்பமுறைகளும், சத்துரு மித்துருச் சரக்குகளும், தைலமுறைகளும், வைத்தியமுறைகளும், அஷ்டகர்ம விபரங்களும், கரு விபரங்களும், பஞ்சபூதங்களின் விபரமும், பற்பசெந்தூரம், சுண்ணம் செய்முறை பாகங்களும், அஷ்டாங்க யோகமுறைகளும், ஞானங்களும் விபரமாய்க் கூறியுள்ளது. விலை 1—0—0

---

குரு. இராமசாமிக் கோன், புக்ஷாப் புதுமண்டபம் மதுரை

# காகபுசண்டர் 1000

## பெருநூல் காவியம்

18-சித்தர்களில் ஒருவராகிய புசண்ட மகாரிஷி என்பவர் பிரளய காலத்தில் கல்லாலின்மேல் இருந்து ஒவ்வொரு பிரளய காலமும் பார்த்துவந்தவர். இவர் அநேகசாஸ்திரம் பாடியிருக்கிறார். ஆனால் இதுவரை சில சாஸ்திரமட்டும் அச்சுக்கு வந்திருக்கிறது. அவர்பாடியதில் முக்கியமான இப்புசண்டர் பெருநூல் காவியம் 1000. இதுவரை ஏட்டுப்பிரதியாயிருந்து இப்போதுதான் புதிதாக அச்சிட்டிருக்கிறது. இதில் வைத்தியம், வாதம், யோகம், ஞானம், அமுதசாரணை இன்னும் அநேக மர்மங்களும் அடங்கியுள்ள சாஸ்திரம். 250-பக்கங் கொண்ட கலிக்கோ பயிண்டு. விலை ரூ 1...8...0

## கொங்கணர் நடுக்காண்டம் 500

கொங்கணர் பாடியுள்ள முக்காண்டம் 1500 வில் கடைக்காண்டம் 500 கிடைத்ததை மாத்திரம் அச்சிட்டு விற்பனையாகி வருகிறது யாவரும் தெரிந்தவிஷயம். பாக்கியுள்ள முதல்காண்டம் 500ம், நடுக்காண்டம் 500ம் வெகுகாலமாகக் கிடைக்காம லிருந்து இப்பொழுது ஒரு ஏட்டுப்பிரதி நடுக்காண்டம் 500 மாத்திரம் கிடைத்தது. அச்சிட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. அநேக கனவான்கள் பார்க்கவேணுமென்று எதிர்பார்த்திருந்த அரிய சாஸ்திரங்களில் இதுவும் ஒன்றேயாகும். புத்தகம். 1-க்கு விலை அணா 0—12—0

17-சாஸ்திரம் அடங்கிய இராமதேவரென்ற யாகோபு

## வைத்திய வாத கோர்வை

இராமதேவ ரிஷியாக இருந்தபின்பு மக்காவுக்கு சென்று நபிமார்களுடன் பேசி அவர்கள் இவர் திறமையையும் சாஸ்திர ஆராய்ச்சியும் தெரிந்து யாகோபு என்று பெயர் கொடுத்தார்கள் பின்பு யூனானிமுறைகளையும், தமிழ் முறைகளையும் கவனித்து அநேக வைத்தியங்களும், வாதம், யோகமுறைகளும், ஞானமும், காடி விபரமும், சரக்குச்சுத்திகளையும், 17-சாஸ்திரங்களாகப் பாடியிருக்கிறார். இந்த சாஸ்திரத்தை அநேகர்வாங்கி ரொம்ப அநுபவ முறையாகக் கையாண்டு வருகிறார்கள் 17-சாஸ்திரம் சேர்ந்த கோர்வை கலிக்கோபயிண்டு விலை ரூ 9—0—0

இந்தப் பதினேழு சாஸ்திரங்களையும் பனிரெண்டு புஸ்தகங்களாகத் தனித்தனியாயாக அச்சிட்டிருப்பதால் வேண்டியவர்கள் தனித்தனி பிரதியாகவும் கிரயத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

குரு. இராமசாமிக் கோன், புக்ஷாப் புதுமண்டபம் மதுரை.



பதினெண் சித்தர்களில் ஒருவராகிய

# திருவள்ளுவர்கற்பம் 300

இதில் நாதாந்தசாரம் 100. கற்பக்குருநூல் 50. முப்பு சூஸ்திரம் 30. வாத சூஸ்திரம் 16. முப்புச்குரு 11, வைத்தியசூஸ்திரம் 100 ஆக 17-சாஸ்திரங்கள் அடங்கியது. திருவள்ளுவர் பாடிய ஞானவெட்டி 1500க்கு சூஸ்திரமாகப் பாடியுள்ள சாஸ்திரம் இதுவேயாகும். இதில் குருமுடிக்கும் பாகங்களும், செயநீர் முடிக்கும் பாகங்களும் பூதீர் விபரங்களும், அபூர்த தாரணையின் அட்டமும். முப்பூ இன்னதென்ற விபரமும், வழலை மார்க்கமும் மிகத் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது.

புத்தகம் 1-க்கு விலை ரூ 0—14—0

பதினெண் சித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய விஷவைத்திய மென்னும்

# " ஒன்பதுவிஷ ஆருடம் "

இதில் ஒன்பது விதமான சாஸ்திர ஆருடங்களைச் சேர்த்து ஒரே புத்தகமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. பாம்பு. தேள், கட்டுவாக்காலி, பூரான், செய்யான், வண்டு, அரணை, எலி, நாய்,குரங்கு, பூனை, முதலானவைகள் கடித்து விஷமேறப்பட்டால் பச்சிலை மூலிகைகளினாலும், கடைச்சரக்குகளினாலும், விஷத்தை நீக்குவதற்குஇலகுவான முறைகளாய்ச் சமயோசிதம்போல் செய்வதற்கான விதமாய்க் கூறியிருப்பதோடு மந்திர யந்திர பூஜாவிதிகளும், விபரமாய்ச் சொல்லியிருக்கிறது எமது மூதாதைகள் கையாண்டு அநுபவித்துவந்த சாஸ்திரம். சுத்தப் பதிப்பு 392-பக்கங்கள் கொண்ட கலிக்கோ பயிண்டு.

புஸ்தகம் 1-க்கு விலை ரூபாய் 1...8...0

குரு. இராமசாமிக் கோன், புக்ஷாப் புதுமண்டபம் மதுரை.

பதினெண் சித்தர்கள் திருவாய் மலர்ந்தருளிய

வைத்திய வாதயோக

# ஞான சாஸ்திரத் திரட்டு

வெகுகாலமாக அச்சுக்கு வராமல் இருந்ததும், அநேக ஏட்டுப் பிரதிகளில் புதைபொருளாய்க் கிடந்ததும் பதினெண் சித்தர்களால் பாடிய அநேக நூல்களை ஆங்காங்குபோய்ச் சேகரித்துக் கொண்டுவந்து பாகம் 1க்கு சுமார் 270-பக்கங்களாக 10-பாகங்கள் அச்சிட்டிருக்கிறது. இதில் வைத்தியமும்; வாதமும்; யோக ஞான மார்க்கம் அடைவதற்கு [illegible] சாதனங்களும்; யோக அப்பியாச முறை[illegible]களும்; தீட்சை விதிகளும் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது. நயம்பதிப்பு கலிக்கோ பயின்டு [illegible] பாகம் 1-க்கு விலை ரூ. 1—8—0

118102

இதுவரையில் அச்சில் பிரசுரமாகாத புதிதாக அச்சிட்ட

# அகத்தியர் பூரணம் 1200

இந்நூல் ஞானம், யோகம், இன்னதென்று அவரவர்களே எளிதாகக் கற்றுக்கொள்வதோடு தன்னைத்தானறிந்து ஞான யோக சாதனையடைந்து வெகுகாலம் ஜீவித்திருக்கவும், கற்பதேகி யாகவும், அநேக வைத்தியம், வாதம், சத்துரு-மித்துரு விபரங்கள் சொல்லியுள்ள புதிய சாஸ்திரம். கலிக்கோ பயின்டு விலை ரூ 1—8—0

இ. ராம. குருசாமிக் கோனார் ஸன்:

புத்தகஷாப், புதுமண்டபம், மதுரை.